REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜனவரி 23 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 19 | Monday 23, January, 2023 | 16 பக்கங்கள் | 50/-

உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வேட்புமனு;

## 15 மாவட்டங்களில் சுமார் 100 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நிறைவுற்றுள்ள நிலையில் 06

## GCE (A/L) பரீட்சை இன்று ஆரம்பம் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி

- 2,200 பரீட்சை நிலையங்களில் 3,31,709 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.
- விசேட ரயில், பஸ் போக்குவரத்து ஏற்பாடுகள்
- மாணவர்களுக்கு பத்து நிமிட மேலதிக நேரம்

லோரன்ஸ் செல்வநாயகம்


கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளதுடன் நாடளாவிய 2200 பரீட்சை நிலையங்களில் பரீட்சைகள் நடைபெற 06

இன்று முதல் பெப். 17ஆம் திகதி வரையான

## A/L பரீட்சை காலத்தில் மின்துண்டிப்பு நிறுத்தம்

பரீட்சை ஆணையாளர் நேற்று தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



க.பொ.த. உயர்தர பரீட்சை நடைபெறும் காலத்தில் மின்சாரத்தை துண்டிக்கவேண்டாமென பரீட்சைகள் திணைக்களம் விடுத்த வேண்டுகோளுக்கு மின்சார சபை 06

## 13ஆவது திருத்தத்தை முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் அரசு அக்கறை




அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். தமிழ்த் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகள் முன்னேற்றகரமாக இடம்பெறுவதாகவும் பிரச்சினைகளுக்கு தீர்வினை அளிக்க 06

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) மூலமான உதவித்திட்டம்;

# கடன் மறுசீரமைப்புக்கு சீனா இலங்கைக்கு ஆதரவு



- நிதியமைச்சுக்கு சீன ஏற்றுமதி, இறக்குமதி வங்கி எழுத்து மூலம் அறிவிப்பு
- IMF க்கும் சீனா எழுத்து மூலமாக நேற்று அறிவித்துள்ளது

லோரன்ஸ் செல்வநாயகம்

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கைக்கு ஆதரவு வழங்குவதாக சீனா அறிவித்துள்ளது.

சீனாவின் ஏற்றுமதி இறக்குமதி வங்கியானது நிதியமைச்சுக்கு அது தொடர்பில் எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, இலங்கைக்கான கடன் மறு சீரமைப்பு தொடர்பில் சீனாவின் நிலைப்பாட்டை நேற்று சீனா சர்வதேச நாணய நிதியத்திற்கு அறிவித்துள்ளதாகவும் எழுத்து மூலமாக அதனை சீனா சர்வதேச நாணய நிதியத்திற்கு அனுப்பியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை, கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை அரசாங்கம் சீனாவுடன் மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பில் தெரிவித்துள்ள திறைசேரியின் செயலாளர் 06

ஆணைக்குழு உறுப்பினர்களை அச்சுறுத்திய

## ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு

பொது பயன்பாட்டு ஆணைக்குழு நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

கொள்ளுப்பிட்டியில் நடைபெற்ற பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தின் போது அதன் உறுப்பினர்களை அச்சுறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்வதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். 06

## ரயிலுடன் ஆட்டோ மோதி விபத்து

ஒருவர் ஸ்தலத்தில் பலி



மாத்தறை வெலிகமவில் காலு குமாரி கடுகதி ரயில் ஆட்டோ வண்டியுடன் மோதி நேற்று காலை விபத்து ஏற்பட்டுள்ளது. இந்த விபத்தில் ஆட்டோ வண்டியில் பயணித்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார். இந்த விபத்து நேற்று (22) காலை 6.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

## தேர்தலை நடத்துவது, பிற்போடுவது தேர்தல் ஆணைக்குழுவின் கைகளில்

தீர்மானத்தை எடுப்பது அவர்களே என்கிறார் நீதியமைச்சர்



உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது, பிற்போடுவது தொடர்பான தீர்மானத்தை தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு எடுக்க வேண்டும் என அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கொழும்பில் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், தேர்தல் நடவடிக்கையில் அரசாங்கம் தலையிடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 06

## நுவரெலியாவில் UNPயுடன் இணைந்து போட்டியிடும் CWC

அனைத்து சபைகளிலும் வெற்றி என்கிறார் ராமேஸ்




எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் இணைந்து போட்டியிட வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளதாக தொழிலாளர் காங்கிரஸின் நிதிச் செயலாளரும் 06



இந்தியாவின் கடன் உதவித் திட்டத்தின் கீழ் இலங்கை போக்குவரத்து சபைக்கு 32 ஆசனங்களைக் கொண்ட 500 பஸ் வண்டிகள் கையளிக்கப்பட்டுள்ளன. இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் கலாநிதி எஸ். ஜய்சங்கர் போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவிடம் (20) உத்தியோகபூர்வமாக இதனை கையளித்தார். இந்நிகழ்வில் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## எவரையும் கட்சியிலிருந்து நான் விரட்டியது கிடையாது

SLMC தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் என்ற வகையில் யாரையும் கட்சியிலிருந்து நானாக விரட்டியது கிடையாது என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம். எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வை கட்சியில் 06

## இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் ஊக்குவிக்கப்படும்

இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உறுதி



இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பாக எரிசக்தி, சுற்றுலா மற்றும் உட்கட்டமைப்பு போன்ற முக்கிய துறைகளில் குறிப்பிடத்தக்க முதலீடுகளை இந்தியா மேற்கொள்ளும் என இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் தெரிவித்தார்.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியுடன் இணைந்து செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற ஜெய்சங்கர், "இலங்கையின் 06



தூர அளவுடன் நேர காலத்திற்கும் மட்டுப்பாடு;

### மாணவரது கல்விச்சுற்றுலாவுக்கு கட்டுப்பாடு விதித்து சுற்று நிருபம்

கல்வியமைச்சு கவனம் செலுத்தி நடவடிக்கை

03


ஈஸ்டர் தாக்குதல் நடந்து 45 மாதங்கள்;

## சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பது எப்போது எனக்கேட்டு ஆர்ப்பாட்டம்



நீர்கொழும்பு கட்டுவபிட்டியில் மக்கள் போர்க்கொடி

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு 45 மாத நினைவு நாளான 21 சனிக்கிழமையன்று "நஷ்டஈட்டு பணத்தின் ஊடாக உண்மையான 06



உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கான

### வாக்குச் சீட்டு தயாரிக்கும் பணிகள் நேற்று ஆரம்பம்!

03



### அரசியலமைப்பு அங்கீகாரத்தை கோரி ஆதிவாசிகள் முறைப்பாடு

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மனுத்தாக்கல்

03

தினேஷ் ஷாப்டர் படுகொலை;

## CID விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுப்பு

அடுத்த சில நாட்களில் முக்கிய தகவல்கள்



பிரபல தமிழ் வர்த்தகர் தினேஷ் ஷாப்டர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டமைக்கான மூல காரணத்தை வெளிக்கொணர இரகசிய பொலிஸ் விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என 06

## குருநாகல் மாநகர மேயர் பதவி நீக்கம்!



குருநாகல் மாநகர முதல்வர் துஷார சஞ்சீவ விதாரணவை அப்பதவியில் இருந்து நீக்கி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் ஒஃப் ப்ளீட் வசந்த கரண்ணாகொடவினால் இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டுக்கான வரவு 06

நானுஓயாவில் இடம்பெற்ற கோர விபத்து;

## உயிரிழந்த குடும்பத்தவர்கள் ஐவரது உடல்கள் நல்லடக்கம்



நள்ளிரவுவேளை

ஊரே சோகம்

06




மிடில்டன் தோட்ட தீ விபத்து:

# வீடுகளை புனரமைத்து மீள்குடியமர்த்த நடவடிக்கை

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

தலவாக்கலை, மிடில்டன் தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வீடுகளை உடனடியாக புனரமைத்து, அவர்களை மீள்குடியமர்த்த நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்தார்.



தலவாக்கலை, மிடில்டன் தோட்டத்துக்கு நேற்று கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடியதுடன். அவர்களுக்கு ஆறுதலும் கூறினார். அத்துடன், அவர்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

அதேவேளை, இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுக்குமாறு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் மற்றும் தோட்ட நிர்வாகத்துக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் பணிப்புரை விடுத்தார்.

மிடில்டன் தோட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 07 வீடுகள் முற்றாக தீக்கிரையாகின.05 வீடுகள் பகுதியளவு சேதமடைந்தன. சுமார் 49 பேர் பாதிக்கப்பட்டனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல்;

# பதுளை மாவட்டத்தில் 11 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பதுளை மாவட்டத்திலுள்ள சபைகளுக்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களில் 11 நிராகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி உட்பட 8 அரசியல் கட்சிகளினதும், 3 சுயேட்சைக் குழுக்களினதும் வேட்பு மனுக்களே இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளன.

பதுளை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஊடக சந்திப்பின்போதே மேற்படி தகவல்கள் வெளியிடப்பட்டன.

பதுளை மாநகரசபை, பண்டாரவளை மாநகரசபை, ஹப்புத்தளை நகரசபை உட்பட பதுளை மாவட்டத்தில் 18 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இவற்றுக்கு போட்டியிடுவதற்கு அரசியல் கட்சிகளின் சார்பில் 154 பேரும், சுயாதீனக் குழுக்களின் சார்பில் 30 பேரும் கட்டுப்பணம் செலுத்தினர். 163 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் 11 நிராகரிக்கப்பட்டு, 152 வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பதுளை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரி தெரிவித்தார்.

ஹாலிஎல பிரதேச சபைக்காக இ.தொ.கா தாக்கல் செய்த வேட்பு மனுவும், ஊவா பரணகம பிரதேச சபைக்காக எக்சத் மஹாஜன பக்சய தாக்கல் செய்த வேட்புமனும் நிராகரிக்கப்பட்டன.

அத்துடன், எல்ல பிரதேச சபைக்காக சுயாதீன அணியொன்று தாக்கல் செய்த வேட்பு மனுவும், ஹப்புத்தளை பிரதேச சபைக்காக இ.தொ.கா தாக்கல் செய்த வேட்பு மனுவும், சுயாதீன அணியொன்றின் வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ஹல்துமுல்ல பிரதேச சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சி, தேசிய ஜன நாயக முன்னணி மற்றும் சுயாதீன அணியொன்று தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மஹியங்களை பிரதேச சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுயாதீன அணியொன்று தாக்கல் செய்த வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.





மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் பாடசாலை, பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களிலுள்ள பிள்ளைகளுக்கு சமூக உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய லூல்கந்துர தோட்டப் பாடசாலையில் இத்திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்டமிடல் அதிகாரி லோகேஸ்வரி,அதிபர் ஆர். மகேந்திரனிடம் இதற்கான உணவுத் தானியங்களை வழங்கி வைப்பதை காணலாம். படம். மாவத்தகம தினகரன் நிருபர்

# நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதி தற்காலிகமாக மூடல்

**தலவாக்கலை குறூப் நிருபர்**

நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியின் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியை (21) முதல் தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வீதியில் கடந்த (20) இரவு பஸ், வேன் மற்றும் முச்சக்கரவண்டி ஒன்றுடன் ஒன்று மோதியதில் ஏற்பட்ட விபத்தில் 7 பேர் பரிதாபமாக உயிரிழந்ததையடுத்து பொலிஸார் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வீதியை தவிர்த்து மாற்று வீதியாக டெஸ்போர்ட் ஊடான சுற்றுவட்ட வீதியை பயன்படுத்துமாறு பொலிஸார் வாகன சாரதிகளை கேட்டுக் கொண்டுள்ளனர்.



மனித அபிவிருத்தி தாபனத்தின் ஏற்பாட்டில் இலங்கை பெருந்தோட்டங்களின் உணவு பாதுகாப்பு மற்றும் உணவுக்கான உரிமை திட்டத்தினுடாக உலருவுணப் பொதிகள் வழங்கும் வைபவம் லூல்கந்துர வெல்லோயா மேல்பிரிவில் மனித அபிவிருத்தி தாபனத்தின் திட்டமிடல் அதிகாரி லோகேஸ்வரி தலைமையில் நடைபெற்ற போது,..

# இரத்தினபுரியில் 6 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக இரத்தினபுரி மாவட்டத்தில் தாக்கல் செய்யப்பட்ட 140 வேட்பு மனுக்களில் 134 வேட்பு மனுக்கள் மட்டுமே ஏற்று கொள்ளப்பட்டு 6 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டதாக இரத்தினபுரி மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர் வசந்த குணரத்ன தெரிவித்தார். இரத்தினபுரி புதிய நகரில் அமைந்துள்ள இரத்தினபுரி மாவட்ட செயலகத்தில் தெரிவித்தாட்சி அலுவலர் முன்னிலையில் இந்த வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. உள்ளூராட்சி தேர்தலுக்காக இரத்தினபுரி மாவட்டத்தில் அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களில் இருந்து 148 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் 140 வேட்பு மனுக்கள் மட்டுமே தாக்கல் செய்யப்பட்டன.

நானுஓயா விபத்தில் மரணித்த 05 பேரின் சடலங்கள்;

# ஹற்றன் டிக்கோயா ஜும்மா பள்ளிவாசல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டன

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

நுவரெலியா ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா ரதெல்ல குறுக்கு வீதியில் இடம்பெற்ற பஸ் வேன் மற்றும் முச்சக்கரவண்டி மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு வீட்டுக்கு கொண்டு வரப்பட்டன.

அதன்படி, வேனில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை, இரண்டு மகள்கள் மற்றும் மருமகன் ஆகியோரின் பூதவுடல் நள்ளிரவு 12:10 மணியளவில் ஹற்றன் டிக்கோயா ஜும்மா பள்ளிவாசலுக்கு கொண்டு வரப்பட்டது. இறுதி அஞ்சலி செலுத்த அந்த இடத்தில் ஏராளமானோர் திரண்டனர். பள்ளிவாசலில் சடலங்கள் வைக்கப்பட்ட பின்னர், இஸ்லாமிய சம்பிரதாயப்படி முதலில் குடும்பத்தினர், பிறகு பெண்கள், பிறகு ஆண்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்த வாய்ப்பு அளிக்கப்பட்டது. மூன்று மணி நேரத்திற்கும் மேலாக இறுதி அஞ்சலி செலுத்த அனுமதித்த பின்னர், அதிகாலை 3 மணியளவில் இஸ்லாமிய மத சடங்குகள் மற்றும் ஏனைய சடங்குகளின் பின்னர் சடலங்கள் ஹற்றன் டிக்கோயா ஜும்மா பள்ளிவாசல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.













ஷெரின் அழகுக் கலை நிறுவனத்தின் ஏற்பாட்டில் தையல் கலை, மணப்பெண் அலங்காரம் போன்ற துறைகளில் டிப்ளோமா கற்கை நெறிப் பயிற்சியை பூர்த்தி செய்த மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்குதலும் மற்றும் அமரர் கலாபூசணம் ரூபராணி ஜோசப் ஞாபகார்த்த விருது வழங்கும் விழா கண்டி ஓக்ரோ ஹோட்டலில் ரஞ்ஜித் குமாரின் நெறிப்படுத்தலுடன் நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர் வேலாயுத கோயிலின் பிரதான அறங்காவலர் முத்தையாப் பிள்ளை ஸ்ரீகாந்த் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சாஹித்தியரத்னா ஞானம் ஞானசேகரன் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் விருதுகளையும் வழங்கி வைத்தார்.கலாபூசணம் ரூபராணி ஜோசப் நினைவு விருது,கலாபூசணம் திருமதி ஞானலட்சுமி ஞானசேகரன், சிரேஷ்ட ஊடகவியலாளரும் கவிஞருமான இக்பால் அலி, சிரேஷ்ட ஊடவியலாளர் டி. வசந்தகுமார் ஆகியோர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

## யாழில் குடும்பஸ்தர் வெட்டிக் கொலை

துரத்தித் துரத்தி வெட்டிய கும்பல்




யாழ்ப்பாணம் கோப்பாய் மத்தியில் குடும்பத்தலைவர் ஒருவர் துரத்தித் துரத்தி வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய் இராசபாதை வீதியில் மோட்டார் சைக்கிள் திருத்தும் (கராஜ்) நடத்தும் உரிமையாளரே இவ்வாறு வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

## தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்;

# அரசியல் கட்சிகள், சுயாதீன குழுக்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவுக்குமிடையில் நாளை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இம்முறை தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களின் பிரதிநிதிகளுக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்குமிடையில் விசேட பேச்சுவார்த்தையொன்று நாளை நடைபெறவுள்ளது.

அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீன குழுக்களுக்கும் அதுதொடர்பில் உத்தியோகபூர்வ




அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் நாளை முற்பகல் அந்த சந்திப்பு இடம்பெறுமென்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் முக்கியஸ்தரொருவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதன் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையில் நடைபெறும் முதலாவது சந்திப்பு இதுவென்றும் நாளைய இந்த சந்திப்பின்போது உள்ளூராட்சி சபை தேர்தல் நடத்தப்படும் முறை மற்றும் அதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கும் சுயாதீன குழுக்களுக்கும் விரிவான அறிவுறுத்தல்கள் வழக்கப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



திரைப்பட இயக்குனர் கலாநிதி சுமித்ரா பீரிஸின் இறுதிக் கிரியைகள் சுதந்திர சதுக்கத்தில் அரச மரியாதையுடன் நடைபெற்றது. பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் கலைஞர்கள் குழுவினர் முன்னிலையில் தகனம் செய்யப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

படம் சுதத் மலவீர

# அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்தால் ஆபத்து

## நேற்று முதல் நாடளாவிய ரீதியில் சோதனை



அதிகபட்ச சில்லறை விலைக்கு மேல் முட்டைகளை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்களைக் கண்டறிய நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகள் நேற்று முதல் (22) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக அதிகபட்ச சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அதன் தலைவர் சட்டத்தரணி சாந்த நிரியல்ல தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம், வெள்ளை முட்டையொன்று அதிகபட்ச சில்லறை விலையாக 44 ரூபாவிற்கும், சிவப்பு முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 46 ரூபாவிற்கும் விற்பனை செய்யப்பட வேண்டுமென நுகர்வோர் அதிகாரசபை வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது. அதன்படி, நேற்று முதல் இந்த அதிகபட்ச சில்லறை விலைக்கு உட்பட்டு முட்டைகளை விற்பனை செய்ய வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை விதிக்கப்பட்டதன் காரணமாக முட்டை வர்த்தகத்தில் இருந்து விலக தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கம் நேற்று அறிவித்தது. இந்தநிலையில் எதிர்காலத்தில் முட்டை தட்டுப்பாடு ஏற்படலாம் என சங்கத்தின் தலைவர் அன்டன் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையானது முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்து வர்த்தமானி அறிவித்தலை விடுத்துள்ள போதிலும், அந்த விலைக்கு முட்டைகளை விற்க முடியாது என முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான நீதிமன்ற தீர்ப்பு;

# 10 கோடி ரூபா எந்தவிதத்திலும் என்னிடம் கிடையாது மக்கள் பணம் தராவிட்டால் சிறைக்கு செல்வேன்

## டட்லி சிறிசேனவின் வர்த்தக நடவடிக்கைகளுடன் எனக்கு எவ்வித தொடர்பும் கிடையாது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத குண்டுத்தாக்குதல் தொடர்பில் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பின்படி தம்மால் 10 கோடி ரூபாவை எந்தவிதத்திலும் வழங்கமுடியாது என்றும் அந்தளவு பொருளாதார பலம் தமக்கு கிடையாதென்றும் தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மக்கள் பணம் தராவிட்டால் தாம் சிறைக்குச் செல்வதாகவும் தெரிவித்துள்ளார்.

பெரும் பொருளாதார பலம் தமக்கு இல்லாதநிலையில் மக்கள் அந்த நிதியைத் திரட்டித் தருவர் என்ற எதிர்பார்ப்பு தமக்குள்ளதாகவும் அவ்வாறு மக்களிடமிருந்து அது கிடைக்காத பட்சத்தில் தாம் சிறைக்குச் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான வழக்கின் தீர்ப்பில் 10 கோடி ரூபாவை செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. எந்தவிதத்திலும் எனக்கு 10 கோடி ரூபாவை வழங்கக்கூடிய பொருளாதார பின்புலம் கிடையாது. மக்கள் அதனைத் திரட்டித்தருவர் என்றே நான் எதிர்பார்க்கிறேன். நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பணத்தை திரட்டுவதற்கு என்னிடம் மோட்டார் சைக்கிள் ஒன்று கூட கிடையாது. அவ்வாறு பணம் கிடைக்காவிட்டால் நான் சிறைக்குச் செல்வேன்.



இலங்கை வங்கியின் தலைவராக ஜனாதிபதி சட்டத்தரணி ரொனால்ட் சி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.இவர் 20ஆம் திகதி இலங்கை வங்கியின் தலைமையகத்தின் தலைவர் அலுவலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்ற அவரை வங்கியின் பொது முகாமையாளர் ரசல் பொன்சேகா, வங்கியின் முகாமைத்துவ உறுப்பினர்கள், வங்கி ஊழியர்கள், நலன் விரும்பிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# அரசியலமைப்பு அங்கீகாரத்தை கோரி ஆதிவாசிகள் முறைப்பாடு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மனுதாக்கல்



பழங்குடியின மக்களுக்கு முறையான அரசியலமைப்பு அங்கீகாரம் வழங்கப்படாததன் காரணமாக அவர்களின் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக பழங்குடியின தலைவர் உருவரிகே வன்னிலத்தோ இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

மக்களின் தனித்துவமான பொருளாதார, சமூக, கலாசார, சிவில் மற்றும் அரசியல் உரிமைகளை பாதுகாக்க அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பழங்குடியின மக்களின் பாரம்பரிய வாழ்வாதாரம் தொடர்பான நடவடிக்கைகளை சட்ட தரப்பினர் கிரிமினல் குற்றங்களாக அறிமுகப்படுத்தியதால் தாங்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதாகவும் மனுதாரர் தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த முறைப்பாட்டில், வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம், சுற்றாடல் அமைச்சு, பொலிஸ் திணைக்களம்,

06

## தூர அளவுடன் நேர காலத்திற்கும் மட்டுப்பாடு;

# மாணவரது கல்விச்சுற்றுலாவுக்கு கட்டுப்பாடு விதித்து சுற்று நிருபம்

## கல்வியமைச்சு கவனம் செலுத்தி நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாடசாலை மாணவர்களை கல்விச் சுற்றுலாவிற்காக அழைத்துச் செல்வதற்கான தூர அளவை 100 கிலோமீற்றராக மட்டுப்படுத்துவது தொடர்பில் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த கவனம் செலுத்திவருவதாக அமைச்சின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

அண்மையில் நுவரெலியாவில் இடம்பெற்ற பாடசாலை மாணவர்கள் சென்ற பஸ் பாரிய



விபத்தொன்றை எதிர்கொண்டுள்ள நிலையில் கல்வியமைச்சர் இத்தகைய மட்டுப்படுத்தல் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக

06

## அமளி துமளிக்கு மத்தியில்

# பேருவளை நகர சபைக்கு SJB வேட்புமனுத் தாக்கல்

## இப்திகார் களத்தில்; மஸாஹிம் புறக்கணிப்பு




**(அஜ்வாத் பாஸி)**

பேருவளை நகர சபைக்கான ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்புமனு பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் சனிக்கிழமை (21) அதிகாலையில் பூர்த்தி செய்யப்பட்டு, பேருவளை SJB அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் முன்னிலையில் வேட்பாளர்கள் கையொப்பமிட்டு தெரிவத்தாட்சி அலுவலகத்தில் கையளிக்கப்பட்டதாக பேருவளை நகர சபை எதிர்க்கட்சித்தலைவர் ஹஸன் பாஸி தினகரனுக்கு தெரிவித்தார்.

06

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கான

# வாக்குச்சீட்டு தயாரிக்கும் பணிகள் நேற்று ஆரம்பம்!



உள்ளூராட்சி மன்ற தேர்தல்களுக்கான வாக்குச் சீட்டு தயாரிக்கும் பணிகள் நேற்று முதல் (ஞாயிற்றுக்கிழமை) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களை முறையாக கையளித்த அரசியல்

06

National Lotteries Board — உத்தியோகபூர்வ முடிவுகள் — www.nlb.lk

**சனிக்கிழமை 2023.01.21**

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5007 | ரூ. 15,345,984.00 | V | 7 8 7 4 2 9 |
| தன நிதானய | 1037 | ரூ. 143,182,188.00 | O | 19 38 51 64 |
| கொவிசெத | 3249 | ரூ. 72,803,559.20 | C | 16 22 26 33 |
| ராசி சுப பலன் | 316 | ரூ. 2,500,000.00 | | 14 38 59 61 |
| ஜாதிக சம்பத | 1462 | ரூ. 13,554,125.60 | | 7 3 6 0 8 5 |
| மெகா பவர் | 1355 | ரூ. 294,446,202.00 | A | 15 / 06 30 60 75 |

**வெள்ளிக்கிழமை 2023.01.20**

| சீட்டிழுப்பு | சீட்டிழுப்பு இலக்கம் | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| மஹஜன சம்பத | 5006 | ரூ. 14,466,161.00 | W | 3 7 3 2 1 1 |
| தன நிதானய | 1036 | ரூ. 142,987,415.20 | T | 25 34 58 77 |
| கொவிசெத | 3248 | ரூ. 72,468,236.00 | S | 20 25 54 69 |
| ராசி சுப பலன் | 315 | ரூ. 2,683,721.20 | | 09 19 41 52 |
| ஜாதிக சம்பத | 1461 | ரூ. 13,508,142.00 | | 1 0 4 7 3 9 |
| மெகா பவர் | 1354 | ரூ. 294,160,274.00 | G | 17 / 02 21 32 59 |

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 246.96 | 258.26 |
| கனடியன் டொலர் | 266.74 | 278.59 |
| யூரோ | 384.81 | 400.37 |
| ஜப்பான் யென் | 2.7043 | 2.8159 |
| சிங்கப்பூர் டொலர் | 268.94 | 280.31 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 436.25 | 452.93 |
| சுவிஸ் பிராங்க் | 387.32 | 406.01 |
| அமெரிக்க டொலர் | 360.47 | 371.36 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 960.78 | கட்டார் ரியால் | 98.82 |
| குவைத் டினார் | 1,183.98 | சவூதி ரியால் | 96.48 |
| ஓமான் ரியால் | 940.83 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.62 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் தை மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஜுமாதல் ஆகிராஹ் பிறை 29

### குறள் தரும் சிந்தனை

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்

பகைவரிடம் காணப்படும் சொல் வணக்கம் என்பது வில்லின் வணக்கத்தைப் போல் தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதால், அதனை நம்பக் கூடாது.

## வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தும் ரதல்ல விபத்து

நுவரெலியா மாவட்டத்தின் நானு ஓயா, ரதல்ல பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணியளவில் இடம்பெற்ற கோர வாகன விபத்து முழு நாட்டையும் பெரும் அதிர்ச்சிக்கும் கவலைக்கும் உள்ளாக்கியுள்ளது. இவ் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து நுவரெலியாவுக்கு சுற்றுலா சென்ற தேர்ஸ்டன் கல்லூரி மாணவர்கள் பயணித்த பஸ் வண்டி ரதல்லவில் வைத்து குறித்த வேனில் மோதுண்டு இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. அதனால் அவ்வேனில் பயணித்த ஆறு பேருடன் இவ்விபத்து இடம்பெற்ற சமயம் அப்பகுதி வழியாகச் சென்ற ஆட்டோ முச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளாகி அதன் சாரதியும் உயிரிழந்துள்ளார்.

குறித்த பஸ் வண்டி 150 அடிகள் தூரத்தில் தேயிலை மலைக்குள் கட்டுப்பாட்டை இழந்து இழுத்து செல்லப்பட்டுள்ளது. இப்பஸ் வண்டியில் பயணித்த மாணவர்களில் 42 பேர் காயங்களுக்கு உள்ளாகி, அவர்கள் உடனடியாக நுவரெலிய மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதனால் இவ்விபத்தினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் மேலதிக சிகிச்சை தேவைப்படுபவர்களை ஹெலிகொப்டர் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்விபத்து சம்பவத்தைக் கேள்வியுற்றதும் ஸ்தலத்திற்கு சென்ற நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்து கொடுத்தார். அத்தோடு கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் விபத்து இடம்பெற்ற பிரதேசத்திற்கு நேரில் விஜயம் செய்ததோடு பாதிக்கப்பட்ட மாணவர்கள் உள்ளிட்டவர்கள் சிகிச்சை பெறும் வைத்தியசாலைக்கும் சென்று அவர்களைப் பார்வையிட்டு நலன்களை விசாரித்ததோடு இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல்கள் கூறியுள்ளார்.

இதேவேளை, குறித்த பஸ் வண்டியின் சாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். பஸ் வண்டி சாரதியின் கவனயீனமே இவ்விபத்துக்கு காரணமென ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

ஒரு வாகன சாரதியின் கவனயீனத்தினால் இந்த ஏழு பேரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. இவ்வாறு வீதிப் போக்குவரத்து வாகன விபத்துக்களால் வருடாந்தம் உயிரிழப்பவர்களில் பெரும்பாலானவர்களின் மரணங்களுக்கு சாரதிகளின் கவனயீனம் காரணமாக அமைகின்றன.

ஆனால் ஒவ்வொரு வாகன சாரதியும் எப்போதும் பொறுப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் வாகனத்தைச் செலுத்த வேண்டும். அதற்கான பொறுப்பை அவர்கள் கொண்டுள்ளனர். அப்பொறுப்பில் இருந்து அவர்கள் ஒரு போதும் நீங்கிவிட முடியாது.

'தம் வாகனத்தில் தாம் மாத்திரம் பயணிக்கவில்லை. தம்மோடு தம்மைப் போன்ற பல உயிர்கள் பயணிக்கின்றன. தம்மை மாத்திரமல்லாமல் அவர்களையும் உரிய இடத்திற்கு பாதுகாப்பாகக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தமக்குரியது' என்பதை அவர்கள் உணர வேண்டும். அத்தோடு, வீதியில் தமது வாகனம் மாத்திரம் பயணிப்பதில்லை. தம்மைப் போன்ற பல உயிர்களை சுமந்த வாகனங்கள் தான் பயணித்துக் கொண்டிருக்கின்றன என்பதையும் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த எண்ணமும் பார்வையும் ஒவ்வொரு சாரதியின் நினைவிலும் எந்நேரமும் இருக்க வேண்டும். அப்போது பெரும்பாலான வீதி வாகனப் போக்குவரத்து விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

அதேநேரம், வாகன சாரதிகள் வீதிப் போக்குவரத்து சட்ட ஒழுங்குளை உச்சளவில் பேணி மதித்து நடக்கவும் தவறலாகாது. இச்சட்டங்களை மதியாது செயற்படுவது வீதி விபத்துகளுக்கு காரணமாக அமைகின்ற அதே வேளை, அச்சட்டங்களை மதியாது செயற்படுவது தண்டனைக்குரிய குற்றமாகவும் அமையும்.

அதன் காரணத்தினால் சாரதிகள் வாகனங்களை செலுத்தும் போது, தமது பாதுகாப்பில் கவனம் செலுத்துவது போன்று பயணிகளது பாதுக்காப்பிலும் கவனம் செலுத்தவும் தவறக்கூடாது.

சில தூரப் பயண பஸ் வண்டிகளின் சாரதிகள் ஒய்வு எடுக்காது, நீண்ட நேரம் தூக்கம் விழித்தபடி தொடராக வாகனங்களை செலுத்தக் கூடியவர்களாக இருக்கி்ன்றனர். இதுவும் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல. அதனால் வாகனங்களின் சாரதிகளுக்கு உள நல ஆற்றுப்படுத்தல் அறிவூட்டல்களும் அவ்வப்போது முன்னெக்கப்பட வேண்டிய தேவையும் காணப்படவே செய்கிறது. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளனர். இது குறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பயணிகளின் பாதுகாப்பு தொடர்பில் சாரதிகளை அடிக்கடி அறிவூட்டக்கூடியதாக இருக்கும்.

இவ்வறான ஏற்பாடுகளின் ஊடாக பெரும்பாலான வீதி விபத்துக்களையும் அவற்றின் விளைவான மரணங்களையும் காயங்களையும் தவிர்த்துக்கொள்ள முடியும். அந்த வகையில் ஏழு பேரின் உயிர்களைக் காவு கொண்ட ரதல்ல வீதி விபத்தையும் தவிர்த்து இருக்கலாம் என்பது தான் அனேகரின் கருத்து. அதனால் வீதி போக்குவரத்து வாகன விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதே இன்றைய அவசத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# அனைத்து இன மக்களுடனும் அன்புடன் பழகியவர் அமரர் பிரம்மஸ்ரீ சதானந்த கார்த்திகேயன் குருக்கள்



அமரர் பிரம்மஸ்ரீ சதானந்த கார்த்திகேயன் அவர்கள் சமூக மேம்பாட்டிலும் ஆன்மிகத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இவ்வாறான இலட்சியத்துக்காகவே தன்னை அர்ப்பணித்த பெருமகனாவார்.

அன்னார் 2011.01.23 அன்று காலமானார். அவரது மறைவுச் செய்தி அன்னாரின் அன்பர்களுக்கு பெரும் துயரை ஏற்படுத்தியது.

அமரர் சதானந்த கார்த்திகேயன் குருக்கள் சீர்மிகு அறிவும், அனுபவ முதிர்ச்சியும் கொண்டவராவார். எடுத்த கருமத்தை நேர்த்தியான முறையில் நிறைவேற்றும் உறுதி கொண்டவர்.

அமரர் பிரம்மஸ்ரீ சதானந்த ஐயா 1950.02.05 அன்று பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை நல்லூர் கோத்திரம் மங்கையற்கரசி வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை திருநெல்வேலி பரமேஸ்வராவிலும் கற்றார். உயர்கல்வியை சிலாபம் நஸ்ரியா கல்லூரியில் கற்றார்.

அவர் கிரிக்கெட் விளையாட்டில் ஆற்றல் கொண்டவர். அதற்காக தன்னை அர்ப்பணித்தார். புத்தளம் மாவட்ட கிரிக்கெட் கழகத்தை முன்னின்று ஆரம்பித்தார். அதன் கிளையை முன்னேஸ்வரத்தில் நிறுவினார். இவரது வழிகாட்டலினார் இக்கழகம் பல வெற்றிவாகைகளை சூடியது. அமரர் பிரம்மஸ்ரீ கார்த்திகேயன் ஐயா முன்னேஸ்வரம் ஆலயத்தில் தர்மகர்த்தாவாகப் பணியாற்றியமை ஆலய வளர்ச்சியின் பொற்காலம் ஆகும். வசந்த சண்டீ ஹோமத்தை 1976ம் ஆண்டு வியக்கும் வண்ணம் நேர்த்தியுடன் நடத்தினார்.

### அன்னாரின் 12 ஆவது நினைவுதினம் இன்று

1991 ஆம், 2005 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த மகாகும்பாபிஷேகத்தை திறம்பட திட்டமிட்டு நடத்தினார். புத்தளம் மாவட்டத்தில் 1988ம் ஆண்டு நிகழ்ந்த 'கம் உதாவ' திட்டத்தின் கீழ் இவ்வாலயச் சுற்றாடல் புனரமைக்கப்பட்டு புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தப் பட்டது. முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச இப்புனித பணியை மேற்கொள்ள அமரர் பிரம்மஸ்ரீ சதானந்த கார்த்திகேயன் ஐயாவின் வழிகாட்டியே ஆகும்.

முன்னேஸ்வரம் ஆவணிமாத உற்சவமானது இந்து_ பௌத்த மக்களின் ஒற்றுமையின் சின்னமாகும். அம்மக்கள் ஐக்கியத்துடன் நல்லுறவுடன் பழகுவதற்கு அன்னார் வழியமைத்தார். அன்னார் எல்லா மக்களையும் பாசத்துடன் நேசித்து உதவிகளை நல்கினார். அமரர் பிரம்மஸ்ரீ சதானந்த கார்த்திகேயன் 2011.01.23 அன்று மறைந்தமை புத்தளம்வாழ் மக்களுக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

கலாபூஷணம்
**உடப்பூர் வீரகொக்கன்...**

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ஃபோரத்தின் 15 ஊடகவியலாளர்கள் தமிழக சுற்றுலா

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ஃபோரத்தின் முன்னாள் தலைவரும், செயற்பாட்டாளருமான மூத்த ஊடகவியலாளர் என்.எம். அமீன், முஸ்லிம் வீடியோ ஃபோரம் தலைவர் புர்கான் பீ இப்திகார் ஆகியோர் தலைமையில் 15 ஊடகவியலாளர்கள் தமிழகத்திற்கு சுற்றுலா சென்றிருந்தனர். அவர்கள் அங்கு பல்வேறு முக்கிய பிரமுகர்களை சந்தித்து உரையாடினார்கள்.

இக்குழுவினர் சுற்றுலாத் தலமான குற்றாலம், தென்காசி, கடையநல்லூர், புளியங்குடி, ஆழ்வார்திருநகரி, காயல்பட்டினம், திருச்சி, புத்தாநத்தம் மற்றும் சென்னையில் பல்வேறு இடங்களுக்கு சுற்றுலா சென்றனர்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசியத் தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், மாநில பொதுச்செயலாளர் கே.ஏ. எம். முஹம்மது அபூபக்கர், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவர் எம். அப்துல் ரஹ்மான், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, தமிழக அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான், மனிதநேய கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாநில பொதுச்செயலாளரும் மணப்பாறை சட்டமன்ற உறுப்பினருமான ப. அப்துல் சமது, எஸ்.டி.பி.ஐ மாநில தலைவர் நெல்லை முபாரக், மாநில பொதுச் செயலாளர் உமர் பாரூக் உள்ளிட்ட பல்வேறு பிரமுகர்கள் சந்தித்தனர்.

இலங்கையில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நீங்குவதற்காக இந்தியாவில் உள்ள தொழிலதிபர்கள் முதலீடு செய்து அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை முன்வைத்தார்கள்.

பயணத்தில் இறுதி நாளன்று சன் டி.வி செய்திப் பிரிவு பொறுப்பாளர் குணசேகரனைச் சந்தித்து இலங்கை தொடர்பாக உரையாடினார்கள். ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாட்டில் இலங்கையில் உள்ள ஊடகவியலாளர் மத்தியில் அவர் உரையாற்ற வேண்டும் என்று அழைப்பும் விடுத்தார்கள்.





### சன் டிவி, மக்கள் குரல் நாளிதழ் மற்றும் சென்னை பிரஸ் கிளப் சென்று கலந்துரையாடல்

அதன் பின்னர் சென்னை கோடம்பாக்கம் பகுதியில் உள்ள 'மக்கள் குரல்' மற்றும் 'டிரினிட்டி மிரர்' அலுவலகத்திற்குச் சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா ஃபோரத்தின் முன்னாள் தலைவரான மூத்த ஊடகவியலாளர் என்.எம். அமீன், முஸ்லிம் வீடியோ ஃபோரம் தலைவர் புர்கான் பீ இப்திகார் ஆகியோர் தலைமையில் 15 ஊடகவியலாளர்களை மேலாண்மை இயக்குநர் ஜீவானந்தம், விளம்பரம் மேலாளர் நாகை ஆர்.பாபு, திருச்சி மாவட்ட ஊடகவியலாளர் எம்மா.கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் வரவேற்றார்கள்.

பின்னர் செய்திப் பிரிவுக்குச் சென்ற அவர்களை ஆசிரியர் முத்துகுமார் வரவேற்று செய்திப் பிரிவில் உள்ள ஒவ்வொரு பகுதிக்கும் அழைத்துச் சென்று விளக்கிக் கூறினார். அங்கு ஆசிரியர் முத்துகுமார் இலங்கை நிலைவரம் குறித்து என்.எம். அமீனிடம் கேட்டறிந்தார். மக்கள் குரல் மற்றும் டிரினிட்டி மிரர் அச்சிடும் இயந்திரங்களை குழுவினர் பார்வையிட்டார்கள்.

அதேபோல் சென்னை பிரஸ் கிளப் இணைச் செயலாளர் பாரதிதமிழன், உழைக்கும் பாத்திரிகையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அசத்துல்லா ஆகியோரை குழுவினர் சந்தித்துப் பேசினார். "இந்திய மற்றும் இலங்கைக்கு இடையேயான ஊடகவியலாளர் தொடர்பு தொடர்ந்து நீடிக்க வேண்டும். நீங்கள் அங்கே வரவேண்டும்" என்று குழுவினர் அழைப்பு விடுத்தனர். அதன் பின்னர் என்.எம். அமீன் சென்னை பிரஸ் கிளப் நிர்வாகிகள் அனைவரும் மீடியா போரத்தின் வருடாந்த மாநாட்டிற்கு வர வேண்டுமென அழைப்பு விடுத்தார்.



திருச்சி
**எம்.கே.ஷாகுல் ஹமீது...**

# அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்ற வெளிநாட்டு இராஜதந்திரி அப்துல் ரஹீம்

காத்தான்குடி மண்ணுக்கு பெருமை சேர்த்த வெளிநாட்டு இராஜதந்திரி அப்துல் ரஹீம் கடந்த முதலாம் திகதியுடன் இலங்கை வெளிநாட்டு வர்த்தக சேவையில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார். இவர் 1995ம் ஆண்டில் பாகிஸ்தானின் கராச்சியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இலங்கையின் வர்த்தக ஆணையராக நியமிக்கப்பட்டார்.

2000 ஆம் ஆண்டு ரஷ்யாவின் மொஸ்கோவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் வர்த்தகப் பிரிவின் தலைவராகப் பணியாற்றினார். 2003 ஆம் ஆண்டில், அவர் இலங்கையின் தூதரக (கொன்சியூலர்) ஜெனரலாக மும்பையில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்திற்கு பதவி உயர்வு பெற்றுச் சென்றார். பின்னர் அவர் கொழும்பு திரும்பி வர்த்தக அமைச்சில் பணியாற்றினார்.

அதனைத் தொடர்ந்து ஜேர்மனியில் உள்ள இலங்கை தூதரகத்தில் வர்த்தக அமைச்சராக (மேலாளராக) நியமிக்கப்பட்டார். ஜேர்மனியில் இருந்து, அப்துல் ரஹீம் 2011 இல் மீண்டும் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள துபாயில் இலங்கையின் தூதரக கொன்சியூலர் ஜெனரலாக 2015 வரை பணிபுரிந்தார்.

அதனைத் தொடர்ந்து 2016ல் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டார்.

பின்னர் 2017 முதல் 2022 வரை, அவர் அவுஸ்திரேலியாவின் சிட்னியில் உள்ள இலங்கை துணைத் தூதரகத்தில் வணிக அமைச்சராக (மேலாளராக) நியமிக்கப்பட்டார்.

அவுஸ்திரேலியாவில் தனது இராஜதந்திர பதவியின் பின்னர் அவர் 2022 இல் வர்த்தகம் மற்றும் வர்த்தக அமைச்சுக்கு திரும்பினார். வர்த்தக இராஜதந்திரியாக, அவர் வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகங்களில் பணிபுரிந்த போது நாட்டிற்கு வர்த்தகம், சுற்றுலா மற்றும் முதலீட்டை ஊக்குவித்தார்.

வெளிவிவகார அமைச்சு, வர்த்தக அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, தேயிலை சபை, முதலீட்டுச் சபை போன்ற இலங்கை நிறுவனங்களிடையே சர்வதேச சந்தைகளில் நாட்டின் ஆர்வத்தை ஊக்குவிப்பதற்காக அவர் நற்பெயரைக் கட்டியெழுப்பியுள்ளார். அவருக்கு பதவி ரீதியாக பணியாற்ற இன்னும் பல ஆண்டுகள் எஞ்சியிருந்த நிலையில், அவர் சேவையில் இருந்து முன்கூட்டியே ஓய்வு பெற விரும்பினார்.

அவர் ஓய்வுபெறும் போது, அவர் இருதரப்பு விவகாரப் பிரிவின் தலைவராகவும், வர்த்தக அமைச்சில் வணிக இயக்குநராகவும் இருந்தார். நடுத்தர குடும்பத்தில் பிறந்த அப்துல் ரஹீம், ஏழு வயதில் தாயையும், பதினேழு வயதில் தந்தையையும் இழந்தார்.

மிகுந்த சிரமங்களோடு பாடசாலையில் தனது படிப்பைத் தொடர்ந்த அவர், 1984 ஆம் ஆண்டு வர்த்தகப் பாடங்களில் உயர்தரத்தில் சித்தி எய்தினார். காத்தான்குடி மத்திய கல்லூரியில் முந்திய சாதனையை முறியடித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் சாதனைப் பெறுபேறுகளைப் பெற்றார். இரண்டு வருடங்களின் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்ட பரிசளிப்பு விழாவில் காத்தான்குடி மத்திய கல்லூரியில் நடைபெற்ற பாராட்டு விழாவில் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அப்துல் ரஹீம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில வணிக நிர்வாகத்தில் இளங்கலைப் பட்டம் பெற்றார், மேலும் 1990 இல் வணிக நிர்வாகத்தில் இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) பட்டம் பெற்றார். பின்னர் 1991 இல் நடைபெற்ற இலங்கை வெளிநாட்டு வர்த்தக சேவை பரீட்சையில் திறமைச் சித்தி பெற்று அச்சேவையில் இணைந்து வணிகவியல் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தார்.

இவரின் உயர் சேவையின் மூலம் இலங்கை பெருமை கொள்கின்றது.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்...**
(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# சிறி கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயத்தில் சாதனையாளர்கள் கௌரவிப்பு விழா

அமரர் பத்மநாதன் மகேஸ்வரி அறக்கட்டளையின் அனுசரணையுடன் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட சிறி கோரக்கர் தமிழ் மகாவித்தியாலயத்தின் சாதனையாளர் கௌரவிப்பு விழா, பாடசாலை அதிபர் இளங்கோவன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன் போது பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக்கல்வி பணிப்பாளர் அமீர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா, உதவிக் கல்விப் பணிப்பாளர் பரமதயாளன் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக அமரர் பத்மநாதன் மகேஸ்வரி அறக்கட்டளையின் இணைப்பாளர் கேசவகுமார்,





லண்டன் எல்பீட் நாகபூசணி அம்மன் ஆலயத்தின் முன்னாள் தலைவரும் நீம் நிறுவனத்தின் நிறுவுனருமான மன்மதன் மற்றும் ரதி, நீம் நிறுவனத்தின் பணிப்பாளர் நிதர்ஷன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன் போது தரம்_ 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த (சா/தர) மற்றும் க.பொ.த (உ/தர) பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களும் ஆசிரியர்களும் பதக்கங்கள் மற்றும் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இதன் போது பாடசாலையில் பிரதான பெயர்ப் பலகையும் திறந்து வைக்கப்பட்டது.

**வினோஜ்குமார்...**

# மனித வாழ்வில் இந்துசமய தத்துவங்கள்

'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதியாய்' என்பதற்கமைய இந்து மதமானது ஆரம்பமும் இல்லை முடிவும் இல்லை யாரால் எப்பொழுது எக் காலப்பகுதியில் எங்கு தோற்றுவிக்கப்பட்டது என்பதற்கு விடை காண முடியாதுள்ளது. இப்படியான பழம்பெரும் மதமாகவும் எல்லா மதங்களிற்கும் மூத்த மதமாகவும் இந்து மதம் விளங்குகிறது.

சிந்துவெளி நாகரிக காலத்தில் கூட இந்துமதம் பெரும் வளர்ச்சி பெற்றிருந்ததையும், பல ஆதாரங்கள் அல்லது தடயங்கள் சான்றுகள் பகர்கின்றன. இந்துமதம் பல பெயர்கொண்டு விளங்குகின்றது. சனாதன தர்மம், அறுவகைச் சமயம் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றன. இவற்றில் சைவசமயம், காணாபத்தியம், கௌமாரம், வைணவம், சாக்தம், சௌரம் என பிரிவுகளாகும். இவ்வாறான பெரும் பிரிவைக் கொண்ட இந்துசமயம் மனிதனை பல வழிகளிலும் மேம்படுத்துகின்றது.

இந்துசமயமானது மனிதனின் வாழ்வியலோடு தொடர்புபடுவதுடன் அவனை மேம்படுத்தவும் வழி சமைக்கின்றன. இவை பல தத்துவக் கருத்துக்களை எடுத்து இயம்புகின்றன. அந்த வகையில் பின்வரும் அம்சங்களை நோக்கிப் பார்க்கலாம்.

இதன் வரிசையில் ஆலயம் என்றால் என்ன? என நோக்குவோமாயின் ஆன்மாக்கள் ஐம்புலன்களையும் அடக்கி மனதை ஒருவழிப்படுத்தி இறைவனிடத்தே ஒடுங்குவதற்கு ஏதுவான இடமென்று சொல்லப்படும். அதாவது ஆன்மாக்கள் லயப்படும் இடம் இறைவனோடு ஒன்றிக்கும் இடம் என குறிப்பிடப்படுகின்றது.

மனித புறத்தோற்ற வடிவங்களையும், அகத்தோற்ற இயல்புகளையும் சமய வாழ்வியலையும் சைவசித்தாந்த கோட்பாடுகளையும் உள்ளடக்கியதாக இந்து ஆலய அமைப்பை எடுத்துக்காட்டும் தத்துவமாய் அமைகின்றது.

ஆலயத்திலுள்ள கொடிமரம் பதியையும், தெப்பக்கயிறு பசுவையும் குறித்து நிற்கின்றது. அதாவது இறைவனுடன் ஆன்மா பற்றிக்கொள்ளும் நிலை ஆகும். ஆலயத்தினுள் செல்லும்போது மேற்கொள்வது ஆலயத்தினுள் நுளையும் போது முகப்பு வாசலில் துவாரபாலகர் காணப்படுவார். அவரை வணங்கிய பின் உள்ளே நுழைந்து ஏனைய கடமைகளை செய்யலாம்.

கோயில் சென்றதும் கிழக்கு எதிராக வழிபடுவதை விட கொடிமரத்தருகே விழுந்து வணங்குதல் சிறந்தது. ஏனென்றால் கோவிலுக்கு உள் பிரகாரத்தில் பல பல மூர்த்திகள் இருப்பதனால் சில அதி தேவதைகள் சூட்சுமமாக இருப்பதனாலும் அங்கே கால் நீட்டி வணங்கக்கூடாது.

மானிய ஆளுனரைக்கான அவருடைய அரச, பவனத்துக்கப் போகும் ஒருவன் வாசலில் நிற்கும் பணியாளர்களையோ அதிகம் மரியாதை செலுத்தி வணங்குவான். ஆளுனருக்குத்தானே முதல் வணக்கம் செலுத்துவான். அதுபோல் ஆலயத்தில் இறைவனுக்குத்தான் முதல் வணக்கம் செலுத்த வேண்டும் வழிபாடு முடிந்தபின் நவக்கிரகங்களை வலம் வந்து கும்பிட வேண்டும்.

இறைவனையன்றி வேறு மற்றவர்களுக்கும் கோயிலில் அஸ்டாங்க வணக்கம் செலுத்தக்கூடாது. ஆலயங்களில் நவக்கிரக பிரதிஷ்டை (200) இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னரே தோன்றியது. ஆலய வழிபாடு செய்வோர் இறைவனை வலம் வந்து கொடிமரத்திற்கு முன் விழுந்து கும்பிடுதல் வேண்டும்.

இறைவழிபாடு முடிந்த பின் நவக்கிரகங்களை வழிபட வேண்டும். இறைவனை வழிபடாது நவக்கிரகங்களை மட்டும் வழிபாட்டால் அந்த நவக்கிரகங்களை அவர்களுக்கு நலம் புரியாது தீமை புரியும். ஒரு வீட்டில் தலைவனை வணங்காது பணியாளனை வணங்கினால் அப்பணியாளன் நன்மையா புரிவான்? அங்கே என் எஜமான் இருக்கிறான். அவருடைய திருமுன் என்னை வணங்கலாமா? என்பான். அதேபோல் இறைவனை புறக்கணித்து கிரகங்களை வணங்கலாகாது.

இறைவனும், இறைவியும் வீற்றிருக்கும் ஆலயங்களில் கட்டாயமாக வலது பக்கமாக சுற்றல் வேண்டும். ஏனெனின் வலப்பக்கம் இறைவனும், இடது பக்கம் இறைவியும் வீற்றிருப்பதே இதற்குக் காரணமாகும். ஆனால் சக்தி ஆலயங்களில் தனிமையான சிலைகள் அமைந்துள்ளமையால் வலது இடது பக்கமாகவும் ஆலயத்தை வலம் வரலாம். கட்டாயமாக மூன்று முறை வலம் வருதல் வேண்டும். தேவர்கள் திருப்பாற்கடலை கடைந்தமையால் அவர்கள் சுற்றிய தன் தத்துவமும் ஆலயத்திற்கு வலம் வரும் தத்துவமாக மற்றுமொரு கருத்து நிலவுகிறது.

கலாநிதி
**நாராயணபிள்ளை நாகேந்திரன்**
ஓய்வுநிலை அதிபர், களுவாஞ்சிகுடி

சைவ மஞ்சரி

## மானுடவியல்
(தொடர்)



101

### சடைய நாயனார்

சடைய நாயனார் தேவார மூவருள் ஒருவரான சுந்தரரின் தந்தை ஆவார். சிவபக்தி மிகுந்த இவரைப் போலவே சுந்தரரும் சிவன்பால் அன்பு கொண்டவராக விளங்கினார்.

அவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதி சைவர் குலத்தில் தோன்றினார். அவரின் முன்னோர்கள் அனைவரும் சிவனாருக்கு தொண்டு செய்து சைவத்தை போற்றிப் பாதுகாத்து வளர்த்து வந்தனர். சிவனடியார்களின் மேல் அன்பு கொண்டு அவர்களைச் சிறப்புறச் செய்தனர்.

சடையனாரும் தம்முடைய முன்னோர்களைப் போலவே வேதம் ஓதி முறையாக வழிபாடு நடத்தி சிவனாரை போற்றி தொழுது வந்தார். இவருடைய சிவபக்தி மற்றும் நல்வினைகள் பயனாக சுந்தரரை மகனாக இறையருளால் பெற்றார். திருநாவலூரில் உள்ள இறைவனின் நாமம் ஆரூரார் என்பதாகும். ஆதலால் சடைய நாயனார் சுந்தரருக்கு ஆரூரார் என்று பெயரிட்டார். திருநாவலூர் இறைவனாரை வழிபட வந்த நரசிங்கமுனைய நாயனார் திருநாவலூர் வீதியில் தேருரிட்டி விளையாடிய ஆரூராரைக் கண்டு அழகில் மயங்கினார். ஆரூரார் பற்றிய விவரம் அறிந்த நரசிங்க முனையனார், சடைய நாயனாரிடம் சென்று ஆரூராரை வளர்க்கும் பணியை தம்மிடம் ஒப்படைக்குமாறு வேண்டினார்.

சடைய நாயனாரும் அதற்கு ஒப்புக்கொண்டு ஆரூராரை நரசிங்க முனைய நாயனாரிடம் ஒப்படைத்தார். இறைவன்பால் அன்பு செலுத்திய அவர் இறுதியில் இறைவனின் திருபாதம் அடைந்து வீடுபேற்றினைப் பெற்றார்.

சுந்தரர் சடைய நாயனாரை, 'ஊரன் சடையன்றன் காதலன்', 'சடையன்றன் சிறுவன் வன்றொண்டன்', 'சடையன் திருவாரூரன்' 'நண்புடைய நன்சடையன் சிறுவன்' 'சடையன் காதலன்' என தம்முடைய பாடல்களில் பல இடங்களில் பாடி சிறப்பித்துள்ளார். இயற்கையிலேயே சிவனார்பால் அன்பு கொண்டுதாலும், சுந்தரரை மைந்தனாகப் பெற்றதாலும் சடைய நாயனார் 63 நாயன்மார்களில் ஒருவராக வைத்துப் போற்றப்படுகிறார். சடைய நாயனாரின் குருபூஜை மார்கழி மாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது. சடைய நாயனாரை சுந்தரர் திருத்தொண்ட தொகையில் 'அரனடியே அடைந்திட்ட சடையனுக்கு அடியேன்' என்று போற்றுகிறார்.

கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.






முந்தல் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட ஆண்டிமுனை சமுர்த்தி வங்கி ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்ட "தைப்பொங்கல் விழா" ஆண்டிமுனையில் ( இடம்பெற்றது. பூஜைகளை உடப்பு வீரபத்திர காளியம்மன் ஆலய பூசகர் நடத்தினார். இதன் போது முந்தல் பிரதேச செயலாளர் பிரியந்த தஸநாயக்க விஷேட அதிதியாக கலந்து கொண்டு சிறப்பித்தார். வாழ்வாதாரத்தில் கஷ்டத்திற்கு உள்ளான ஆண்டிமுனை, உடப்பு பகுதியைச் சேர்ந்த 22 வயோதிபர்களுக்கு உலர் உணவுப் பொதிகள் பிரதேச செயலாளரினால் வழங்கி வைக்கப்பட்டன. உடப்பு குறூப் நிருபர்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

### தரித்திரத்தை தவிர்க்க, செல்வம் நிலைக்க

**19450) ஒருவருக்கு பணம் கொடுக்க வேண்டுமென்றால் எங்கு நின்று கொண்டு கொடுக்கக் கூடாது?**
*வாசல்படியில்*

**19451) அப்படியென்றால் கொடுப்பவரும், வாங்குபவரும் எங்கே இருந்து கொடுக்கல் வாங்கல் செய்ய வேண்டும்?**
*வாசல் படிக்கு உள்ளே இருந்து*

**19452) செல்வம் நிலைக்க, விருத்தி அடைய, பணம் கொடுக்கல் வாங்கல் எந்தக்கிழமையில் செய்வது நல்லது?**
*செவ்வாய்க்கிழமை*

**19453) செவ்வாய்க்கிழமை எந்த நேரத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்வது நல்லது?**
*செவ்வாய் ஹோரையில் நடப்பது உத்தமம்.*

**19454) செவ்வாய் ஹோரையில் பணம் கொடுக்கல் வாங்கல் செய்வதால் ஏற்படும் நன்மை என்ன?**
*கொடுப்பவருக்கு பணம் திரும்பக் கிடைக்கும். வாங்குபவரால் பணத்தை திரும்பக் கொடுக்க இயலும்.*

**19455) பணம் திரும்ப கொடுப்பது எப்பொழுது செய்வது நல்லது?** *செவ்வாய் ஹோரையில் நடப்பது சிரேஷ்டம்.*

**19456) நாம் எவற்றின் மீது உட்காரக்கூடாது?**
*வாசற்படி, உரல், ஆட்டுக்கல்,அம்மி இவைகளில்*

**19457)இரவு நேரங்களில் எவற்றை அடுத்தவர்கள் எடுத்து செல்ல அனுமதிக்கக் கூடாது?**
*பால், மோர், தண்ணீர்*

**19458) எவற்றை வாடவிடக்கூடாது?**
*வெற்றிலை, வாழையிலை இவைகளை*

**19459) எதனை தரையில் வைக்கக்கூடாது?**
*வெற்றிலையை*

**19460) எரியும் குத்துவிளக்கை தானாக அணையவிடலாமா?**
*கூடாது.*



கொழும்பு கொட்டாஞ்சேனையில் அமைந்து வரும் இலங்கையின் முதலாவது ஸ்ரீ ஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலயத்தின் கட்டிட நிர்மாண பணிகள் நிறைவு பெற்று அலங்கார வர்ணப்பூச்சு வேலைகள் இடம்பெறுவதை படத்தில் காணலாம்.
(படம்: வட கொழும்பு தினகரன் நிருபர்)




தைப்பொங்கல் தினத்தில் மார்கழி பஜனை மலையக தோட்டப்புறங்களில் நிறைவுபெறும் நாளில் வெகு விமரிசையாக விழா எடுக்கப்பட்டு இராமர் சிலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு வழிபடுவது மரபு நகர்ப்புறத்திற்கு குடிபெயர்ந்தோர் இவ்வாறான நிகழ்வை மேற் கொள்வது அரிது என்றாலும் தோட்டப்புறங்களுக்கு மீண்டும் சென்று வழிபாடாற்றுவது இயல்பு பன்விலை கல்பிஹில்ல தோட்டத்தில் இராமர் பஜனை ஊர்வலம் இடம்பெறுவகதக் காணலாம்.
புசல்லாவை தினகரன் நிருபர் ம.நவநீதன்

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 24



வாழ்க்கையின் மூலாதாரமாக இறைவனுடன் நாம் நம்மை இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் அவன் மனம் விசாலமடையும். சமுதாயக் கடலில் மூழ்குவதால் தனி மனிதன் தன்னுடைய அகந்தை, சுயநலம். பதுக்கல், ஹிம்சை. சூழ்ச்சி போன்ற தீயவைகளிலிருந்து விடுபடமுடியும். பரமாத்மாவுடன் ஒன்று சேர்வதால். பொறாமை, தனிமை மரண பயம் போன்றவை நீங்கும். விளங்கும்

நாலாபுறமும் பரவியிருப்பது மரத்தின் இயல்பு, நாமும் பரந்த மனப்பான்மையுடன் செயல் புரிவோம். வீடு, குடும்பம், சமூகம், தேசம். உலகம் ஆகியவைகளுடன் அன்பு, பாசம், மரியதை நற்குணம் வெளிப்படுத்துவோம். நிழல் வேண்டுவோர்க்கு நிழலாகவும், மழை வேண்டுவோர்க்கு மழையாகவும், உதவி வேண்டுவோர்க்கு உதவி வழங்கவும் நாம் தயாராக இருக்க வேண்டும். தனி மனிதனாக இருந்து உதவுவதை விட சமூகத்துடன் சேர்ந்து உதவும் போது பரந்தளவில் உதவிட முடியும்.

நம் நிலை உயரும் போது நாம் கடவுளை மறந்து விடக் கூடாது. மறந்தால் மீண்டும் நாம் ஜடப் பொருளாகி விடுவோம். அந்த ஜடப் பொருள்களிலிருந்து விலகி, மேம்பட்டு இறைவனை பரமாத்மாவை அடைவதற்காகத்தான் இந்த நமக்கு மானுடப்பிறவி கிடைத்துள்ளது.

சின்னதாக ஒரு சங்கடம் வந்து விட்டாலே பலர் பெரிய அளவில் பயந்து குய்யோ முய்யோ என கதறுவதை நாம் பார்த்துள்ளோம். கடவுள் மீதே அவர்களுக்கு அவநம்பிக்கை வந்து விடுகிறது. இது முறையல்ல, சரியல்ல. வாழ்வில் எந்நேரமும், எப்போதும் பிரச்சினைகள் வரத்தான் செய்யும். அதற்காக, நாம் கலங்கி விடக் கூடாது. இம்மாதியான சங்கடங்கள் கடவுள் தன் குழந்தைகளிடம் விளையாடும் ஒரு விளையாட்டு என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பேப்பரில் வரையப்பட்ட பூதம், சிங்கம், புலி போன்ற முகமூடி அணிந்து கொண்டு ஒரு தந்தை குழந்தைகளிடம் வேடிக்கை காட்டுவது போலவே சில சங்கடங்களை தந்து கடவுள் நம்மிடம் விளையாடுகிறார். தன் தந்தை முகமூடி அணிந்து பயப்படச் செய்வதை பழகிப்போன பின் குழந்தை பயப்படுவதை நிறுத்திக் கொள்ளும். இதே போல் சங்கடங்கள் தாங்கி கொள்ளக் கற்றுக் கொள்ளும் போது எப்பிரச்சனைகளையும் எதிர்த்து போராடும் குணம் நமக்கு உண்டாகும்.

கடவுள் மீது முழு நம்பிக்கை கொள்ளாதவனுக்குத் தான் பிரச்சினைகள் பயமுறுத்தும். அப்படிப்பட்டவன் தான் சூழ்நிலையை கண்டு பயப்படுகிறான். எவன் கடவுளிடம் முழு நம்பிக்கை வைத்துள்ளானோ, கடவுளை சர்வ ஒருவன் வல்லமை படைத்தவனாக் கருதுகிறானோ, கடவுள் நிச்சயம் நமக்கு கருணை காட்டுவார் என நம்புகிறானோ, கடவுளை தாய் தந்தையாக கருகிறானோ அவனுக்கு எந்த சூழ்நிலையும் நல்லதையே செய்யும். கடவுளின் தொடர்பை துண்டித்துக் கொண்டவனே அனைத்திற்கும் பயப்படுவான்.





களுத்துறை மாவட்டம் மத்துகம பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பொங்கல் விழாவின் போது பிடிக்கப்பட்ட படங்கள். இந்தப் பொங்கல் விழாவை, மத்துகம, வோகன் மேல் பிரிவு கலைவாணி அறநெறி பாடசாலை மாணவ, மாணவிகள் சமூக சேவையாளர் ராஜேந்திரகுமாருடன் இணைந்து நடத்தினார்கள். இங்கு அறநெறிப் பாடசாலை மாணவியொருவர் பொங்கல் வைப்பதற்கு தயாராவதைக் காணலாம்.

# இலங்கை கால்பந்து சம்மேளனம் மீது தடை
# சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம்

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம், இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் உறுப்புரிமையை தற்காலிகமாக இரத்து செய்துள்ளது. ஜனவரி 21ஆம் திகதி முதல் மறு அறிவிப்பு வரும் வரை இந்தத் தடை அமுலில் இருக்கும் என அந்த சம்மேளனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் முன்னாள் பொதுச் செயலாளர் உபாலி ஹேவகேவுக்கு கடிதம் மூலம் இந்தத் தடை குறித்து அறிவித்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் 14ஆம் திகதி நடைபெற்ற உத்தியோகபூர்வ தேர்தலில் இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு புதிய அதிகாரிகள் சபை நியமிக்கப்பட்ட போதிலும், சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம் புதிய அதிகாரிகள் சபையை ஏற்றுக்கொள்ளாததால், முன்னாள் பொதுச் செயலாளரின் பெயருக்கு குறித்த கடிதத்தை அனுப்பியுள்ளது. அண்மையில் நடைபெற்ற அலுவலகத் தேர்தலில் விளையாட்டுத்துறை அமைச்சர் மூன்றாம் தரப்பாக தலையிட்டமை, விளையாட்டு அமைச்சினால் வாக்குறுதியளிக்கப்பட்ட இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ளாமை மற்றும் சர்வதேச கால்பந்து சம்மேளனத்துடன் முன்னர் இணங்கிய விதிகளுக்கு அமைய செயற்படாமை போன்ற காரணங்களினால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த தடையின்படி, இலங்கை மற்றும் இலங்கை தேசிய அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த வீரரும், பயிற்றுவிப்பாளரும் அல்லது அதிகாரியும் சர்வதேச போட்டிகளிலோ அல்லது வேறு எந்த போட்டிகளிலோ பங்கேற்க முடியாது.

## ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு...

நுகர்வோர் உரிமையைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் மற்றும் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் செயலாளர் ஆனந்த பாலித்த உள்ளிட்ட உறுப்பினர்களே அந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்ளனர். அதுதொடர்பில் தெரிவிக்கப்படுவதாவது, கடந்த 20 ஆம் திகதி விசேட கூட்டமொன்று பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 2023 ஜனவரி முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு அமைச்சரவை மேற்படி ஆணைக்குழுவிடம் எழுத்து மூல வேண்டுகோளை விடுத்திருந்தது.

பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் மின்வலு ஆணைக்குழு சட்டத்திற்கு இணங்க அதுதொடர்பில் தீர்மானம் வழங்குமாறு அமைச்சரவை கோரியிருந்தது. அதற்கமைய ஆணைக்குழுவானது கடந்த 12 ஆம் திகதி கூட்டமொன்றை நடத்தியது. அந்த கூட்டத்தின்போது பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க சில வேண்டுகோள்களை முன்வைத்து ஆவணமொன்றை சமர்ப்பித்துள்ளார். மின் கட்டணத்தை அதிகரிக்கும் நடவடிக்கை செயற்படுத்தப்படும் வரை இடைக்கால அதிகரிப்பை மேற்கொள்வதற்கு இடமளிக்காமை மற்றும் கட்டணத்தை அதிகரிப்பதற்கான அனுமதியை 2023 ஜனவரி முதலாம் திகதி முதல் செயற்படும் வகையில் செயற்படுத்த அனுமதி வழங்குமாறும் யோசனை இதில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த ஆணைக்குழுவின் ஏனைய மூவரும் அந்த தகவல்கள் உள்ளடக்கப்பட்ட கடிதத்தை தயாரிக்குமாறு கோரியுள்ளனர். அதனை அமைச்சரவைக்கு அனுப்புவதற்கு முன்பதாக அவர்களுக்கு காண்பிக்குமாறும் தலைவரை கேட்டுக்கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் அந்த உறுப்பினர்களுக்கு அதனை காண்பிக்காமல் ஆணைக்குழுவுக்கு தெரியாமல் அதில் கையெழுத்திட்டு ஆணைக்குழுவின் தலைவர் அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். அவ்வாறு செய்வதற்கான விசேட அதிகாரம் தலைவருக்கு கிடையாதபோதும் அவர் அவ்வாறு செயற்பட்டுள்ளார். அதனையடுத்து கடந்த வியாழக்கிழமை ஆணைக்குழுவின் ஏனைய மூவரும் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் அவரைச் சந்தித்துள்ளனர். அந்த சந்திப்பின்போது நாடு எதிர்கொண்டுள்ள நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தி தீர்மானமொன்றை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அதேதினத்தில் பாராளுமன்றத்தில் தேசிய பேரவையும் அது தொடர்பில் கலந்துரையாடலொன்றை மேற்கொண்டுள்ளது. அதேவேளை கடந்த 20 ஆம் திகதி ஆணைக்குழுவின் தலைவர் விசேட கூட்டமொன்றை ஏற்பாடு செய்துள்ளார். அந்தக் கூட்டம் கொள்ளுப்பிட்டியிலுள்ள மேர்ச்சன்ட் டவரில் இடம்பெற்றுள்ளது. ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்களும் அங்கு செல்லும்போது பதாதைகளை ஏந்தி அங்கு ஆர்ப்பாட்டமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. நுகர்வோர் உரிமையை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் மற்றும் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் செயலாளர் ஆனந்த பாலித்த உள்ளிட்ட உறுப்பினர்கள் அந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர். அதன்போது ஆணைக்குழுவின் தலைவர் அவர்களிடம் இது ஆணைக்குழு கூட்டம் அல்லவென்றும் விசேட சந்திப்பு போன்றே இன்றும் தெரிவித்துள்ளார். அவர்கள் அதனை செவிமடுக்காது 17 ஆம் மாடிக்கு வருகைதந்து மின் உயர்த்திக்கு அருகில் எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர். அத்துடன் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு எதிராக அச்சுறுத்தல்களை மேற்கொண்டுள்ளனர். அவர்கள் காரில் ஏற முற்பட்ட போது காரின் கதவையும் திறப்பதற்கு முயற்சி செய்துள்ளனர். இந்த அச்சுறுத்தல் தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்வதற்கு ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.



ஸ்ரீ லங்கா தமிழ் கலைஞர் சங்கத்தின் ஏற்பாட்டில் விருது வழங்கல் விழாவும் தைப் பொங்கல் விழாவும் கொழும்பு விஹாரமாஹாதேவி திறந்த வெளியரங்கில் இடம்பெற்றது. அந்நிகழ்வில் பிரபல பாடகரும், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தென்றல் அறிவிப்பாளருமான முஹம்மட் இர்பானுக்கு புரவலர் ஹாசீம் உமர் சிறந்த பாடகர் மற்றும் சிறந்த நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளருக்குமான விருதினை வழங்கிய போது....

படம் . நசார்

## கடன் மறுசீரமைப்புக்கு...

பிரியந்த ரட்நாயக்க, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை 2. 9 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகப் பெற்றுக் கொள்வதற்கு சீனாவின் ஆதரவு விரைவாக கிடைக்கும் என நம்பிக்கை வெளியிட்டிருந்தார். இத்தகைய பின்னணியிலேயே கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான சீனாவின் நிலைப்பாடு நேற்றைய தினம் சர்வதேச நாணய நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடன் மறுசீரமைப்பு தொடர்பான ஆதரவை இந்தியா சர்வதேச நாணய நிதியத்திடம் 16ஆம் திகதி எழுத்து மூலம் கையளித்துள்ள நிலையில் சீனா நேற்று தமது நிலைப்பாட்டை எழுத்து மூலம் அறிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் கடனைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இலங்கை அரசாங்கம் தொடர் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வரும் நிலையில் இறுதி உடன்பாட்டை மேற்கொள்வதற்கு இருதரப்பு கடன் வழங்கும் நாடுகளான சீனா மற்றும் இந்தியாவின் ஆதரவை இலங்கை எதிர்பார்த்திருந்தது. அதற்கிணங்க கடந்த 16ஆம் திகதி இந்தியாவின் ஆதரவு கிடைத்துள்ள நிலையில் சீனாவின் உடன்பாட்டை இலங்கை அரசாங்கம் எதிர்பார்த்திருந்தது. அதற்கமைய சீனாவும் நேற்றைய தினம் அதன் நிலைப்பாட்டை சர்வதேச நாணயநிதியத்திற்கு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அரசியலமைப்பு ... (03 ஆம் பக்கத் தொடர்)

தொல்பொருள் திணைக்களம், கரையோரப் பாதுகாப்பு திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், மகாவலி அதிகார சபை, காணி அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், கடற்றொழில் திணைக்களம் என்பன பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

அந்த புகாரில், பழங்குடியின மக்கள் வசிக்கும் இடங்களிலும், அவர்கள் மற்றும் அவர்களது பூர்வீக நிலங்களிலும் நிம்மதியாக வாழ உரிமை கோரியுள்ளனர். பழங்குடியின தலைவர் உருவரிகே வன்னிலத்தோ தலைமையிலான குழுவினர் கடந்த 18ஆம் திகதி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இந்த முறைப்பாட்டை சமர்ப்பித்துள்ளனர். தம்பனை, பொல்லேபெத்த, ஹென்னானிகல, வாகரை, கரகச்சேனை, தோக்கூர் மற்றும் கட்டப்பறிச்சான் ஆகிய பிரதேசங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆதிவாசி தலைவர்கள் இந்த முறைப்பாட்டை தாக்கல் செய்துள்ளனர்.

## மாணவரது ... (03 ஆம் பக்கத் தொடர்)

அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, கல்விச் சுற்றுலா செல்லும் மாணவர்கள் மாலை 6 மணிக்கு முதல் மீண்டும் குறித்த பாடசாலைக்கு வந்துசேர வேண்டுமென்றும் அதேவேளை எதிர்காலத்தில் பாடசாலை சுற்றுலாவிற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பாடசாலைகள் தாம் அதற்காக தேர்ந்தெடுக்கும் பிரதேசம் தொடர்பில் கவனம் செலுத்தவேண்டுமென்றும் கல்வியமைச்சும் அதுதொடர்பில் முக்கிய கவனத்தை செலுத்தும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## பேருவளை நகர... (03 ஆம் பக்கத் தொடர்)

ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிட பல எதிர்பார்ப்புகளோடு களமிறங்க இருந்த தற்போதைய பேருவளை நகர சபைத்தலைவர் மஸாஹிம் மொஹமட் இப்பட்டியலில் சேர்க்கப்படவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார். அமைப்பாளர் இப்திகார் ஜெமீல் தலைமையிலேயே தமது அணி களமிறங்கவுள்ளதாக தெரிவித்த ஹஸன் பாஸி, நகர பிதா மஸாஹிம் மொஹமட் எமது அணியில் களமிறங்கினால் தான் தேர்தலில் போட்டியிடமாட்டேன் என்று தலைமைத்துவத்தை ஹஸன் பாஸி வலியுறுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

## வாக்குச் சீட்டு... (03 ஆம் பக்கத் தொடர்)

கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் குறித்த தகவல்கள் இறுதி செய்யப்பட்டுள்ள நிலையிலேயே குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதற்கமைய 340 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தனித்தனியான வாக்குச் சீட்டுகள் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## சூத்திரதாரிகளை...

கொலையாளிகளை மறைக்க இடமளியோம்" என்ற தொனிப் பொருளில் நீர்கொழும்பு, கட்டுவபிட்டிய சந்தில் அமைதியான ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. நீர்கொழும்பு பிரஜைகள் கூட்டமைப்பு ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, அதிகாரத்தை பெற்றுக்கொள்ள செய்த மனிதப் படுகொலை, அரச பயங்கரவாதம், ஈஸ்டர் தாக்குதலுக்கு 225 பேரும் பொறுப்புக்கூறவேண்டும்., உயிர்த்த ஞாயிறு கொலையாளிகள் இன்னும் சுதந்திரமாக உள்ளனர்., தாக்குதலின் சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பது எப்போது?, கொல்லப்பட்டவர்களுக்கு நியாயம் பணமல்ல, ஆணைக்குழுவின் பறிந்துரைக்கு அமைய மைத்திரி,ரணில், தேசபந்து கைது செய்யாயது ஏன்? போன்ற சுலோக அட்டைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏந்தி நின்றனர்.

## எவரையும் கட்சியிலிருந்து...

இணைத்துக்கொண்டது போன்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியை இணைத்துக்கொள்வீர்களா என்று ஓட்டமாவடி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.ஐ.முஹாஜிரீன் கேட்டதற்கே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸை தாய்வீடாக கருதும் யாருக்கும் இந்தக் கதவு திறந்திருக்கும். அதில் எந்த சந்தேகமும் கிடையாது.

ஆனால், அவர்கள் இணைய விரும்புகின்ற போது இந்தக் கட்சியின் பாரம்பரியத்துக்கமைய, கட்சியில் இருக்கும் அனைத்து முக்கியஸ்தர்களுடனும் கலந்துரையாடியதன் இறுதியில் சாத்தியமான முடிவை எடுக்கலாம். எதிர்காலத்தில் கட்சியில் யாரும் இணைய விரும்பினால், அது தொடர்பாக பரிசீலித்து இணைக்கப்படுவார்கள் என்றார்.

## இலங்கையில்...

பொருளாதாரத்தில், குறிப்பாக எரிசக்தி, சுற்றுலா மற்றும் உள்கட்டமைப்பு போன்ற முக்கிய துறைகளில் அதிக முதலீடுகளை இந்தியா ஊக்குவிக்கும். அதிக வணிக நட்பு சூழலை உருவாக்கும் விடயத்தில் இலங்கை அரசாங்கத்தை நாங்கள் நம்புகிறோம் என்று கூறினார். திருகோணமலையானது எரிசக்தி மையமாக உருவாக முடியும் என்று வலியுறுத்திய அவர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஒத்துழைப்பு தொடர்பில் இரு தரப்பினரும் கொள்கையளவில் இணங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார். இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் எதிர்பார்ப்புடன் சர்வதேச நாணய நிதியத்திற்கு இந்தியா நிதியுதவி உத்தரவாதத்தை வழங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நுவரெலியாவில்...

பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்துள்ளார். இதன்படி நுவரெலியா மாநகர சபை, ஹட்டன் டிக்கோயா நகர சபை, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்தை, அம்பகமுவை பிரதேச சபைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் யானை சின்னத்திலும் தலவாக்கலைலிந்துலை நகர சபை, நுவரெலியா, மஸ்கெலியா, அக்கரப்பத்தனை, நோர்வூட், கொட்டகலை பிரதேச சபைகளுக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சேவல் சின்னத்திலும் போட்டியிட உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸூம் இணைந்து போட்டியிட்டு அனைத்து சபைகளையும் கைப்பற்றி பெற்றுப்பெற போவதாகவும் ராமேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார்.

## 15 மாவட்டங்களில்...

அரசியல் கட்சிகள் பலவற்றினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பெருமளவு வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க நாட்டின் 15 மாவட்டங்களில் சுமார் 100 வேட்புமனுக்கள் இவ்வாறு நிராகரிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அதன்படி ஐக்கிய தேசியக் கட்சி பதுளை மாவட்டத்தில் ஹல்துமுல்ல பிரதேச சபை மற்றும் மகியங்கனை பிரதேச சபைக்காக தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஹலிஎல பிரதேச சபைக்காக தாக்கல்செய்த வேட்புமனுபத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஹெலிகொப்டர் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடும் சுதந்திர மக்கள் கூட்டணி அனுராதபுரம் மாவட்டத்தில் கல்நேவ பிரதேச சபைக்காக தாக்கல்செய்த வேட்புமனுப்பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச சபைக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி கந்தளாய் பிரதேச சபைக்காக தாக்கல்செய்த வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் திருகோணமலை மாவட்டத்தில் சேருவில பிரதேச சபைக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாக்கல்செய்த வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக 10 அரசியல் கட்சிகள் மற்றும் 3 சுயாதீன குழுக்கள் தாக்கல் செய்த வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட மற்றும் கலவான பிரதேச சபைகளுக்கு சோஸலிச சமாஜவாதி கட்சி தாக்கல்செய்த வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் காலி மாவட்டத்தில் உள்ளூராட்சி சபை தேர்தலுக்காக தாக்கல்செய்யப்பட்டிருந்த ஆறு வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

## GCE (A/L) பரீட்சை...

உள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார். இன்று ஆரம்பமாகும் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி 17ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் இம்முறை பரீட்சையில் பாடசாலைகள் மற்றும் தனியார் விண்ணப்பதாரிகள் 331,709பேர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பரீட்சை நிலையங்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மாணவர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இம்முறை பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காலத்திற்கு மேலதிகமாக மேலும் 10 நிமிடத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலாவது பாடம் நிறைவுற்றதும் மேற்படி 10 நிமிட காலத்தை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க காலை 8.30 மணிக்கு வினாத்தாள் மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டு முற்பகல் 11.40 மணிக்கு அது மீள பெறப்படுவதுடன் அதற்காக மூன்று மணித்தியாலங்களும் மேலதிகமாக பத்து நிமிடங்களும் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பரீட்சைகளில் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்து திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகியன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இன்று முதல் நாடளாவிய ரீதியில் 1617 பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் 16 புதிய ரயில் சேவைகளை ஆரம்பித்துள்ளதாகவும் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது. கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அவர்களது அனுமதிப் பத்திரத்தில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமாயின் ஒன்லைன் மூலமாக அதனை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் ஏற்கனவே அறிவித்திருந்தார். அதற்கிணங்க பாடசாலை மூலமான விண்ணப்பதாரர்கள் குறித்த திருத்தத்தை தமது பாடசாலையின் அதிபர் ஊடாக மேற்கொள்ள முடியும் என்றும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்திருந்தார்.

## தேர்தலை நடத்துவது,...

தேர்தலை பிற்போடும் நோக்கில் தேர்தல் செலவீனம் ஒழுங்குபடுத்தல் சட்டம் இயற்றப்படவில்லை எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தம் ஊடாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட அரசாங்கம் சூழ்ச்சி செய்வதாக அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்படுகிறது. தேர்தலை பிற்போடும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை எனவும் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## A/L பரீட்சை காலத்தில்....

இணக்கம் தெரிவித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமீத் ஜயசுந்தர தெரிவித்துள்ளார். நேற்று பரீட்சைகள் திணைக்களத்தில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும் பரீட்சைகள் இடம்பெறாத காலத்தில் இடைப்பட்ட நேரத்தில் சிறு நேரத்திற்கு மின் துண்டிப்பை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரவு நேரங்களில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதன் அவசியத்தை கருத்திற்கொண்டு மின் துண்டிப்பை மேற்கொள்ள வேண்டாமென பரீட்சைகள் திணைக்களம் விடுத்த வேண்டுகோளுக்கு மின்சார சபை இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மீண்டும் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு மின் துண்டிப்பை மேற்கொள்ளாமலிருப்பதற்கு கவனம் செலுத்தவேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், க.பொ.த. உயர்தரப் பரீட்சை இடம்பெறும் ஜனவரி 23 மற்றும் பெப்ரவரி 17க்கு இடைப்பட்ட நாட்களில் தொடர்ச்சியாக மின்சாரத்தைப் பெற்றுத்தருமாறு நாம் மின்சார சபையை கோரியிருந்தோம். பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவரும் அதுதொடர்பில் மின்சார சபை மற்றும் தனியார் மின்சார நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எனினும் மின்சாரம் வழங்குவதில் நிலவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் மின்சார சபை எமக்கு அறிவுறுத்தியுள்ளது. அவ்வாறு துண்டிப்பின்றி மின்சாரத்தை வழங்கும்போது, ஏற்படும் பாரிய செலவுகள் தொடர்பில் மின்சார சபை குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறெனினும் இந்தப் பரீட்சை நடைபெறும் காலத்தில் மாத்திரம் துண்டிப்பின்றி மின்சாரத்தை வழங்கவேண்டுமென்பதே எமது கோரிக்கையாகவிருந்தது. அதனையடுத்து தொடர்ச்சியாக மின்சாரத்தை வழங்குவதற்கு மின்சார சபை இணக்கம் தெரிவித்துள்ளது.

## குருநாகல் மாநகர...

செலவுத் திட்ட ஆவணம் நிறைவேற்றப்படாமை மற்றும் 2020 மாநகர சபையின் வரவு செலவுத் திட்டம் மற்றும் அமுலாக்க உத்தரவுகளுக்கு இணங்காத காரணத்தினால் குருநாகல் மாநகர முதல்வர் பதவி நீக்கப்பட்டுள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதவி நீக்கம் 2022 டிசம்பர் 31ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதாக ஆளுநர் வெளியிட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மாநகர முதல்வர் பதவி வெற்றிடமாக உள்ளதை கருத்தில் கொண்டு தற்போது பொறுப்புகள் பிரதி மாநகர முதல்வரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## உயிரிழந்த குடும்பத்தவர்கள் ....

நுவரெலியா ஹட்டன் பிரதான வீதியில் நானுஓயா, ரதெல்லை குறுக்கு வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பஸ், வான் மற்றும் முச்சக்கரவண்டி விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்கள் நேற்று முன்தினம் (21) நள்ளிரவு அவர்களது வீட்டுக்கு கொண்டுசெல்லப்பட்டன. விபத்தின்போது வானில் பயணித்த ஒரே குடும்பத்தை சேர்ந்த தாய், தந்தை, இரண்டு மகள்கள் மற்றும் மருமகன் ஆகியோரின் பூதவுடல் நள்ளிரவு 12.10 மணியளவில் ஹட்டன் டிக்கோயா ஜும்ஆப் பள்ளி வாசலுக்கு கொண்டுசெல்லப்பட்டன.

இதன்போது விபத்தில் உயிரிழந்த ஐந்து பேரின் முகங்களும் மூடப்பட்டிருந்த நிலையில், இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக அங்கே ஏராளமானோர் திரண்டு வந்திருந்தனர். பள்ளிவாசலில் உடல்கள் வைக்கப்பட்டிருந்ததை தொடர்ந்து, இஸ்லாமிய சம்பிரதாயப்படி முதலில் குடும்பத்தினர், அடுத்து பெண்கள், பின்னர், ஆண்கள் இறுதி அஞ்சலி செலுத்த வாய்ப்பளிக்கப்பட்டனர். மூன்று மணி நேரத்துக்கும் மேலாக இறுதி அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட்டதன் பின்னர், அதிகாலை 3 மணியளவில் ஜனாஸா தொழுகை நடாத்தப்பட்டு டிக்கோயா ஜும்மா பள்ளிவாசல் மயானத்தில் உடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டன.

## 13ஆவது திருத்தத்தை...

வேண்டும் என்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நீடித்துக்கொண்டிருக்கும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வினைக் காண வேண்டும் என்பதில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகுந்த கரிசனையுடன் இருக்கின்றார் எனவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில், தற்போது 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது.

குறித்த சட்டத்தினை அமுலாக்குவதில் உள்ள நடைமுறைப்பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக கவனத்தில் கொள்ளப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

## CID விசாரணைகள் ...

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த கொலை தொடர்பாக ஏற்கனவே பல கோணங்களில் விசாரணை நடத்தி வருவதாகவும், அடுத்த சில நாட்களில் முக்கிய தகவல்கள் வெளியாகலாம் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் பலவீனமடையவில்லை எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் தெரிவித்துள்ளார். கடந்த 15 ஆம் திகதி பொரளை பொது மயானத்தில் வர்த்தகர் தினேஷ் சாப்டர் காரில் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டதுடன், பின்னர் தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்திருந்தார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பில் இதுவரை சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், பொலிஸாரும் குற்றப் புலனாய்வுப்பிரிவினரும் இணைந்து கொலை சம்பவம் தொடர்பில் இதுவரை 175 க்கும் மேற்பட்டோரிடம் வாக்குமூலங்களை பதிவு செய்துள்ளனர். இதற்கமைய, குறைந்தபட்சம் 14 வழக்கு பொருட்கள் மற்றும் மாதிரிகள் பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

# யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவு சட்டவிரோதமானது

## மணிவண்ணன் தெரிவிப்பு

**யாழ். விசேட நிருபர்**




யாழ். மாநகர சபை முதல்வர் தெரிவு சட்டவிரோதமாக இடம்பெற்றிருப்பதால் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு உட்பட அனைத்து சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளவுள்ளதாக முன்னாள் மாநகர சபை முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார். வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாநகர முதல்வர் தொடர்பில் ஆரம்பம் தொட்டு சட்டவிரோதமாக செயற்பட்ட விடயமாகவே கருதுகின்றேன். இது திட்டமிட்ட நோக்கத்துடன் தங்களது தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஒருவரை நியமிக்க வேண்டும் என்கின்ற தேவைப்பாட்டின் அடிப்படையில் தெரிவு இடம்பெற்றிருக்கின்றது என்பதை நான் நம்புகின்றேன்.

உள்ளூராட்சி மன்றத்தின் சுற்றுநிருபம் ஒன்றில் இரண்டு முறைகள் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து வெல்லமுடியாது பதவி இழந்த ஒருவர் மீண்டும் பதவிக்கு போட்டியிடக்கூடாது என்று சுற்று நிருபத்தில் இருக்கின்றது.

அந்த சுற்று நிருபத்தை மீறி யாழ் மாநகர சபையின் முதல்வராக இம்மானுவேல் ஆனோல்ட்டின் பெயர் பரிந்துரைக்கப்பட்டது.

ஆகவே இலஞ்ச ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்வதிலிருந்து தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தயாராகி வருகின்றோம் என்றார்.

## யாழ். மாவட்டத்தில் பல உள்ளூராட்சி சபைகளை சுதந்திரக்கட்சி கைப்பற்றும் என நம்பிக்கை

**அங்கஜன் எம்.பி**




**சாவகச்சேரி விஷேட நிருபர்**

யாழ். மாவட்டத்தில் உள்ள பல உள்ளூராட்சி சபைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கைப்பற்றும் என்ற நம்பிக்கை இருப்பதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் உள்ள தெரிவத்தாட்சி அலுவலகத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்;

யாழ். மாவட்டத்தில் உள்ள 17 சபைகளுக்குமான வேட்புமனுத் தாக்கலை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மேற்கொண்டுள்ளது.

அத்துடன் கிளிநொச்சி,மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, வவுனியா,மட்டக்களப்பு உள்ளிட்ட மாவட்டங்களிலும் சுதந்திரக்கட்சி கை சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இம்முறை பல சபைகள் எம் கைவசம் வரும் என்ற மிகப்பெரிய நம்பிக்கை உள்ளது.மக்கள் மேல் நம்பிக்கை வைத்து எமது பிரசார நடவடிக்கைகளை ஆரம்பிக்கிறோம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

## கெருடாவில் கந்தசுவாமி ஆலயத்தில் திருட்டு

**சாவகச்சேரி விஷேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள கந்தசுவாமி ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதன்போது ஆலயத்தில் எழுந்தருளி இருந்த வள்ளி மற்றும் தெய்வானை ஆகியோரின் தாலி, ஆலய பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டிருந்த தேங்காய் எண்ணெய் மற்றும் பணம் ஆகியன திருடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



யாழ். மாநகர சபையின் முதல்வராக, முன்னாள் முதல்வர் இமானுவேல் ஆர்னோல்ட் மீண்டும் புதிய முதல்வராக பெறுப்பேற்றுக் கொண்ட போது,... படம்: யாழ்.விசேட நிருபர்

## முல்லைத்தீவில் 35 வேட்பு மனுக்களில் 6 வேட்பு மனுக்கள் நிராகரிப்பு

**மாங்குளம் குருப் நிருபர்**

முல்லைத்தீவில் 35 வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டதில் இலங்கை தமிழரசு கட்சியின் வேட்பு மனு உள்ளடங்கலாக 6 வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று, புதுக்குடியிருப்பு,துணுக்காய்,மாந்தை கிழக்கு ஆகிய நான்கு பிரதேச சபைகளிலும் போட்டியிடுவதற்காக 35 வேட்பு மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்காக 14 கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்காக 9 கட்சிகளும் மாந்தை கிழக்கு பிரதேச சபைக்காக 6 கட்சிகளும், துணுக்காய் பிரதேச சபைக்காக 6 கட்சிகளுமாக 35 வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன்படி ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் 12 கட்சிகளும் 2 சுயேட்சைகுழுக்களும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் 4 கட்சிகளினதும் ஜெயனாந்தன் தலைமையில் கட்டுப்பணம் செலுத்திய சுயேச்சைக் குழுவினுடைய வேட்பு மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

## முகமூடி கும்பலால் கோப்பாயில் ஒருவர் வெட்டிக்கொலை

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் கோப்பாய் மத்தி பகுதியில் குடும்பத்தலைவர் ஒருவர் துரத்தி துரத்தி வெட்டி படுகொலை செய்யப்பட்டுள்ளார் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் அப்பகுதியை சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அஜித் என அழைக்கப்படுவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 வாகனங்கள் அதிரடிப்படையால் கைப்பற்றல்



**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சரசாலை தெற்கு காட்டுப் பகுதியில் சனிக்கிழமை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 5 வாகனங்களை விசேட அதிரடிப் படையினர் மடக்கிப் பிடித்ததுடன் சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து பேரையும் கைது செய்துள்ளனர்.

இதன்போது மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர்கள் மற்றும் ஒரு மணல் அகழும் இயந்திரம் ஆகியன கைப்பற்றப்பட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

கைதான நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மத நிந்தனை குற்றச்சாட்டில் பாக். சிறுவன் கைது கோபதாபங்களை தீர்க்கவும் பயன்படுவதாக குற்றச்சாட்டு

மத நிந்தனை குற்றச்சாட்டின் கீழ் பாகிஸ்தானிய சிறுவன் கடத்தப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருப்பதாக இத்தாலிய பத்திரிகையான பிட்டர் வின்டர் தகவல் வெளியிட்டுள்ளது.

கடவுளை கொடுமையானவர் என்றும், ஓ கடவுளே, உம்முடைய தீர்மானங்களைப் பொறுத்தவரை நீர்தான் கொடுமையானவராக இருக்க வேண்டும் எனவும் சமூக வலைத்தளமொன்றில் இச்சிறுவன் பதிவிட்டிருந்ததையடுத்தே இவர் கைது செய்யப்பட்டிருப்பதாக அறிய முடிவதாக இப் பத்திரிகையில் கட்டுரை எழுதிய இத்தாலிய கட்டுரையாளர் மார்கோ ரெஸ்பிந்தி குறிப்பிட்டுள்ளார்.

இச் சிறுவன் இந்துக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்றும் தனது சமூகத்து இளம் பெண்கள் ஒவ்வொருவராக மதமாற்றம் செய்யப்படுவதைப் பார்க்கும்போது வேதனையாக இருப்பதாகவும் இப் பதிவில் அவர் குறிப்பிட்டதையடுத்தே மத நிந்தனையாகக் கருதப்பட்டு கைது செய்யப்பட்டான் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தானின் மத நிந்தனைச் சட்டம் தெளிவான வரையறைகளை கொண்டதல்ல என்றும் இச் சட்டத்தின் கீழ் ஒருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட முடிடியுமென்றும் இக் கட்டுரை சுட்டிக் காட்டியுள்ளது.

'லங்குமார்' என வலையதளத்தில் அறியப்படும் இச் சிறுவன் கடந்த நவம்பர் 22 முதல் காணாமல் போய் விட்டதாகவும் டிசம்பர் 27ம் திகதியே அவன் சிறை வைக்கப்பட்டிருப்பதாக தெரிய வந்தது என்றும் குடும்பத்தினர் கூறியுள்ளனர்.

பாகிஸ்தானில் வாழும் இந்து, கிறிஸ்தவ, அஹமதி மற்றும் சீக்கிய சமூகத்தினர் பலவந்தமாக மத மாற்றம் செய்யப்படுவதாகவும் இளம் பெண்கள் பலவந்தமாக இஸ்லாமிய இளைஞர்களுக்கு திருமணம் செய்து விக்கப்படுவதாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## வட இந்தியாவில் மகர சங்கிராந்தி அருணாசல பரசுராம குண்டத்தில் திரண்ட பக்தர்கள்

அருணாசல பிரதேசத்தில் அமைந்துள்ள பரசுராம குண்டம் மற்றும் மாலி நிதன் கோவில் என்பன இதிகாச பெருமை கொண்ட புனித தலங்களாகக் கருதப்படுவதால் தை மாத பிறப்புடன் வரும் மகர சங்கிராந்தி காலத்தில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளில் இருந்து வரும் பக்தர்கள் இங்கே பல்லாயிரக் கணக்கில் கூடுகின்றனர்.

தை பிறப்புடன் தமிழகத்தில் தைப் பொங்கல் கொண்டாடப்படுவதைப் போலவே இந்தியாவின் ஏனைய பிரதேசங்களில் இது மகர சங்கிராந்தி, பபுவுஷ் சங்கிராந்தி, லோகி, பிஹூ என்ற பெயர்களில் கொண்டாடப் பட்டு வருகிறது.

டிசம்பர் 12ம் திகதியோடு ஆரம்பமாகும் வடநாட்டு மகர சங்கிராந்தியின் போது லோஹித் ஆற்றின் கரையில் அமைந்துள்ள பரசுராமர் கோவிலுக்கு பக்தர்கள் கூடிவந்து புனித நீராடி வழிபடுகின்றனர். இங்கிருந்து சிறிது தூரத்தில் உள்ள பார்வதி கோவிலான மாலிநிதன் ஆலயத்தில் பெருமளவு பக்தர்கள் திரள்கின்றனர்.

இங்கே பூஜை செய்யும் பக்தர்கள் ஆகாச கங்கையில் நீராடுகின்றனர்.

பிரம குண்டத்துக்கு வந்த பரசுராமர் தன் தாயைக் கொன்ற பாவத்தை லோஹி ஆற்றில் கைகளைக் கழுவியதன் ஊடாகத் தீர்த்துக் கொண்டு விமோசனம் அடைந்தார் என்பது இங்குள்ள ஐதீகமாகும்.

## அருணாசல பிரதேசத்தில் நீண்ட சுரங்க வழிப்பாதை

### ஏப்ரலில் திறப்பு, போக்குவரத்தில் மேம்பாடு

அருணாசல பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆயிரத்து 790 மீட்டர் நீளமான இரட்டை சுரங்க போக்குவரத்து பாதைத் திட்டம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நிறைவு பெற்று திறந்து வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடல் மட்டத்தில் இருந்து 13 ஆயிரம் அடி உயரத்தில் அமைந்துள்ள இச் சுரங்க வழி போக்குவரத்து பாதையின் ஒரு சுரங்கத்தின் நீளம் ஆயிரத்து 790 மீட்டராகும். இரண்டாவது சுரங்கம் 475 மீட்டராகும்.

சேலா கணவாய்க்கு அடியில் அமைக்கப்பட்டு வரும் இச்சுரங்கப்பாதைத் திட்டப் பணிகளை 2019ம் ஆண்டு பிரதமர் நரேந்திர மோடி அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைத்தார்.

இத்திட்டம் நடைமுறைக்கு வந்ததும் டைராங் மற்றும் தவாங் இடையிலான பயண தூரம் 10 கிலோமீற்றரால் குறையும் என்பதோடு 12.4 கி.மீ தூர பாதை மூலம் தேசிய நெடுஞ்சாலையுடன் இணைக்கும்.

மலைப்பாங்கானதும் பின் தங்கியதுமான அருணாசல பிரதேசத்தின் வெளி மாகாணங்கள் உடனான தொடர்புகள் குறைவு, எனவே இச் சுரங்கப்பாதை மக்களின் மற்றும் வணிகர்களின் வெளி மாநிலத் தொடர்புகளை அதிகரிக்க உதவுவதோடு இராணுவ போக்குவரத்தை விரைவாக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### பாகிஸ்தானில் கோதுமை, தானிய விலை அதிகரிப்பு

## டொலர் நெருக்கடியால் துறைமுகத்தில் தானியங்கள் தேக்கம்

இறக்குமதி செய்யப்பட்ட தானியங்கள் டொலர் பற்றாக்குறை காரணமாக விடுவிக்கப்படாமல் துறைமுகத்தில் தேங்கிக் கிடப்பதால் பருப்பு, கடலை பயறு, கோதுமை உட்பட தானியங்களின் விலை கிடுகிடுவென அதிகரித்திருப்பதாகவும் இதனால் நாட்டில் போராட்டங்கள் வெடித்திருப்பதாகவும் பாகிஸ்தானின் 'டோன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த இரண்டு மாதங்களாக கராச்சி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 600க்கும் மேற்பட்ட தானிய கொள்கலன்கள் டொலர் பிரச்சினை காரணமாகத் தேங்கிக் கிடப்பதாகவும் கடந்த டிசம்பரில் கிலோ 170 ரூபாவாக விற்ற தானியங்களின் விலை தற்போது கிலோ 205 ரூபாவாக அதிகரித்திருப்பது இத்தேக்க நிலை காரணமாகவே என்றும் பண்டங்களின் இறக்குமதியாளரான அனீஸ் மஜீத் தெரிவித்திருப்பதாக இப்பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது.

பாகிஸ்தானில் டொலர் வரட்சி ஏற்பட்டிருப்பதால் அந்நாட்டு வர்த்தக வங்கிகள் பண்டங்களை வெளியே எடுத்துச் செல்வதற்கான பத்திரங்களை வழங்குவதில் இழுத்தடிப்பு செய்து வருவதாலேயே தானிய விலை சந்தையில் அதிகரித்து வருவதாக ஊடகங்கள் காரணம் காட்டியுள்ளன.

பாகிஸ்தானியரின் பிரதான உணவான கோதுமையின் விலை ஒரே மாதத்தில் மூடை ஆயிரம் ரூபாவால் அதிகரித்திருப்பதால் நாட்டில் வர்த்தகர்களும் மக்களும் ஆங்காங்கே போராட்டங்களில் ஈடுபட்டு வருவதாக 'டோன்' பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது.




# மறுவயற் பயிர்ச் செய்கையில் தன்னிறைவு காண்போம்

## விவசாயிகளே முன்வாருங்கள்





நாடளாவிய ரீதியில் நெல் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு வரும் விவசாயிகளை, மறுவயற் பயிர்ச் செய்கையிலும் பாரியளவில் ஈடுபடுத்துவதற்கு விவசாயத் திணைக்களத்தினால் ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மிகவும் மும்முரமாக தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது நாட்டில் பிரதான உணவாக நெல் அரிசிச் சோறு காணப்படும் பட்சத்தில் நெல் வேளாண்மைச் செய்கையில் தன்னிறைவைக் கண்டு வரும் விவசாயிகள், மறுவயற் பயிர்ச் செய்கையிலும் தன்னிறைவைக் காண வேண்டுமென்பதில் விவசாயத் திணைக்களம் ஆர்வம் காட்டி வருகின்றது. ஆகையினால், எமது நாட்டில் கடந்த 2021ஆம் ஆண்டிலிருந்து மறுவயற் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்கான ஊக்குவிப்பு நடவடிக்கைகள் விவசாயிகள் மத்தியில் விவசாயத் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆனால், எமது நாட்டில் மறுவயற் பயிர்ச் செய்கையானது இன்னமும் திருப்திகரமானதொரு நிலையை எட்டவில்லையெனவும் ஆயினும், இதில் விவசாயிகள் மிகுந்த ஆர்வம் காட்டும் பட்சத்தில் சிறந்த நிலையை எட்ட முடியுமெனவும், ஏறாவூர் விவசாய விரிவாக்கல் பிரிவின் விவசாயப் போதனாசிரியை எம்.எச்.முர்ஷிதா ஷிரீன் தெரிவித்தார்.

மறுவயற் பயிர்களானது பணப் பயிர், உப உணவுப் பயிர், மேட்டுநிலப் பயிர் ஆகிய மறு பெயர்களினால் அழைக்கப்படுவதுடன், இம்மறுவயற் பயிர்களானது பிரதானமாக நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவையாவன,

1. சரக்குப் பயிர்கள்:- மிளகாய், வெங்காயம் உள்ளிட்டவை
2. அவரைப் பயிர்கள்:- பாசிப்பயறு, உளுந்து உள்ளிட்டவை
3. வன் தானியப் பயிர்கள்:- சோளம், குரக்கன், இறுங்கு உள்ளிட்டவை
4. எண்ணெய் பயிர்கள்:- நிலக்கடலை, சூரியகாந்தி உள்ளிட்டவை அடங்கும்.

எமது நாட்டில் ஆரம்பக்காலத்திலிருந்து சேனைப் பயிர்ச் செய்கையின் கீழ் மறுவயற் பயிர்ச் செய்கை மேட்டுநிலங்களில் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், வயல் காணிகளிலும் இவை முன்னெடுக்கப்பட்டு வரப்படுகின்றன.

மேட்டுநிலத்தில் பூச்சியப் பண்படுத்தலுடன் மறுவயற் பயிர்ச் செய்கையை முன்னெடுக்க முடியுமென்பதுடன், வயல் காணிகளில் மூன்றாவது பயிர்ச் செய்கையின் கீழ் மறுவயற் பயிர்ச் செய்கையை முன்னெடுக்க முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

மறுவயற் பயிர்ச் செய்கையை எவ்வேளையிலும் மேற்கொள்ள முடியுமாகவிருந்த போதிலும், எமது நாட்டில் நெல் வேளாண்மைச் செய்கைக்கு முக்கியத்துவம் காணப்படுவதினால், பெரும்போகம் அல்லது காலபோகத்துக்கும் சிறுபோகத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வயல் காணிகளில் மறுவயற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் மேட்டு நிலத்தில் மறுவயற் பயிர்ச் செய்கையை எவ்வேளையிலும் மேற்கொள்ள முடியுமாகவிருந்த போதிலும், மாரி காலத்தில் மழை நீரை நம்பி அதிகளவில் மறுவயற் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது.

உளுந்து, பயறு, கௌப்பி, குரக்கன், சாமை, திணை, இறுங்கு, சோளம் உள்ளிட்ட சிறுதானியங்களும் உருளைக்கிழங்கு, வெங்காயம், மரவள்ளிக்கிழங்கு, மஞ்சள், இஞ்சி, கரும்பு, மிளகாய் உள்ளிட்ட பயிர்களும் மறுவயற் பயிர்களாகக் கொள்ளப்படுகின்றன.

இம்மறுவயற் பயிர்ச் செய்கைக்கான காலம் மிகவும் குறைவானதென்பதினால் மறுவயற் பயிர்ச் செய்கையை மேற்கொண்டு விவசாயிகள் சிறந்த பயனடைய முடியும். இம்மறுவயற் பயிர்ச் செய்கைக்கான காலமாக இரண்டரை முதல் மூன்று மாதங்கள் வரையே பிடிக்கும்.

உளுந்து, பாசிப் பயறு செய்கைக்கு இரண்டு முதல் இரண்டரை மாதங்களும் மிளகாய் செய்கைக்கு சுமார் இரண்டு மாதங்களுக்கு மேலும் சோளச் செய்கைக்கு மூன்றரை மாதங்களும் கௌப்பி செய்கைக்கு 45 நாட்கள் முதல் 90 நாட்களும் பிடிக்கும்.

மறுவயற் பயிர்ச் செய்கையினால் இயற்கையாகவே மண் வளமுடையதாக மாற்றப்பட்டு, போஷணை மிக்கதாக வலுவடையும். இதனால் பசளைக்கான தேவைப்பாடு குறைவடைவதினால், அதற்கான செலவீனம் குறைவடையும்.

மறுவயற் பயிர்ச் செய்கையை ஒவ்வொரு விவசாயிகளும் தங்களுக்குள்ள இட வசதிக்கேற்ப மேற்கொள்ள முடியுமென்பதுடன், தரிசு நிலங்களாகக் காணப்படும் இடங்களையும் மறுவயற் பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்த முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

நெல் வேளாண்மைச் செய்கையுடன் ஒப்பிடுகையில், மறுவயற் பயிர்ச் செய்கைக்குரிய செலவீனம் குறைவாகும். நெல் வேளாண்மைச் செய்கையை வருடத்தில் இரண்டு தடவைகள் மேற்கொள்ளும் அதேவேளை, மறுவயற் பயிர்ச் செய்கையை வருடத்தில் நான்கு தடவைகள் வெவ்வேறு மறுவயற் பயிர்ச் செய்கைகளாக மேற்கொள்ள முடியும்.

அத்துடன், மறுவயற் பயிர்ச் செய்கையினால் குறைந்த காலத்தில் நிறைந்த அறுவடையை விவசாயிகளினால் பெற்றுக்கொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித்தார்.

உணவாக உட்கொள்ளும் வேளையில் நெல் அரிசிச் சோறுக்கு பல்வேறுபட்ட கறிகள் தேவைப்படுகின்ற அதேவேளை, மறுவயற் பயிர்ச் செய்கையில் தானிய வகைகள், கிழங்கு வகைகளை சாதாரணமாக உட்கொள்ளமுடியும்.அத்துடன்,மறுவயற் பயிர்ச் செய்கையினால் கிடைக்கும் உணவுகள், போஷணை மிக்கதும் நஞ்சற்றதும் சுவை மிக்கதுமான இயற்கையான உணவுகளாகக் காணப்படுவதாகவும், அவர் தெரிவித்தார். மறுவயற் பயிர்ச் செய்கைகளை உச்சபட்சத்தில் மேற்கொள்ளும்போது, புதிய உணவுத் தயாரிப்புகளை கண்டுபிடிக்கும் சாத்தியமும் காணப்படும்.

ஆக மொத்தத்தில், மறுவயற் பயிர்ச் செய்கையினால் குறைந்த செலவில் நிறைந்த வருமானத்தை விவசாயிகளினால் ஈட்ட முடியுமென்பதுடன், எமது நாட்டிலிருந்து மறுவயற் பயிர்ச் செய்கையின் ஏற்றுமதியை அதிகரித்து பொருளாதார மேம்பாட்டுக்கு விவசாயிகள் முதுகெலும்பாக மாற முடியும். விவசாயிகளின் வாழ்க்கைத்தரமும் உயர்வடையுமெனவும், அவர் தெரிவித்தார்.

ஆர்.சுகந்தினி...



# விவசாயிகள், பண்ணையாளர்கள் ஒன்றிணைந்து சவால்களுக்கு தீர்வு

வேட்டையாடுவதிலிருந்து விவசாயத்துக்கு மாறிய மானிடன், அன்று முதல் இத்துறையில் பல சவால்களுக்கு உட்பட்டு வருகின்றான். இவன் எதிர்கொண்ட சகல சவால்களும் அவ்வக் காலங்களுக்கு ஏற்ப நெருக்கடியையே ஏற்படுத்தின. இருந்தாலும், விவசாயத்துறை வீழாமல் தொடர்ந்தும் முன்னேறுவதற்கு மானிடன் மேற்கொண்ட முயற்சிகள் வீண் போகவில்லை. தொழில்நுட்ப, விஞ்ஞான அறிவுகளை விவசாயத்துக்குள் நுழைத்து, இத்துறைக்கான சவால்கள் வெற்றி கொள்ளப்பட்டே வருகின்றன. எனினும், விவசாயத்துறை இன்றைய நவீன உலகில் எதிர்கொண்டுள்ள சவால்களில், உரம் பிரதான இடத்திலுள்ளது.

இரசாயன உரப் பாவனை மனிதனின் ஆயுளுக்கு ஆபத்தானதாகக் கருதப்பட்டு, சேதனப் பசளைக்கு மாறும் புதிய சிந்தனைகளும் உருவாகாமல் இல்லை. ஆனாலும், சர்வதேசக் கம்பனிகளின் கட்டுக்கடங்காத வியாபாரப் போட்டி, பொருள் முதன்மை வாதம் என்பன இச்சிந்தனைகளை வாழ வைப்பதாயில்லை. இதனால், விவசாயிகளின் சந்தை வாய்ப்புகளிலும் தளம்பல் நிலையே ஏற்படுகின்றது. பனி, மழை, வெய்யில், குளிர் மற்றும் இது போன்ற பல கடின காலநிலைகளை எதிர்கொண்டும் இராப் பகலாகக் கண் விழித்துப் பாடுபடும் விவசாயிகளினுடைய விளைச்சல்களின் விலைகளைக் கூட, இவர்களால் நிர்ணயிக்க முடியாதுள்ளது. நாட்டில் அண்மைக்காலமாக ஏற்பட்ட இரசாயனப் பசளை நெருக்கடியால், அதிகரித்த விலைக்கு விவசாயிகளால் இவற்றைக் கொள்வனவு செய்ய முடியாமல் போனது. இதனால், விவசாயிகள் இறுதியில் நட்டத்துக்கே ஆளாகினர்.

இந்நிலையில், சேதனப் பசளையை முற்றாகக் கைவிடாமலும் முழுமையாகப் பாவிக்காமலும் இடைப்பட்ட அளவில் பாவிப்பதற்கான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. நெற்செய்கையில், பொலன்னறுவை மாவட்டத்துக்கு அடுத்தபடியாக உள்ள அம்பாறை மாவட்டத்தில் இதற்கான வெள்ளோட்ட முயற்சிகள் நடைபெறாமலும் இல்லை. இம்மாவட்டத்தில் அதிகளவான நிலப்பரப்பு விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படுவதால், கால்நடை வளர்ப்பாளர்கள் தங்களது மாடு மற்றும் ஆடுகளுக்கு மேய்ச்சல் தரைகளின்றியும் உணவு வகைகளின்றியும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். இதனால், இம்மாவட்டத்தில் விவசாயிகள், கால்நடை வளர்ப்பாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. இப்பேச்சுகள் இணக்கப்பாடு எட்டப்படும் நிலைக்கும் முன்னேறியுள்ளது.

அறுவடை செய்யப்பட்ட விவசாய நிலங்களில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுதல், வேளாண்மைகளின் அடிக்கட்டைகளை (ஒட்டுக்கள்) கால்நடைகளுக்கு உணவாக வழங்குதல் என்பவையே இப்பேச்சுகளில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதனால், மேய்ச்சல்தரைப் பிரச்சினைக்கு தீர்வும் சேதனைப் பசளையைப் பெறுவதற்கு வழிகளும் பிறந்துள்ளன. வயல்களில் மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகளின் சாணம், சிறுநீர் என்பன வயல்களில் விழுவதால் நிலங்கள் பண்பட்டு விளைச்சலுக்கு உதவுகின்றது. அதிகரித்த விலையில் இரசாயனப் பசளையைப் பெறும் பிரச்சினைக்கு இது தீர்வாக அமைகின்றது. சேதனைப் பசளைகள் அதிகரித்த விளைச்சலைத் தராத போதிலும், மண்ணின் இயற்கைத் தன்மையைப் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றுகிறது.

எனவே, விவசாயிகளும் கால்நடை வளர்ப்பாளர்களும் இச்செயற்பாடுகளில் ஈடுபட்டு இவ்வெள்ளோட்ட முயற்சி வெற்றியளிக்க முன்வர வேண்டும்.

இதுபோன்று, அம்பாறை மாவட்டத்தில் சோளம் மற்றும் கரும்புச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும் நடைமுறைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். குரங்கு, பன்றி மற்றும் யானைகள் உள்ளிட்ட விலங்குகளால் ஏற்படும் அழிவுகள் ஒருபுறமிருக்க, சந்தைப்படுத்தலே இவர்களின் பிரதான பிரச்சினைகளாகி உள்ளன.

பெரும்பாலும் அம்பாறை மாவட்டத்தில் கிராமியப் பொருளாதார அளவில் சிறியளவிலான காணிகளிலேயே இவை செய்கைப் பண்ணப்படுவதுண்டு. இதனால், மொத்த வியாபாரிகளே இவர்களது விளைச்சல்களுக்கும் விலையை நிர்ணயிக்கின்றனர். தொழுவங்களில் அடைக்கப்பட்ட மாடுகள் இரவு வேளைகளில் வெளியேறி இவர்களது சோளம், கரும்புகளை உட்கொண்டு தீர்த்தால், இதற்கான நட்டஈட்டை கால்நடை வளர்ப்பாளர்களே செலுத்தவும் நேரிடுகிறது. இதனால் ஏற்படும் முரண்பாடு, மோதல்களைக் களையவும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுகின்றன.

ஏ.ஜீ.எம்.தௌபீக்...



## மக்களின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்த

# வேளாண்மைச் செய்கை

பாரம்பரிய நெல் வேளாண்மைச் செய்கையும் அதன் நடைமுறைகளும் மக்களின் வாழ்வியலுடன் மாத்திரமின்றி, அவர்களின் கலாசார விழுமியங்களுடனும் பின்னிப் பிணைந்துள்ளன.

புதிய அறுவடையின் மூலமாகக் கிடைக்கும் நெல்லிருந்து பெறப்படும் அரிசியில் பொங்கல் பொங்கி சூரிய பகவானுக்குப் படைத்து வழிபட்டு, தைப்பொங்கல் தினம் தமிழ் மக்களினாலும் விவசாயிகளினாலும் மிகச் சிறப்பாக தொன்றுதொட்டு கொண்டாடப்பட்டு வருகின்றது. சூரிய பகவானை இயற்கைக் கடவுளாகக் கருதியும் தமது வேளாண்மைச் செய்கைக்கு உதவி அளிப்பவனாகக் கருதியும் அச்சூரிய பகவானுக்கு நன்றிக்கடன் செலுத்தி, தமது விவசாயக் கடமைகளைச் செய்வதற்கு விவசாயிகள் ஆரம்பிக்கின்றார்கள்.

இந்நிலையில், தைப்பொங்கலுக்கு அடுத்த நாள் விவசாயத்துக்கு உயிர்த் தோழனாக விளங்குகின்ற கால்நடைகளுக்கு கௌரவமளிக்கும் வகையில் பட்டிப்பொங்கல் விழா விவசாயிகளினாலும் கால்நடை வளர்ப்பாளர்களினாலும் கொண்டாடப்படுகின்றது.

தைப்பூசத்தில் புதிர் எடுத்தல், சித்திரைத் திருநாளில் வயல்களுக்கு குப்பை எரு இடல், ஆடியில் கோடை உழவு செய்தல், வளர்பிறையில் விதை நாள் செய்தல், விஜயதசமியில் ஆயுத பூசை செய்தல், நெல் அறுவடைக்கு முன்னர் வயலுக்கு காய்ச்சிப் படைத்தல் போன்ற சம்பிரதாயங்கள் விவசாயிகளினால் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற அம்சங்களாகும்.

இந்நிலையில், புராதன காலத்திலிருந்து நெல் உற்பத்தியில் தன்னிறைவைக் கண்டு வரும் இலங்கை நாடானது, உலகின் கிழக்கு நெற்தானியக் களஞ்சியம் எனும் பெயருடன் பிரபலம் அடைந்திருந்ததுடன், ஏனைய நாடுகளுக்கும் உள்நாட்டு அரிசி வகைகளை வழங்கியிருந்தது.

இலங்கையில் நெல் அறுவடையானது தூயதாகவும் நல்லதாகவும் கருதப்பட்டது. நெல் அறுவடைச் செயன்முறையும் அதன் தூய இயல்பும் இலங்கையின் பாரம்பரிய நெல் அறுவடையை நிலையானது ஆக்கியது. இவ்வாறு நெல் வேளாண்மைச் செய்கையுடன் ஆரம்பிக்கப்பட்ட இலங்கையின் விவசாயப் பாரம்பரியமானது, நாகரிக வளர்ச்சிக்கு ஏற்பவும் சூழலுக்கு இசைவான வகையிலும் விவசாயத்துடன் இணைந்த வாழ்க்கை முறையின் ஊடாக உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்கான முறையில் தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்குடன் பரிணமிக்க ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கின் குரல்



# தேர்தல் தற்போது அவசியம் இல்லை

## தயாகமகே



**காரைதீவு குறூப் நிருபர்**

இன்றைய பொருளாதார நெருக்கடி மிகுந்த நிலையில் நாட்டுக்கு தேர்தல் அவசியமில்லை என்று அம்பாறை கச்சேரியில் வேட்புமனு தாக்கல் செய்து விட்டு வருகையில் ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான தயாகமகே தெரிவித்தார் .

மேலும் அவர் கூறுகையில்.

நாம் 19 சபைகளுக்கும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளோம். எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனவரி முதலாம் திகதி வந்த பொழுது மக்கள் பால் சோறு உண்டார்கள். இன்று தேர்தலை நோக்கி செல்கின்ற ஒரு ஜனநாயக சூழலை அவர் உருவாக்கியிருக்கின்றார்.

3/2 பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு ஆட்சி செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருந்த வேளையிலே மக்கள் வீதியில் இறங்கி போராடினார்கள். விளைவாக ஆட்சி கவிழ்க்கப்பட்டது. ஆனால் தனி மனிதனாக ரணில் விக்கிரமசிங்க இறங்கி இன்று மக்கள் ஓரளவு வாழ்க்கையை கொண்டுசெல்வதற்கு அளப்பரிய சேவையாற்றி வருகின்றார். எனவே அவருக்கு முதலில் நன்றி தெரிவிக்கின்றோம்.

ஜேவிபி, ஐக்கிய மக்கள் சக்தி போன்ற இரு கட்சிகளும் இந்த நாட்டை மேலும் அதலபாதாளத்துக்கு கொண்டு செல்வதற்காக திட்டமிட்டு தேர்தலை நடத்த வேண்டும் என்று கூறுகின்றது.

# தேர்தலுக்கான தனிவழியே தவிர, நிரந்தரப் பிரிவல்ல

## தவராசா கலையரசன் எம்.பி

**மணல்சேனை நிருபர்**



நாங்கள் தனித்து இந்தத் தேர்தலை முகங்கொடுக்கும் செயற்பாடு ஒரு நிரந்தரப் பிரிவை ஏற்படுத்துகின்ற செயற்பாடாக அமையாது. நாங்கள் கூட்டாக இருந்து எதிர்காலத்திலும் எமது மக்களின் பிரச்சினைகளைக் கையாளுவோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

அம்பாறை கச்சேரியில் தமிழரசுக் கட்சி சார்பில் வேட்புமனு கையளித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகரசபையை தவிர்த்து காரைதீவு, திருக்கோவில், ஆலையடிவேம்பு, பொத்துவில், நாவிதன்வெளி, சம்மாந்துறை போன்ற ஆறு தமிழ் பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை கையளித்துள்ளோம்.

ஜனநாயகம் பொருந்திய எமது தமிழரசுக் கட்சியிலே இம்முறை மக்களால் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். எனவே மக்கள் நிச்சயமாக எமது கட்சிக்கு உறுதியான ஆணையைத் தருவார்கள் என்று நம்புகின்றோம்.

மாகாண சபை மற்றும் இந்த உள்ளூராட்சி மன்றங்களிலேயே எமது அரசியல் அதிகாரம் அத்தியாவசியமானதாக இருக்கின்றது. அந்த அடிப்படையில் நாங்கள் பலமாக இருந்து செயற்பட்டு எமது மக்களையும், எங்கள் மக்களின் வாக்குகளையும் எமது அரசியற் பிரதிநிதித்துவத்தையும் காப்பாற்ற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.



களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் க.பொ.த. உயர்தரப் பரீட்சை நிலையங்களில் டெங்கு பரிசோதனை மற்றும் சுகாதாரம் தொடர்பான பரிசோதனைகள் நேற்று மேற்கொள்ளப்பட்ட போது,..

படம் பாண்டிருப்பு தினகரன் நிருபர்

# கஞ்சா கலந்த சுருட்டுடன் ஒலுவிலில் ஒருவர் கைது

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஒலுவில் பிரதேசத்தில் கேர்ளா கஞ்ஜா கலந்த சுருட்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின் படி குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்து கஞ்சா கலந்த சுருட்டும் கைப்பற்றப்பட்டுள்ளது

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றத்தில் சனிக்கிழமை (21) ஆஜர்படுத்திய போது எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# களுவாஞ்சிகுடி பொதுச்சந்தையில் பாவனைக்கு உதவாத மீன்கள்



**பாண்டிருப்பு தினகரன் நிருபர்**

களுவாஞ்சிகுடி பொதுச்சந்தையில் மனிதபாவனைக்கு உதவாத 20 கிலோவிற்கும் மேற்பட்ட மீன்கள் இனங்காணப்பட்டு பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் நேற்று (22) அழிக்கப்பட்டுள்ளது.

களுவாஞ்சிகுடி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் பிராந்தியத்திலுள்ள உணவகங்கள், வியாபார நிலையங்கள், பொதுச்சந்தைகள் ஆகியவற்றில் உணவுப் பரிசோதனை நடவடிக்கைகள் பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் உதயசூரிய தலைமையில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய களுவாஞ்சிகுடி பொதுச்சந்தையில் மேற்கொள்ளப்பட்ட உணவுப் பரிசோதனையின் போது மனிதபாவனைக்கு உதவாத வகையில் விற்பனை செய்யப்பட்ட 20 கிலோவிற்கும் மேற்பட்ட மீன்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களினால் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டன.

# நிலாவெளி, கும்புறுப்பிட்டி பப்பாசி செய்கையாளர்கள் பாதிப்பு



**தம்பலகாமம் குறூப் நிருபர்**

திருகோணமலை நிலாவெளி, கும்புறுப்பிட்டி முதலான பிரதேசங்களில் பப்பாசி செய்கையாளர்கள் இம்முறை பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கின்றனர்.

இதனால் தமது வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக பப்பாசி செய்கையாளர்கள் தெரிவிக்கின்றனர். இப்பகுதியில் சுமார் 10 ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதியில் செய்கை பண்ணப்பட்டு வருகின்றது. வெளிநாட்டு உல்லாச பயணிகளின் வருகை குறைவினால் பப்பாசிப்பழம் சரியான முறையில் விற்கப்படுவதில்லை. முன்னர் போல் அவர்கள் பழத்தை கொள்வனவு செய்ய வருவதில்லை என பப்பாசி செய்கையாளர்கள் கூறுகின்றனர். உள்ளூர் வியாபாரிகளினாலும் உரிய விலைக்கு வாங்கப்படுவதில்லை. இதனால் எமது பப்பாசி செய்கை இம் முறை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பப்பாசிக்கு தேவையான யூரியா,எம்.ஓ.பி, டி.எஸ்.பி முதலான பசளைகள் கிடைப்பதில்லை. அத்தோடு விலைகளும் அதிகரித்து காணப்படுகின்றன.



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடரும் மழை காரணமாக பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.காத்தான்குடி நகர சபை பிரிவில் இப்றாஹிம் மன்சில் வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளதை காணலாம். படம் மட்டக்களப்பு குறூப் நிருபர்

# வீட்டுச் சின்னத்தில் போட்டியிட போட்டிபோடும் வேற்பாளர்கள்

## சாணக்கியன் எம்.பி

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலே போட்டியிவதற்காக அணி அணியாக திரண்டு வந்தார்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக சனிக்கிழமை முற்பகல் வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

இதன் போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி நகர சபை தவிர்ந்த 11 உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி களமிறங்கியுள்ளது.

ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பெரும் போட்டிக்கு மத்தியில் தான் வேட்பாளர்களை தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

கோறளைப்பற்று பிரதேச சபையினுடைய வேட்புமனுத்தாக்கல் 11.56க்குத்தான் செய்தோம் ஏனென்றால் சனிக்கிழமை காலையிலும் கூட மிகவும் ஒரு போட்டித்தன்மைக்கு மத்தியில் தான் வேட்பாளர்களை நாங்கள் தெரிவு செய்துள்ளோம். அந்த அடிப்படையில் இந்த உள்ளூராட்சி சபை தேர்தல் நடக்கும் பட்சத்திலே வீட்டுச் சின்னத்தில் போட்டியிடும் இலங்கை தமிழ் அரசு கட்சி அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் ஆட்சியமைக்க கூடிய வகையில் ஆசனங்களை வெல்வோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.



# இறக்காமம் இக்றா வெற்றி



**ஹிங்குறாணை குறூப் நிருபர்**

இறக்காமம் இக்றா உதைபந்தாட்ட கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சினேகபூர்வ உதைப்பந்தாட்டப் போட்டி இறக்காமம் குளக்கரை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்த உதைப்பந்தாட்டப் போட்டிக்கு அட்டாளைச்சேனை ஹீறோஸ் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஹம்ஸா ஸனூஸ் மற்றும் இக்றா உதைப்பந்தாட்ட அணியின் முகாமையாளர் யூ.எல். றவூப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இப் போட்டியில் இறக்காமம் இக்றா உதைபந்தாட்ட அணியின் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான அணியினரும் மருதமுனை ஈஸ்ட் லங்கா உதைப்பந்தாட்ட அணியின் 40 வயதுக்கு மேற்பட்டோருக்கான அணியினருக்கும் இடையில் நடைபெற்றது.

இப் போட்டியில் இரு அணியினரும் போட்டி ஆரம்பத்தில் மிகவும் சிறப்பாக விளையாடியதுடன் இடைவேளைக்கு முன்னர் இறக்காமம் இக்றா உதைப்பந்தாட்ட அணியினர் முதலாவது கோலினை அடித்தனர். இடைவேளைக்கு பிந்திய ஆட்டத்தின் போது இறக்காமம் இக்றா உதைபந்தாட்ட அணியினர் மேலும் இரண்டு கோல்களை அடித்து இறக்காமம் இக்றா அணியினர் (3:0) எனும் கோல் வித்தியாசத்தில் வெற்றி பெற்றனர்.

# தென்கிழக்கு பல்கலை – பெரியார் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு உடன்படிக்கை

**ஒலுவில் விசேட நிருபர்**

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கும், இந்தியா தமிழ்நாடு பெரியார் பல்கலைக்கழகத்திற்குமிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை வெள்ளிக்கிழமை (20) இணையவழி ஊடாக கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகம் சர்வதேச ரீதியாக செயற்படுகின்ற பல்கலைக்கழகங்கள், கல்வி மற்றும் ஆய்வு சார்ந்த அமைப்புக்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டு, அவற்றினை பயனுள்ள வகையில் நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சர்வதேச விவகாரங்களுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.றியாட் றூளியின் தலைமையில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் கைச்சாத்திட்டுள்ளார். புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் கற்றல், கற்பித்தல், ஆய்வு மற்றும் புத்தாக்கத் துறைகளில் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்களும் பயனடைவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக, உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தெரிவித்தார்.

# நகர்வலம்



அநுராதபுரம் மாவட்டத்தில்

# 15 அரசியல் கட்சிகள், 09 சுயேச்சை குழுக்கள் வேட்புமனுத்தாக்கல்

## நான்கு வேட்புமனுக்கள் நிராகரிப்பு

**அநுராதபுரம் தினகரன், அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிடுவதற்காக அநுராதபுர மாவட்டத்தில் 15 அரசியல் கட்சிகளும் 09 சுயேச்சை குழுக்களும் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட அரசாங்க அதிபருமான ஜனக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

வேட்பு மனு தாக்கலின் பின்னர் அநுராதபுரம் மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதற்கமைவாக கடந்த 18 ஆம் திகதியில் இருந்து 21 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 12 மணிவரையான காலப்பகுதியில் அநுராதபுரம் மாவட்டத்தின் அநுராதபுரம் மாநகர சபை உள்ளிட்ட 19 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 142 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அதில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளில் இருந்து 133 வேட்புமனுக்களும் சுயேச்சைக்குழுக்களில் இருந்து 09 வேட்புமனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் நான்கு வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.



கலன்பிந்துனுவெவ, தலாவ, கெக்கிராவ பிரதேச சபை களுக்கு அறுணளு ஜனத்தா பெரமுன கட்சியால் செலுத்திய மூன்று வேட்புமனுக்களும் கல்னேவ பிரதேச சபைக்கு ஜனத்தா நிதகஸ் பெரமுனவால் தாக்கல் செய்த ஒரு வேட்புமனு அடங்கலாக நான்கு வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக மத்திய நுவரகம் பளாத்த பிரதேச சபைக்கு வேட்புமனு தாக்கல் செய்திருந்த இரு சுயேச்சைக் குழுக்களில் ஒரு சுயேச்சைக் குழுவினது வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

கட்சிகள் தாக்கல் செய்திருந்த சில வேட்புமனுக்களில் ஒருசில பெயர்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. அநுராதபுரம் மாநகர சபைக்கே அதிகளவிலான கட்சிகள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்துள்ளன. அதன் எண்ணிக்கை 11 ஆகும் என அரசாங்க அதிபரும் அநுராதபுரம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியுமான ஜனக்க ஜயசுந்தர மேலும் தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

# மு.கா மற்றும் அ.இ.ம.கா. கட்சிகள் தனித்து போட்டி

**அநுராதபுரம் மேற்கு தினகரன், திறப்பனை தினகரன் நிருபர்கள்**

அநுராதபுரம் மாவட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் மாவட்டத்தின் சில பிரதேச சபைகளில் தனித்துப் போட்டியிடுவதற்கு நேற்று முன்தினம் (21) வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

அதனடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கெக்கிராவ, கஹட்டகஸ்திகிலிய, பலாகல, இபலோகம, திறப்பனை மற்றும் ரம்பாவ பிரதேச சபைகளுக்கும். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பலாகல , ஹொரவப்பொத்தானை மற்றும் கஹட்டகஸ்திகிலிய பிரதேச சபைகளிலும் தனித்து போட்டியிடுவதாக கட்சியின் முக்கியஸ்தர்களான கே.எம்.எம்.ரபீக் (ஸ்ரீல மு.கா ) மற்றும் ஏ.ஆர்.எம். தாரிக் (அ.இ.ம.கா )ஆகியோர் தெரிவித்தனர்.

# ஈரானில் நடைபெற்ற மாநாட்டில் ஷிரந்தி ராஜபக்ஷ பங்கேற்பு



முன்னாள் முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ ஈரானின் தெஹ்ரானில் நடைபெற்ற செல்வாக்கு உள்ள பெண்களுக்கான முதல் சர்வதேச மாநாட்டில் பங்கேற்றேர். ஈரான் அரசின் அழைப்பின் பேரில் ஷிரந்தி ராஜபக்ஷ இந்நிகழ்வில் பங்கேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டில் புர்கினா பாசோ, கிர்கிஸ்தான், செர்பியா, கினியா, நைஜர், நைஜீரியா, இலங்கை, சிரியா, துர்க்மெனிஸ்தான், ஆர்மேனியா ஆகிய நாடுகளின் அரச தலைவர்களின் மனைவிகள், அமைச்சர்கள், துணை ஜனாதிபதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெண் விருந்தினர்கள் கலந்துகொண்டனர்.

# கோழி இறைச்சிக்கடை உரிமையாளர் சடலமாக மீட்பு; புத்தளத்தில் சம்பவம்

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம் வான் வீதியில் உள்ள கோழி இறைச்சி விற்பனை நிலையத்திற்குள் இருந்து அந்தக் கடையின் உரிமையாளர் உயிரிழந்த நிலையில் நேற்று முன்தினம் (21) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்தளம் வான் வீதியைச் சேர்ந்த பி.எம். ஜனாப் (வயது 63) எனும் குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த கோழி இறைச்சி விற்பனை நிலைய உரிமையாளரான உயிரிழந்த நபர் வழமை போன்று நேற்று முன்தினம் வர்த்தக நடவடிக்கைக்காக கடையை திறந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், குறித்த நபர் நண்பகல் மதிய உணவுக்காக வீட்டிற்கு வருகை தராததை அடுத்து, குடும்பத்தினர் மேற்படி கோழி இறைச்சி விற்பனை நிலையத்திற்கு சென்று பார்த்துள்ளனர்.

இதன்போது குறித்த நபர் விற்பனை நிலையத்திற்குள் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார். இதனையடுத்து, சம்பவம் பற்றி புத்தளம் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த புத்தளம் பொலிஸ் நிலையத்தின் குற்றப்பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்தனர். அத்துடன், புத்தளம் மாவட்ட நீதவான் சம்பவ இடத்திற்கு விஜயம் செய்து நீதிவான் விசாரணை முன்னெடுத்ததுடன், பிரேத பரிசோதனைக்காக சடலத்தை புத்தளம் தள வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த கோழி இறைச்சி விற்பனை நிலைய உரிமையாளரான பி.எம்.ஜனாப், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமின் மைத்துனர் (சகோதரியின் கணவர் ) என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு மாவட்ட புதிய செயலாளர் பதவியேற்பு



**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

கொழும்பு மாவட்டத்தின் புதிய செயலாளராக நியமனம் பெற்ற இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரி கே.ஜீ. விஜேசிறி மாவட்ட செயலகப் பணிமனையில் தனது பொறுப்புக்களை சுபநேரத்தில் ஆரம்பித்தார்.

இலங்கை நிர்வாக சேவையில் 1988 ல் இணைந்து கொண்ட இவர், புத்தளம் மாவட்ட செயலாளர், நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு செயலாளர் உள்ளிட்ட பல்வேறு அரச நிர்வாக சேவைகளில் பணியாற்றியுள்ள சிரேஷ்ட அதிகாரியாவார்.

# மோ. சைக்கிளில் இருந்த பயணப்பொதி மாயம்

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

மினுவாங்கொட நகர மத்தியில் அமைந்துள்ள நவீன ரக வர்த்தக நிறுவனத்துக்கு முன்பாக தரித்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்த பயணப் பொதியொன்று திருடப்பட்டுள்ளது .

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக மினுவங்கொட பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருடப்பட்ட பயணப் பொதியில் ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதியான மடிக்கணினி (லெப்டொப்), 16 ஆயிரம் ரூபாய் பெறுமதியான கையடக்க தொலைபேசி மற்றும் ஆயிரத்து ஐநூறு ரூபாய் பணம் ஆகியவை இருந்ததாக பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டதென மினுவங்கொட பொலிஸ் நிலையத்தின் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் நிமல் கருணாரட்ன தெரிவித்தார்.

மினுவங்கொட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் என். பீ.எஸ். ஜயலத் தலைமையில் பொலிஸ் அதிகாரிகள் இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





தைப்பொங்கலை முன்னிட்டு இந்து கலாசார திணைக்களம் ஏற்பாடு செய்த கலாசார நிகழ்ச்சிகளும் பரிசளிப்பு நிகழ்வும் சனிக்கிழமை (21) மாலை கொழும்பு விகாரமகாதேவி திறந்த வெளியரங்கில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். இந்நிகழ்வில் புரவலர் ஹாசிம் ஒமரும் கலந்து கொண்டார். (படம்: எம்.நசார்)

# வெலிகம மஸ்ஜிதுல் ஸலாமில் இரு பெரும் விழாக்கள்



**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம – கொரட்டுவ மஸ்ஜிதுஸ் ஸலாம் குர்ஆன் மத்ரஸாவின் முதலாவது வருட பூர்த்தி விழாவும் பரிசளிப்பு விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றன.

குர்ஆன் மத்ரஸாவின் அதிபர் எம். என்.எம். ஷஹான் (அல்முர்ஸி) தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அதிதிகளாக கொழும்பு பெரிய பள்ளிவாசல் கதீப் மௌலவி எம்.ஏ.எம். இப்லால் (பாரி), வெலிகம ஜம்இய்யதுல் உலமா சபை தலைவர் மௌலவி எம்.எஸ்.எம். பாயிஸ் (ஹிழ்ரி), முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாத்தறை மாவட்ட அதிகாரி வி.டி. ஹனூன் ஆசிரியர், பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் எம். யூ.எச். முஹம்மத் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மேலும் சிறப்பு பேச்சாளராக பாணந்துறை ஜாமிஆ இப்னு உமர் அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் மௌலவி எச்.எம்.எம். ஸப்வான் (இன்ஆமி) கலந்து கொண்டார்.



இந்நிகழ்வில், ஒரு வருட பூர்த்தியையொட்டி நடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கும் குர்ஆன் மத்ரஸாவின் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்த மாணவ மாணவிகளுக்கும் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

# கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் 'கிரசண்ட லைட்' நிகழ்வு

**ருஸைக் பாரூக்**



கொழும்பு சாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த "கிரசண்ட் லைட்" வருடாந்த இராப்போசன விருந்து சங்க தலைவர் அலவி முக்தார் தலைமையில் கொழும்பு ஷங்க்ரிலா ஹோட்டலில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக இலங்கைக்கான சவுதி அரேபியாவின் தூதுவர் கலாநிதி காலிட் மக்கி கலந்து கொண்டார். தேசத்திற்கு சேவையாற்றிய கல்லூரி மாணவர்களாகிய இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை பொலிஸை சேர்ந்த ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் பரீஸ் யூசுப், லெப்டினன்ட் கர்னல் எம். எஸ். இப்ராஹிம், கர்னல் ஆர்.டி. அன்சார் மற்றும் ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மாஅதிபர் டி.பி. சம்சுதீன் ஆகியோர் கௌரவிக்கபட்டனர். இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்கார் மற்றும் பழைய மாணவர்களான ஸாஹிரா கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளர் நுஸ்ரி முன்சூர், பிரதி சாரணர் ஆணையாளர் சக்காப் முஹீத், சட்டத்தரணி அஷ்ரோப் ரூமி மற்றும் காலஞ்சென்ற பெரோஸ் இன்ஹாம் ஆகியோரின் தன்னலமற்ற சேவைகளுக்காகவும் இங்கு பாராட்டப்பட்டது.

# அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலைக்கு புதிய மண்டபம்

**பேருவளை விசேட நிருபர்**



தர்கா நகர் அளுத்கம வீதிய முஸ்லிம் மகளிர் தேசிய பாடசாலையில் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் கலாசார மண்டபமொன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிமின் நிதி உதவியுடன் மேற்படி கலாசார மண்டபம் அமைக்கப்பட்டு வருவதோடு இதன் நிர்மாண வேலைகள் 90 சதவீதமளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மேற்படி புதிய மண்டபம் இம்மாதம் இறுதியில் வைபவரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளதாக அதிபர் பி.எம். எம்.ஜாபிர் தெரிவித்தார். இக் கட்டிடத்திற்கு "நஜீப் ஹாஜியார் கலாசார மண்டபம்" என பெயரிடப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நஜீப் ஹாஜியார் கல்வி நிலையம் தர்கா நகரின் கல்வி முன்னேற்றத்திற்காக பல பாரிய பணிகளைச் செய்து வருகின்றமை விசேட அம்சமாகும்.




வெலிகம அறபா தேசிய பாடசாலையின் 93 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/த) மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்.

# தேசிய புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியிலுள்ள நெருக்கடிகள்: தீர்க்குமாறு ஜனாதிபதிக்கு கோரிக்கை முன்வைப்பு




தேசிய புதுப்பிக்கத்தக்க வலு சக்தி தொழில் துறையினர் எதிர்காலத்தில் தேசிய மின்கட்டமைப்புக்கு தங்களால் வழங்கப்படும் மின்னுற்பத்திக்கு பாதிப்பு ஏற்படலாம் என புதுப்பிக்கத்தக்க வலு சக்தி சங்கத்தின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

சிறு மின்னுற்பத்தியாளர் சங்கத்தின் செயலாளர் வருண தஹநாயக்க இது தொடர்பில் கருத்து தெரிவித்த போது,

இலங்கை தேசிய மின்கட்டமைப்புக்கு புதுப்பிக்கத்தக்க வலு சக்தி வருடத்திற்கு 15%-16% வீத பங்களிப்பை வழங்கி வருகிறது. இன்றைய நிலையில் சிறு மின்னுற்பத்தி நிலையங்களில் 7000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். இவற்றுக்கான பராமரிப்பு வேலைகளை செய்ய முடியாத சூழ்நிலைக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவித்தார். இதற்கு தீர்வை பெற்றுத் தருமாறு ஜனாதிபதி மற்றும் மின்சக்தி அமைச்சருக்கு வேண்டுகோள் விடுப்பதாக தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, பொருளாதார நெருக்கடியும் இதற்கான காரணமாக நாம் கருதுகிறோம்.இன்றைய மின் கண்டன அதிகரிப்பு அனைவருக்கும் பெரும் தாக்கத்தை செலுத்திலுள்ளது. இதை நிறுத்தக் கூடிய சக்தி எமக்குள்ளது. தேசிய மின் கட்டமைப்புக்கு நாம் 1500 மொவோட் மின்சாரத்தை நாம் வழங்கி வருகிறோம். இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியால் தேசிய முதலீட்டாளர்களே பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் சிறு மின்னுற்பத்தி நிலையங்களை அமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது இப்பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு பெற்றுத் தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சிறு நீர் மின்னுற்பத்தி நிலையங்கள்,காற்றாடி மின்னுற்பத்தி மற்றும் சூரியசக்தி மின்னுற்பத்தியாளர்களே மின்கட்டத்தை ஒரு மட்டத்தில் வைத்திருப்பதற்கு பெரும் பங்காற்றியுள்ளனர். எமது கட்டமைப்பால் தேசிய மின்கட்டமைப்புக்கு வழங்கப்படும் 1250 மெகாவோட் மின்சாரம் நிறுத்தப்படுமனால் அதிக விலை கொடுத்தே மின்சாரத்தை பெறவேண்டி ஏற்படும்.





வத்தளை யோக் சர்வதேச பாடசாலையின் தைப் பொங்கல் பண்டிகை கல்லூரியின் அதிபர் திருமதி ஷினாலி பெரேரா தலைமையில் நடைபெற்றபோது பிடிக்கப்பட்ட படங்கள். *(படங்கள்: சுதத் மலவீர)*

## இளைஞர் பாராளுமன்ற பிரதியமைச்சர் சுவிற்சர்லாந்து தூதுவருடன் சந்திப்பு

**ருஸைக் பாரூக்**

இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதி அமைச்சர் அஹ்மத் சாதிக் மற்றும் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் முப்தி முயீன் இலங்கைக்கான சுவிற்சர்லாந்து நாட்டின் தூதுவர் Dr. Dominik Furgler அவர்களை சுவிற்சர்லாந்து தூதரகத்தில் சந்தித்தனர்.

இச்சந்திப்பில் இலங்கையினதும் சுவிற்சர்லாந்து நாட்டினதும் வெளிவிவகார மற்றும் ராஜதந்திர உறவுகள் தொடர்பாகவும் இளைஞர்களுக்கான வெளிவிவகார வாய்ப்புகள் உட்பட கல்வி, வேலைவாய்ப்பு, விளையாட்டு மற்றும் தலைமைத்துவம் போன்ற துறைசார் வகிபாகங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன.

## இலங்கை வங்கி

### ஏலவிலை கூறலுக்கான அழைப்பு

**ஏலவிலைகூறலை மூடுவதற்கான திகதியை நீடித்தல்**

**ஏலவிலை கோரல் இல. : P/PROC/2022/238**

2022.12.28ஆம் திகதியன்று "தினகரன்" பத்திரிகையில் வெளியிடப்பட்ட 2,000,000 Visa மற்றும் MasterCard இரட்டை இடைமுக (Dual Interface) கொடுப்பனவு அட்டைகளை வழங்குதல் தொடர்பிலான விளம்பரத்திற்கு மேலதிகமாக,

இவ் விலைகூறலை மூடும் திகதி 2023.02.08 1000 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை கவனத்திற் கொள்ளவும்.

விலைகூறல் ஆவணங்களை, இலங்கை வங்கியின் தலைமைக் காரியாலயம் சொத்துக்கள் மற்றும் சேகரிப்புப் பகுதியில், 2023.02.07ஆம் திகதி வரை கடமை தினங்களில் 0900 மணி முதல் 1400 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏலவிலை பிணையானது 2023.07.06ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

பிரதான முகாமையாளர்
சொத்துக்களும் சேகரிப்பும் பகுதி
14ஆம் தளம், இலங்கை வங்கி,
"இலங்கை வங்கிச் சதுக்கம்", இல.01,
இலங்கை வங்கி மாவத்தை,
கொழும்பு - 01.
தொலைபேசி இல. 2544310, 2434786

1975 BOC CALL CENTRE www.boc.lk

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## கேள்வி அறிவித்தல்

### மாவட்ட செயலகம் - திருகோணமலை

திருகோணமலை மாவட்ட பெறுகை சபை தலைவரால் கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டம் தொடர்பாக 2023.02.14ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை முத்திரையிடப்பட்ட கேள்விக்கோரல் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு கேள்விக்கோரல் படிவங்கள் இப்பணிமனையில் திறக்கப்படும்.

| (I) பெறுகை இலக்கம் | (II) வேலைவிபரம் | (III) ஒப்பந்தமுறி (ரூபா) | (IV) ஒப்பந்தக் காலம் | (V) மீளளிக்கப் படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| GAT/FIN/PU09/ CLEAN/2023 | திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் அலுவலக பூமி அரசாங்க அதிபர் விடுதி மற்றும் சங்கமித்தா ஓய்வு விடுதிக்கு சுத்திகரிப்பு சேவை வழங்குதல் | ரூபா. 100,000/- | 01.03.2023 -29.02.2024 | ரூபா.1000 /- |

02. இக் கேள்வி அறிவித்தல் தேசிய விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். ஆனாலும் கிழக்கு மாகாண எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் சுத்திகரிப்பு சேவையினை சரியான முறையில் நிறைவேற்றாத அல்லது ஒப்பந்த நிபந்தனைகளை மீறிய ஒப்பந்தக்காரர்களுக்கு பெறுகைக் கோரல் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

03. 24.01.2023முதல் 13.02.2023ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை கேள்விகோரல் விண்ணப்பப்படிவங்களை மீளளிக்கப்படாத வைப்புப் பணம் ரூபா.1000/- செலுத்தி திருகோணமலை மாவட்ட செயலக கணக்கு கிளையில் பெற்றுக்கொள்ள முடியும்.

04. மேற்குறிப்பிட்டுள்ள அட்டவணையின் IIIவது நிரலில் குறிப்பிட்டுள்ள தொகைக்குக் குறையாத தொகையுடையதாக (104 நாட்களுக்கு செல்லுபடியாகும்) பெறுகை சபைத் தலைவருக்கு முகவரியிடப்பட்ட அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட முறிஒன்றுடன் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகைக் கோரல் படிவத்தின் இரண்டுபிரதிகளை 13.02.2023ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்குமுன் கிடைக்கும் வண்ணம் **'பெறுகை சபைத் தலைவர் அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும் மாவட்ட செயலகம் திருகோணமலை'** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது பிரதான கணக்காளரின் அலுவலக அறையிலுள்ள பெறுகைக் கோரல் பெட்டியினுள் இடுதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் '**திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கான சுத்திகரிப்பு சேவை வழங்குதல் தொடர்பான கேள்விப்பத்திரம்**' என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

05. இது தொடர்பான மேலதிக விபரங்களை திருகோணமலை மாவட்ட செயலகத்தின் கணக்கு கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 026-2223555 தொலைநகல்- 0262228310

06. ஒப்பந்தம் வழங்குவது தொடர்பில் பெறுகைச்சபையின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

**பி.எச் என். ஜயவிக்ரம**
**அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்**
**பெறுகை சபைத் தலைவர் மாவட்டசெயலகம்**
**திருகோணமலை.**

**2023.01.20**

Ministry of Agriculture கமத்தொழில் அமைச்சு THE WORLD BANK

**කෘෂිකර්ම අංශය / விவசாயப் பிரிவு / Agriculture Division**
**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**கமத்தொழில் அமைச்சு**
**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்**

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

**சீத்தாஎலிய விதை பண்ணையில் 4 எண்ணிக்கையான 400 m2 G1 உற்பத்தி பொலி சுரங்கங்களை (400 m2 GI Producing poly - tunnels) நிர்மாணித்தல் மற்றும் G1 உருளைக்கிழங்கு விதை உற்பத்தி பொலி சுரங்கத்தை Aero Phonic Pre-Basic Seed Potato G0 உற்பத்தி முறைமையாக மாற்றுதல்**

**ஒப்பந்த இல. LK-MOA-PMU-260259-CW-RFB**
**மற்றும்**
**LK-MOA-PMU-261121-CW-RFB**

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட கிரயச் செலவிற்காக 58.630 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. பின்வருமாறு விபரப்படுத்தப்பட்டதும் கீழே காட்டப்பட்டுள்ள உருப்படிகளுக்காக தகுதியும் தகைமையும் வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் (ASM) செயற்றிட்டத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகை குழுத் தலைவர் முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை வெவ்வேறாக இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விபரம் | பெசேவ நீங்கலாக மதிப்பிடப்பட்ட கிரயச் செலவு (மில். ரூ.) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவையான தரம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை ரூபா | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத பண வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-260259-CW-RFB | சீத்தாஎலிய விதை பண்ணையில் 4 எண்ணிக்கையான 400 m2 G1 உற்பத்தி பொலி சுரங்கங்களை நிர்மாணித்தல் | 36.1 | 5 மாதங்கள் | C5 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 542,000.00 | 2023 ஜுலை 17ஆம் திகதி வரை | 8,000.00 |
| LK-MOA-PMU-261121-CW-RFB | G1 உருளைக்கிழங்கு விதை உற்பத்தி பொலி சுரங்கத்தை Aero Phonic Pre-Basic Seed Potato G0 உற்பத்தி முறைமையாக மாற்றுதல் | 160 மில்லியன் | 8 மாதங்கள் | C5 அல்லது அதற்கு மேல் கட்டிட நிர்மாணம் | 2,400,000.00 | 2023 ஜுலை 31ஆம் திகதி வரை | 28,000.00 |

3. விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு மேலேயுள்ள வேலைக்காக விலைக்கோரல் பிணை முறி மற்றும் மேற்கூறப்பட்ட திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப்பிணையுடன் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு ஒரு விலைமனுதாரர் ஒரு விலைக்கோரலுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார். சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பதிலளிக்கக்கூடிய நிர்மாணத் துறைக்கான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்

4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான (NCB) விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும்.

5. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.

6. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112073044/0714961603/0714881265 தொலைநகல்: 0112877546) (மின்னஞ்சல்: procurementspasmp@hotmail.com) மற்றும் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

7. பத்தரமுல்ல, இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனையில் 2023 ஜனவரி 30ஆம் திகதி பி.ப. 1.00 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

8. விலைமனுக்கள் பின்வரும் வகையில் செல்லுபடியாதல் வேண்டும்.
   8.1 LK-MOA-PMU-260259-CW-RFB - 2023 ஜுன் 20ஆம் திகதி வரை
   8.2 LK-MOA-PMU-261121-CW-RFB - 2023 ஜுலை 03ஆம் திகதி வரை

9. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. ஒரு விலைக்கோரல் ஆவணத்திற்கு மேற்கூறப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி பத்தரமுல்ல, இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனைக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் பின்வரும் காலப்பகுதி வரையில் ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
    10.1 LK-MOA-PMU-260259-CW-RFB - 2023 ஜனவரி 23ஆம் திகதி முதல் 2023 பெப்ரவரி 20ஆம் திகதி வரை
    10.2 LK-MOA-PMU-261121-CW-RFB - 2023 ஜனவரி 23ஆம் திகதி முதல் 2023 மார்ச் 07ஆம் திகதி வரை

11. விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதிகள் பின்வருமாறாகும்.
    11.1 LK-MOA-PMU-260259-CW-RFB - 2023 பெப்ரவரி 20ஆம் திகதி
    11.2 LK-MOA-PMU-261121-CW-RFB - 2023 மார்ச் 07ஆம் திகதி

12 விலைமனுக்களை மேற்கூறப்பட்ட திகதிகளில் பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, இல. 123/2, பன்னிபிட்டிய வீதி, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. 2023 பெப்ரவரி 13ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு மேற்படி முகவரியில் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு விலைமனுதாரர்களால் தெரிவு செய்யப்பட்ட நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

13. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன வெவ்வேறாக 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளடக்கப்பட்டு பின் அவ்விரு தபாலுறைகளையும் வேறொரு தபாலுறையில் இடப்பட்டு, முத்திரைக் குறியிடப்பட்டு, ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் என்பவற்றை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**
**2023 ஜனவரி 22ஆம் திகதி.**

## இலங்கை துறைமுக அதிகார சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | கேள்விப் பிணைத் தொகை (ரூபா) | ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது) | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CMS/LP/21/PT/09/005 | Luggage Scanners | 300,000.00 | 3500.00 | 02.02.2023 13.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 ஜனவரி 23ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை,**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் எண் : 2381652, 2470443**

# பெறுகை அறிவித்தல்

## தனமல்வில பிரதேச சபை

### 2023 ஆண்டில் மூன்றாண்டுகளிற்கான குத்தகை அடிப்படையில் ஆதனங்களை குத்தகைக்கு விடுதல் (கடை அறைகள் கீழ் மாடி தரை மற்றும் மேல் மாடி தரை)

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தனமல்வில பிரதேச சபைக்கு உரித்தான ஆதனங்களின் வர்த்தக உரிமையை 2023 ஆண்டில் குத்தகைக்கு விடுவதற்காக கீழ்க்காணப்படும் விபரங்களிற்கமைவாக என்னால் கேள்வி விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. பெறுகை விண்ணப்பப்படிவங்களை வழங்கல்: 2023.01.20 முதல் 2023.02.06 வரை மு.ப. 10.30 மணிக்கு வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மாத்திரம் வழங்கப்படும். எந்தவொரு இலங்கைப் பிரஜையும் இதற்கான கேள்விப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாமென்பதுடன் அவ்வேளையில் தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் போட்டோ பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

02. கேள்விக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளல்: 2023.02.06 அன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அல்லது நேரடியாகக் கொண்டு வந்து இச்சபையில் உள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளல் வேண்டும்.

03. கேள்விகளைத் திறத்தல்: 2023.02.06 பி.ப. 1.00 இற்கு தனமல்வில பிரதேச சபை அலுவலகத்தில், நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் முன்னிலையில் மேற்கொள்ளப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் எழுத்துமூல அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

04. கேள்விக்கான நிபந்தனைகள் மற்றும் தகவல்கள் தேவையெனின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

| இல. | பதவி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| 1 | அலுவலகம் | 0472234075 |
| 2 | தலைவர் | 0718127422 |
| 3 | செயலாளர் | 0718045944 |
| 4 | விடய அலுவலர் | 0707000988 |

05. அனைத்துப் பெறுகை நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் அடங்கிய பெறுகை அறிவித்தல்களை இவ் அலுவலகத்தில் நேரில் சமுகமளித்து அல்லது தேவையெனின் தபால், தொலை நகல், மின்னஞ்சல் போன்ற எந்தவொரு ஊடகத்தின் ஊடாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் இறுதி அதிகாரம் பெறுகைக் குழுவிற்கு மற்றும் கௌரவ தலைவருக்கு உரித்தாகும்.

**அட்டவணை - 1**

| தொடர் இலக்கம் | ஆதனங்கள் | நீளம் X அகலம் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா | படிவக் கட்டணம் ரூபா | பிணை வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|
| 01 | மஹரகம வாரச்சந்தைக்கு அண்மையில் தரைமாடி கடை அறை நில இலக்கம் 14 முதல் 17 வரை | 21 X 12.5 | ரூ. 350000.00 | ரூ. 5000.00 | ரூ. 1000.00 |
| 02 | மஹகம வாரச்சந்தைக்கு அண்மையில் மேல்மாடி கடை அறை தரை இல. 13 முதல் 17 வரை | 21 X 12.5 | ரூ. 300000.00 | ரூ. 5000.00 | ரூ. 1000.00 |
| 03 | டங்டும வாரச்சந்தைக்கு அண்மையில் தரைமாடி கடை அறை தரை இல. 13 | 21 X 12.5 | ரூ. 300000.00 | ரூ. 5000.00 | ரூ. 1000.00 |
| 04 | ஹம்பெகமுவ வாரச்சந்தைக்கு அண்மையில் தரைமாடி கடை அறை இல. 1, 2 | 21 X 12.5 | ரூ. 50000.00 | ரூ. 2000.00 | ரூ. 1000.00 |
| 05 | மஹவெவ வாரச்சந்தைக்கு அண்மையில் மேல்மாடி கடை அறை தரை இல. 7,8 | 21 X 12.5 | ரூ. 25000.00 | ரூ. 2000.00 | ரூ. 1000.00 |
| 06 | மஹவெவ வாரச்சந்தைக்கு அண்மையில் மேல் மாடி கடை அறை தரை இல. 1 முதல் 8 | 21 X 12.5 | ரூ. 15000.00 | ரூ. 1000.00 | ரூ. 1000.00 |
| 07 | 16 1/2 வாரச்சந்தைக்கு அண்மையில் மேல்மாடி கடை தரை இல. 8 முதல் 19 | 21 X 12.5 | ரூ. 15000.00 | ரூ. 1000.00 | ரூ. 1000.00 |
| 08 | 16 1/2 வாரச்சந்தைக்கு அண்மையில் கீழ்மாடி கடை அறை இல. 13 B | 21 X 12.5 | ரூ. 400000.00 | ரூ. 3000.00 | ரூ. 1000.00 |
| 09 | கிரிஇப்பன் ஆர வாரச்சந்தைக்கு அண்மையில் கடை தரை இல. 1 முதல் 14 வரை | 21 X 12.5 | ரூ. 125000.00 | ரூ. 5000.00 | ரூ. 1000.00 |
| 10 | நுகேகலயாய வாரச்சந்தைக்கு அண்மையில் மேல்மாடி கடை தரை 1, 2, 3 | 21 X 12.5 | ரூ. 20000.00 | ரூ. 1000.00 | ரூ. 1000.00 |
| 11 | தனமல்வில நகரம் இல. 12-1 கடை அறை (வருடாந்த குத்தகை) | 21 X 12.5 | ரூ. 150000.00 | ரூ. 5000.00 | ரூ. 1000.00 |
| 12 | தனமல்வில வாரச்சந்தை பின்னால் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் கீழ் மாடியில் இல. 8 கடை தரை | 21 X 12.5 | ரூ. 50000.00 | ரூ. 5000.00 | ரூ. 1000.00 |
| 13 | தனமல்வில நகரம் இல. 7 ஏ கடை அறை தரை கீழ் மாடி | 21 X 12.5 | ரூ. 100000.00 | ரூ. 5000.00 | ரூ. 1000.00 |
| 14 | தனமல்வில நகரம் இல. 7 ஏ கடை அறை தரை மேல் மாடி | 21 X 12.5 | ரூ. 50000.00 | ரூ. 5000.00 | ரூ. 1000.00 |

**அட்டவணை - 2**

| தொடர் இலக்கம் | ஆதனத்தின் பெயர் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா | படிவக் கட்டணம் ரூபா | வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1 | தனமல்வில பொதுக் கழிவறை | 18,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 2 | தனமல்வில மீன் தட்டு | 4,500.00 | 1,000.00 | 1,000.00 |
| 3 | நுகேகலயாய வாரச் சந்தை | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |
| 4 | ரங்வெலிகக வாரச் சந்தை | 25,000.00 | 1,000.00 | 1,000.00 |

**வசந்த லியனகமகே**
**தலைவர்,**
**பிரதேச சபை,**
**தனமல்வில.**

Ministry of Agriculture
THE WORLD BANK

**කෘෂිකර්ම අංශය / விவசாயப் பிரிவு / Agriculture Division**
**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**கமத்தொழில் அமைச்சு**
**விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்றிட்டம்**

**IDA Credit No.: 5873 LK**

# பெறுகை அறிவித்தல்

## மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளயில், வேவலாவெவ கொத்தணியில் 14 குழாய்க் கிணறுகளை நிர்மாணித்தல்

## (Construction of 14 Tube wells in Wewalawewa Cluster, Dambulla in Matale District, Central Province)

**ஒப்பந்த இல. LK-MOA-PMU-277534-CW-RFB**

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட கிரயச் செலவிற்காக 58.630 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகரான தொகையை பலவிதமான பணத்தொகைகளில் கடனொன்றை சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடனின் பெறுகைகளின் பகுதியொன்றை பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள வேலைகளுக்கு கீழுள்ள தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிடுவதற்கு உத்தேசித்துள்ளது.

2. பின்வருமாறு விபரப்படுத்தப்பட்டதும் கீழே காட்டப்பட்டுள்ள உருப்படிகளுக்காக தகுதியும் தகைமையும் வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத் துறை நவீனமயமாக்கல் (ASM) செயற்றிட்டத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகை குழுத் தலைவர் முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை வெவ்வேறாக இப்போது அழைக்கின்றார்.

| ஒப்பந்த இல. | வேலைகளின் விபரம் | பெசேவ நீங்கலாக மதிப்பிடப் பட்ட கிரயச் செலவு (மில். ரூ.) | ஒப்பந்தக் காலப் பகுதி | தேவையான தரம் | விலைக் கோரல் பிணை முறித் தொகை ரூபா | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத பண வைப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| LK-MOA-PMU-277534-CW-RFB | மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளயில் வேவலாவெவ கொத்தணியில் 14 குழாய்க் கிணறுகளை நிர்மாணித்தல் | 32.3 | 5 மாதங்கள் | C5 அல்லது அதற்கு மேற்பட்ட நீர் வழங்கல் மற்றும் சாக்கடை | 485,000.00 | 2023 ஜூலை 10ஆம் திகதி வரை | 8,000.00 |

3. விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு மேலேயுள்ள வேலைக்காக விலைக்கோரல் பிணை முறி மற்றும் 2023 ஜூலை 10ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான விலைமனுப்பிணையுடன் சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கு ஒரு விலைமனுதாரர் ஒரு விலைக்கோரலுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுவார். சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பதிலளிக்கக்கூடிய நிர்மாணத் துறைக்கான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்

4. விலைமனுக்கோரலானது உலக வங்கியினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான (NCB) விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் மேற்கொள்ளப்படும்.

5. தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தின் அட்டவணையில் (5ஆம் பிரிவு) வழங்கப்பட்டுள்ளன.

   ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மாத்தளை, கொஹொம்பிலிவெல, இல. 20, கொட்டுவேகெதர வீதி, மத்திய மாகாணம், கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், மாகாண பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

   தொலைபேசி: 066 2051710, தொலைநகல் இல.: 066 2233789
   மின்னஞ்சல்: asmpcpmt@gmail.com
   மற்றும் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை அதே இடத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. மாத்தளை, கொஹொம்பிலிவெல, இல. 20, கொட்டுவேகெதர வீதி, ASM செயற்றிட்டம், மாகாண பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகத்தில் 2023 ஜனவரி 30ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

7. விலைமனுக்கள் 2023 ஜூன் 12ஆம் திகதி வரையும் செல்லுபடியாதல் வேண்டும்.

8. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவலின் பிரகாரம் விலைமனுக்களுடன் விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

9. ஒரு விலைக்கோரல் ஆவணத்திற்கு மேற்கூறப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி மாத்தளை, கொஹொம்பிலிவெல, இல. 20, கொட்டுவேகெதர வீதி, கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், மாகாண பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2023 ஜனவரி 23ஆம் திகதி முதல் 2023 பெப்ரவரி 13ஆம் திகதி மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை ஆங்கில மொழியிலான விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.

10. விலைமனுக்களை 2023 பெப்ரவரி 13ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் மாகாண செயற்றிட்ட முகாமைத்துவப் பணிமனை, மத்திய மாகாண கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம், இல. 20, கொட்டுவேகெதர வீதி, கொஹொம்பிலிவெல, மாத்தளை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. 2023 பெப்ரவரி 13ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு மேற்படி முகவரியில் விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கு விலைமனுதாரர்களால் தெரிவு செய்யப்பட்ட நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

11. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என இரு பிரதிகளில் வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என்பன வெவ்வேறாக 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' எனக் குறிப்பிடப்பட்டு முத்திரைக் குறியிடப்பட்ட தபாலுறைகளில் உள்ளடக்கப்பட்டு பின் அவ்விரு தபாலுறைகளையும் வேறொரு தபாலுறையில் இடப்பட்டு, முத்திரைக் குறியிடப்பட்டு, ஒப்பந்த இலக்கம் மற்றும் ஒப்பந்தப் பெயர் என்பவற்றை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**மாகாண செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**கமத்தொழில் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,**
**பத்தரமுல்ல.**

**2023 ஜனவரி 22ஆம் திகதி.**



# சிறு விளம்பரம்

**மோட்டார் வாகனங்கள்**

**122**
**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
விற்பனைக்கு

S GQM -5650 Bajaj 2007, NW YY-4697 Bajaj 2012, WP QU-8797 Bajaj 2009, Three wheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711 2 10 810.
004596

**128**
**டயர்கள், டியூப்புகள்**
விற்பனைக்கு

கொழும்பில் ஆர்பிடெக் நிரப்புவதற்குத் தரப்பட்டு, திருப்பியெடுக்கப்படாத டயர்கள் 700x16, 750x16, 1000x20 பஸ் உரிமையாளர்களுக்கு உத்தரவாதத்துடன் கார், வேன், லொறி டயர் தருவிப்பவர்கள் போக்லிப்ட் சொலிட் காற்று டயர், அரச நிறுவனங்களுக்கு கடன் வசதிகள். இல. 155, கிரவுன் டயர், கொழும்பு 14. 077313 4060.
003604


துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமானசேவை அமைச்சு

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

**Maintenance of Adequate Tug Fleet in the Port of Colombo**
**Time Charter of Four Harbour Tugs for the Sri Lanka Ports Authority for Operations at the Port of Colombo**

**Sri Lanka Ports Authority**

**CES/FP/04/PT/6401 (HM)**

## விலைமனுக்களை சமர்ப்பித்தலின் மூடும் திகதியின் நீடிப்பு

1. மேலேயுள்ள கேள்வி தொடர்பாக 2022 டிசம்பர் 11 ஆம் திகதியன்று சண்டே ஒப்சேவர், சிலுமின மற்றும் வாரமஞ்சரி ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டதும் 2022 டிசம்பர் 12 ஆம் திகதியன்று டெயிலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட வியடம் தொடர்பாக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவானது உட்கூறு 24.2 இன் பிரகாரம் I ஆம் பிரிவின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் மூடும் இறுதித் திகதியை நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளது. விலைமனுக்கோரல் ஆவணத்தின் விலைமனுதாரர்களுக்கான பணிப்புரைகள்.
2. இதற்கமைவாக, விலைமனுக்கோரல் செயற்பாட்டின் புதிய நேர அட்டவணையானது பின்வருமாறு அமைந்திருக்கும்.

| | | | |
|---|---|---|---|
| **அ.** | **விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான மூடும் திகதி மற்றும் நேரம்** | : | 2023 பெப்ரவரி 21 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு. |
| **ஆ.** | **விலைமனுக்களை திறத்தல்** | : | 2023 பெப்ரவரி 21 ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடிய பின்னர் உடனடியாகவே. |
| **இ.** | **விலைமனுக்கோரல் ஆவணங்களை வழங்கல்** | : | 2022 டிசம்பர் 12 ஆம் திகதியன்று மதியம் 12 மணியிலிருந்து 2023 பெப்ரவரி 21 ஆம் திகதியன்று மதியம் 12 மணி வரையும் அலுவலக நேரங்களில். |

3. விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது உட்பிரிவு 21 இன் பிரகாரமாகும். விலைமனுப்பிணை மற்றும் விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலமானது 20 ஆம் உட்பிரிவின் பிரகாரமாகும். விலைமனுக்களின் செல்லுபடியாகும் காலப்பகுதியானது I ஆம் பிரிவிற்கு அமைந்ததாகவிருத்தல் வேண்டும். விலைமனுக்கோரல் ஆவணத்தின் விலைமனுதாரர்களுக்காக பணிப்புரையானது புதிய மூடும் திகதியாகும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01, இலங்கை.**

## இலங்கை வங்கி

**இலங்கை வங்கியின் ஊவா மாகாண நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பின்வரும் நகரங்களில் ATM/CRM தன்னியக்க இயந்திரங்களை நிறுவுவதற்கு பொருத்தமான கட்டடம் அல்லது வெற்றுக்காணி 15 வருட கால குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.**

**• தெமோதர நகரம் • கலஉட நகரம்**
**• நக்கல சந்தி, மொனராகல**

**உத்தேசக் கட்டடம் அல்லது வெற்றுக்காணி மேற்குறித்த நகரங்களுக்கு அண்மையில் அமைந்திருக்க வேண்டும் என்பதோடு கீழ்குறிப்பிட்ட வசதிகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடமானது பிரதான வீதிக்கு முகப்பாகவும் குறைந்தபட்ச அகலம் 09 அடிகள் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- அறையின் பின்புறமாக அணுகக் கூடிய நுழைவாயில் இருத்தல் வேண்டும். அவ்வாறு நுழைவாயில் இல்லாவிட்டால் அறையின் அகலம் குறைந்தது 12 அடி அகலத்தைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் தளத்துக்கு தரையோடு பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- 60 அம்பியர் மூன்று கட்ட மின்சார வசதி காணப்பட வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- அவ்விடத்தை இலகுவாக அணுகக் கூடிய வசதி இருத்தல் வேண்டும்.
- வெற்றுக் காணியாக இருப்பின் தரைப் பரப்பு குறைந்தபட்சம் 9x24 அடிகள் (216 ச.அ) அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட (அறை)/காணி உரிமையாளர்கள் அங்கீகாரம் பெற்ற கட்டடத்தின் திட்ட வரைபு, அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் (குத்தகை காணியாக இருப்பின்) போன்ற ஆவணங்களின் பிரதிகளோடு எதிர்பார்க்கும் மாதாந்த வாடகையையும் குறிப்பிட்டு அனைத்து விபரங்களையும் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் (ATM/CRM தன்னியக்க இயந்திரங்ளை நிறுவுதல்: தெமோதர நகரம்/கலஉட நகரம்/நக்கல சந்தி, மொனராகல" எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். ஏலங்களின் விலைகூறல்கள் பெப்ரவரி 06 ஆம் திகதி 2023, 2.00 மணிக்கு மூடப்படும்.

ஏலதாரர்கள் இது தொடர்பான திகதி, ஏலங்களின் விலைகூறல்கள் திறக்கப்படும் நேரம் என்பவற்றை பின்வரும் தொலைபேசி இலக்கத்தை அழைத்து பெற்றுக் கொள்ளலாம். 055 222 2460

அனுப்ப வேண்டிய முகவரி:
உதவிப் பொது முகாமையாளர் (ஊவா)
இலங்கை வங்கி,
ஊவா மாகாணக் காரியாலயம்,
இல: 17, ஹில் டிறைவ்,
கெப்பெடிபொல வீதி, பதுளை.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்

## மக்கள் வங்கி

### மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்தியத்தின் பின்வரும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 30.09.2021 வரை அடகு வைக்கப்பட்டு 24.02.2023ஆம் திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழக் குறிப்பிடப்பட்டுள்ள திகதி, இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். முன் அறிவித்தல் எதுவுமின்றி இவ் ஏல விற்பனையை ஒருங்கிணைக்கவோ, இரத்துச் செய்யவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு உரிமை உண்டு என்பதை அறியத் தருகிறோம்.

ஏல விற்பனை ஆரம்பமாகும் நேரம் முற்பகல் 9.00 மணி.

| | |
|---|---|
| ஏல விற்பனை நடைபெறும் திகதி | 25.02.2023 |
| ஏல விற்பனை நடைபெறும் இடம் | மட்டக்களப்பு நகரக்கிளை |
| கிளையின் பெயர் | காத்தான்குடி<br>கொக்கட்டிச்சோலை<br>செங்கலடி<br>வாழைச்சேனை<br>ஓட்டமாவடி |
| சேவை நிலையம் | ஆரையம்பதி<br>வவுணதீவு<br>மண்டூர்<br>வாகரை<br>கிரான் |

**பிராந்திய முகாமையாளர்**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்**
**மட்டக்களப்பு**
**11.01.2023**

PEOPLE'S BANK
www.peoplesbank.lk

### 1964 இலக்கம் 28 இன் திருத்தப்பட்டபடி காணி சுவீகரித்தல் (திருத்தச்) சட்ட காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல:- 3/ඉ/අත්පත්/3

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சின் இல:- 4-3/2/2014/A/186

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 20.09.022ஆந் திகதிய 2298/25ஆம் இலக்க மற்றும் 03.01.2023ஆம் திகதிய 2313/29ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - வடமேல் |
| மாவட்டம் | - குருநாகல் |
| பிரதேச செயலாளர் பிரிவு | - அலவ்வ |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - 976 வென்னொருவ மேற்கு |
| கிராமம் | - வென்னொருவ |
| இறுதி கிராம வரைபட இலக்கம் | - இ.கி.வ. 411 பிற்சேர்க்கை இலக்கம் 21 மற்றும் 30.06.2022ஆந் திகதி |
| துண்டு இலக்கம் | - 368, 369 |
| காணியின் பெயர் | - முதுகல குரூப், வென்னொருவ முதுகலவத்த |
| விஸ்தீரணம் | - 1.1838 ஹெக்டெயர் 0.0374 |

**எம்.ஆர்.எம்.எஸ். மல்லவ**
**பிரதேச செயலாளர்/ காணி சுவீகரித்தல் உத்தியோகத்தர்**
**அலவ்வ**
**பிரதேச செயலகம்**
**அலவ்வ**
**2023.01.18**


*Marriage Proposals*
in the
**Sunday Observer**
Is the best way to fulfil your Future Dreams


# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

பாதுகாப்பு அமைச்சு

**தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம் (RLVMMP)**
**ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் (GOSL) நிதியிடப்பட்டது**
**கடன் இலக்கம்: L0124A, நாடு: இலங்கை**

## கண்டி தாதியர் பயிற்சிப் பாடசாலையில் மண்சரிவு தாக்கக் குறைப்பு வேலைகள்

**RFP குறிப்பீட்டிலக்கம்: RLVMMP/WORKS/05B**

1. தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டத்தின் (RLVMMP) கிரயச் செலவிற்காக இலங்கை அரசாங்கமானது ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து ஏற்கனவே நிதியைப் பெற்றுள்ளதுடன் இப்பெறுகைகளின் பகுதியொன்றை கண்டி தாதியர் பயிற்சிப் பாடசாலையிலுள்ள 05 இடங்களில் மண் சரிவு தாக்கக் குறைப்பு வேலைகளின் ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக அவசர பணிகள் மற்றும் பெ.சே.வ. ஆகியன நீங்கலாக 283 மில்லியன் இலங்கை ரூபா மதிப்பீட்டு கிரயச் செலவாகும்.

2. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பாக செயற்றிட்ட பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை, கண்டி மேற்கூறப்பட்ட வேலைக்காக தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து, இப்போது கோருகின்றார். இந்த ஒப்பந்தத்தின் நிருமாணக் காலப்பகுதியானது 365 நாட்காட்டி நாட்களாகுமென்பதுடன் குறைபாடுகள் பொறுப்புக் காலப்பகுதியானது நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்த பின்னர் 365 நாட்களாகும்.

   ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   அ) உள்நாட்டு கேள்விதாரர் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA/ICTAD- முன்பு ICTAD என்றழைக்கப்பட்டது) கட்டிடம் மற்றும் சிவில் பொறியியலின் கீழ் C-2 அல்லது மேற்பட்ட தரத்தில் அல்லது soil nailing and Stabilization என்பதன் கீழ் SP-1 தரத்தில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். எந்தவொரு வெளிநாட்டு ஒப்பந்தக்காரரும் எவ்வித ''நிர்மாண ஒப்பந்தத்தை'' பிரதான/தலைமை தாங்கும் சாரராக மேற்கொள்ள விரும்பினால், இந்தக் கேள்வியின் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டால், வெளிநாட்டு ஒப்பந்தக்காரருக்கான தற்காலிக பதிவுச் சான்றிதழை பெற்றுக் கொள்ளல் வேண்டும் - 2018.08.23 ஆம் திகதியிடப்பட்டதும் 2085/19 என்ற இலக்கமுடையதும் ''வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்'' என்ற தலைப்புமுடைய வர்த்தமானியை பார்க்கவும் - இதனை www.documents.gov.lk என்ற இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்பதுடன் மேலதிக விபரங்களுக்கு www.cida.gov.lk என்ற இணையத்தையும் பார்வையிடவும்.

   ஆ) பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள கேள்விதாரர்கள் மாத்திரமே இக்கேள்வியில் பங்குபெறலாம்.

   **A. நிதியிடல்:**

   i. திரவச் சொத்துக்கள், தடைகளற்ற ஆதனங்கள், கடன் வரிசைகள் மற்றும் ஏனைய நிதியிடல் வழிகள் (ஒப்பந்த ரீதியிலான முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக) நிர்மாண காசுப் பாய்ச்சல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 80 மில்லியன் இலங்கை ரூபாவிற்கான ஆகியவற்றை கேள்விதாரரின் ஏனைய கடப்பாடுகள் நீங்கலாக இந்த ஒப்பந்தத்திற்கு (ஒப்பந்தங்கள்) இருப்பதாக கேள்விதாரர் காட்சிப்படுத்தல் வேண்டும் அல்லது அவற்றை பெற்றுக் கொள்வதற்கான வழிகளை முன்வைத்தல் வேண்டும்.

   ii. விலைமனுதாரர் தொழில்தருநரின் திருப்திக்காக தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் மற்றும் எதிர்கால ஒப்பந்த கடப்பாடுகளுக்கான காசுப் பாய்ச்சல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான போதுமானளவு நிதி வளத்தைக் கொண்டுள்ளார் என்பதையும் காட்சிப்படுத்தல் வேண்டும்.

   iii. கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகைகள் அல்லது கேள்விதாரரின் நாட்டின் சட்டத்தினால் தேவைப்படாதவிடத்து, தொழில்தருநருக்கு ஏற்புடையதாகவுள்ள ஏனைய நிதியிடல் கூற்றுக்கள் கடந்த 5 வருடங்களுக்கானவைகள் (2017-2018 முதல் (2021-2022 வரை) சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் கேள்விதாரரின் தற்போதைய நிதியிடல் தன்மையின் நிலைமை அத்துடன் அதனது நீண்டகால இலாபத்தின் வளமையையும் சுட்டிக் காட்டல் வேண்டும். (ஆகக் குறைந்த தேவைப்பாட்டின் பிரகாரம் கேள்விதாரரொருவரின் மொத்த ஆதனங்களினதும் மற்றும் மொத்த கடன்பொறுப்புக்களினதும் வேறுபாடாக கணக்கிடப்பட்ட தேறிய வருமானம் சாதகமாகவிருத்தல் வேண்டும். இலாபத்தன்மையின் பாதகமான பெறுபேறானது கேள்வியின் நிராகரிப்பிற்கு வழிவகுக்கும்.)

   iv. கடந்த ஐந்து வருடங்களில் (2017 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து) நிறைவேற்றப்பட்ட நிர்மாணம் 486 மில்லியன் இலங்கை ரூபாவாக இருத்தல் வேண்டும்.

   **B. நிர்மாண அனுபவம்:**

   **பொதுவான அனுபவம்.**

   i. 2017 ஜனவரி 1ஆம் திகதியில் ஆரம்பித்து ஆகக் குறைந்தது கடந்த 05 வருடங்களில் பிரதான ஒப்பந்தக்காரர், கூட்டுமுயற்சி அங்கத்தவர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக நிர்மாண ஒப்பந்தங்களில் அனுபவமிருத்தல் வேண்டும்.

   **திட்டவட்டமான அனுபவம்:**

   ii. 253 மில்லியன் இலங்கை ரூபா ஆகக் குறைந்த பெறுமதியில் ஒரு ஒப்பந்தமாக திருப்திகரமாக, பிரதான ஒப்பந்தக்காரராக, கூட்டுமுயற்சி அங்கத்தினராக, முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக 2012 ஜனவரி 1ஆம் திகதிக்கும் கேள்விக்கான இறுதி திகதிக்குமிடையில் கணிசமான அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   **அல்லது**

   நிகரான நிர்மாண நுட்பங்கள் சமகாலத்தில் பூர்த்தி செய்யப்பட்டதும் 253 மில்லியன் ரூபா மொத்தப் பெறுமதி அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியைக் ஆகக் குறைந்தது 3 ஒப்பந்தங்கள் அல்லது அதற்கு நிகரானவைகள் பிரதான ஒப்பந்தக்காரர், கூட்டு முயற்சி அங்கத்தவர், முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது உப-ஒப்பந்தக்காரராக கணிசமான அளவில் பூர்த்தி செய்துள்ள 2012 ஜனவரி 1ஆம் திகதிக்கும் கேள்வியை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குமிடையில் மேற்கொள்ளப்பட்டவைகளும் பரிசீலிக்கப்படும்.

   iii. மேலே குறிப்பிட்டுள்ளவைக்கும் வேறேதாவது ஒப்பந்தக்களுக்கும் (கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்) பிரதான ஒப்பந்தக்காரராக அல்லது கூட்டு முயற்சி அங்கத்தவர் அல்லது உப ஒப்பந்தக்காரராக 2012 ஜனவரி 1ஆம் திகதிக்கும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குமிடையில் பின்வரும் முக்கிய செயற்பாடுகளில் ஆகக் குறைந்தளவு நிர்மாண அனுபவத்துடன் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏதாவது ஒரு வருடத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

   - Construction of Soil nails/Soil Anchoring மற்றும் இணைந்த வேலைகள்: வருடத்திற்கு 2,000 மில்லியன்
   - செங்குத்து நிரையிலுள்ள வடிகால்களின் நிர்மாணம்: வருடத்திற்கு 150 மில்லியன்.

   **C. முக்கியமான உபகரணம் மற்றும் ஆளணியினர்:**

   கேள்வி ஆவணத்தின் III ஆம் பிரிவின் 4 மற்றும் 5ஆம் அம்சங்களில் பட்டியலிடப்பட்ட அவசியமான உபகரணம் மற்றும் பணியாளர்களை தகுந்த நேரத்தில் கையேற்பதற்கான முன்மொழிவுகள்.

3. 2016 ஜூன் 2ஆம் திகதியிட்ட பயனாளிக்கான கொள்வனவு பணிப்புரைகளின் AIIB இன் Interim Operational Directive இல் நிர்ணயிக்கப்பட்ட கேள்விக்கான கோரிக்கையொன்றை (RFT) பாவித்து சர்வதேச பகிரங்க போட்டி ரீதியிலான கேள்வி சமர்ப்பித்தல் ஊடாக கேள்வி நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள சர்வதேச மற்றும் உள்ளூர் கேள்விதாரர்கள் RLVMMP செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளலாம் (தொலைபேசி: 011-2559869) மற்றும வேலை நாட்களில் கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையும் கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்வி ஆவணமானது www.nbro.gov.lk என்ற இணையத்திலும் 2023.01.23ஆம் திகதியிலிருந்து 2023.02.14ஆம் திகதி வரையும் பரீட்சித்துப் பார்க்கலாம். இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

5. கேள்வியை சமர்ப்பிப்பதற்காக, ஆங்கில மொழியிலுள்ள கேள்வி ஆவணங்களை 2023.01.24ஆம் திகதியிலிருந்து 2023.02.13ஆம் திகதி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக 45,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு வியாபார தலைப்புக் கடிதத்தில் கேள்வி ஆவணங்களை வழங்குமாறு கேட்கப்படல் வேண்டும். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

   மேலும், PCA-3 படிவத்தை பெறுவதற்காக www.drc.gov.lk என்ற கம்பனிகளின் பதிவாளரின் நிகழ்நிலையின் (online) மூலம் தொடர்பு கொள்ளலாம். பதிவு செய்தல் செயற்பாடானது ஒன்லைன் முறைமைக்கு eroc.dre.gov.lk என்ற இணையத்தின் மூலம் மாற்றப்பட்டுள்ளது.

6. 2023.01.31ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன கேட்போர் கூடத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் நடைபெறும். தள விஜயங்கள் 2023.01.30ஆம் திகதி NBRO - கண்டி பணிப்பாளர் அலுவலகத்தில் மு.ப. 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

7. கேள்விகள் 2023.02.14ஆம் திகதியன்று பின்வரும் முகவரிக்கு பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் கேள்விதாரரின் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் சமுகமளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டோர் முன்னிலையில் பின்வரும் முகவரியில் பகிரங்கமாக திறக்கப்படும்.

8. அனைத்து கேள்விகளுடனும் 5 மில்லியன் இலங்கை ரூபாவிற்கான கேள்வி பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். கேள்வி பிணையானது கேள்வி படிவங்களின் IV பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவாக தொழில்தருநரினால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதொரு நிபந்தனையற்ற பிணையாகவிருத்தல் வேண்டும்.

   தேவைப்படும் கேள்வி பாதுகாப்பு தொகையை இலகுவாக மாற்றக்கூடிய நாணயமாக மாற்றுவதற்கு, கேள்வியை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதிக்கு 28 நாட்கள் முன்னராக பிரசுரிக்கப்பட்ட விற்பனை செய்யும் பரிவர்தனை விகிதமானது பிரயோகிக்கப்படும்.

9. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செயற்றிட்ட முகவரி(முகவரிகளானது) பின்வருமாறு. செயற்றிட்ட பணிப்பாளர், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை, தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், இல. 99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05, இலங்கை.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகை குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**அனர்த்த முகாமைத்துவ பிரிவு,**
**வித்யா மாவத்தை,**
**கொழும்பு - 07, இலங்கை.**

## கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

### வழங்குனர்களை பதிவுசெய்தல் - நினைவு பரிசு மற்றும் பரிசு கடை

01. கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியினால் 2023 ஆம் ஆண்டிற்கான நினைவு பரிசுப்பொருட்கள விற்பனை செய்யும் கடை மற்றும் சேவைகளை கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்திற்கு வழங்குவதற்காக தங்களைப் பதிவு செய்ய விரும்பும் சபைகள், திணைக்களங்கள் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் உள்ளிட்ட வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், பங்குதாரர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

02. கீழே தெரிவிக்கப்பட்ட ஒவ்வொரு வழங்கல்கள் சேவைகள் சம்பந்தமாக தெரிவிக்கப்பட்ட மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் ரூ.1000.00 செலுத்தி கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தில் 2023.01.23 முதல் 2023.03.01 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் பதிவுக்கான சகல விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பணம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். பண ஆணைகள் மற்றும் காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி,**
**கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்,**
**இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**0112421874 / 0112421952**
**tender@colombolotustower.lk**

## தேசிய உப்பு நிறுவனம்

### பொதுவான உப்பை விற்பனை செய்தல்

**NSL/SALT SALES/2023/01**

தேசிய உப்பு நிறுவனம் ஆனையிறவு மற்றும் மன்னார் உப்பளங்களில் தற்போதுள்ள உப்பை பின்வருமாறு விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

| உப்பளம் | தரம் | கிடைக்கத் தக்கதாகவுள்ள அளவு மெ. தொ | ஒரு மெ.தொன்னின் விலை |
|---|---|---|---|
| ஆனையிறவு | தரம் - 01 | 2500 | 36,000.00 |
| | தரம் - 02 | 1500 | 32,000.00 |
| | தரம் - 03 | 500 | 28,000.00 |
| மன்னார் | தரம் - 01 | 200 | 36,000.00 |

ஆர்வமுள்ள கொள்வனவாளர்கள் தேவையான அளவு மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிட்டு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை 2023-01-31ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறு கோரப்படுகின்றது.

அதிக அளவில் வேண்டுகோள் செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இது தொடர்பில் இறுதித் தீர்மானத்தை எடுக்கும் உரிமையை நிறுவனம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர் (விலையிடும் குழு),**
**தேசிய உப்பு நிறுவனம்,**
**இல. 561/3, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு-05.**
**தொலைபேசி: 0112368974.**

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**
**(சக்தி மற்றும் வலு அமைச்சு)**

## கேள்வி அறிவித்தல்

**TIME CHARTER OF MAINTENANCE AND EMERGENCY RESPONSE VESSEL (MERV) FOR CEYLON PETROLEUM CORPORATION**
**B/01/2023**

### பிற்சேர்க்கை

மேலேயுள்ள தலையங்கத்தின் கீழ் 2023.01.16 ஆம் திகதியன்று இந்த புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விலைமனுவிற்காக பங்கு பெறுவதற்கு ஆர்வமுள்ள வளமுள்ள விலைமனுதாரர்களின் கவனத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமானது இத்தால் ஈர்க்கின்றது.

பத்திரிகையின் விளம்பரத்தின் 4 ஆம் பந்திக்கு பின்வருவது அடக்கப்படுகின்றது.

4. மீளளிக்கப்படாத கட்டணமான 200,000 ரூபாவானது (அதாவது ரூபா 169,671.26 + 2.5% + 15% பெசேவ அல்லது 540.00 ஐ.அமெ.டொலர்) மக்கள் வங்கியின் தலைமை அலுவலக 004100110208633 என்ற கணக்கிலக்கத்திற்கு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பெயரில் வரவு வைக்கப்பட்டு மீளளிக்கப்படாத பணக்கொடுப்பனவு பற்றுச்சீட்டானது விலைமனுக்கோரல் ஆவணத்தை பெறுவதற்கான எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

முன்னைய புதினப்பத்திரிகையின் விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய அனைத்து நிபந்தனைகளிலும் எவ்வித மாற்றமுமில்லை.

இது தொடர்பாக ஏற்பட்டுள்ள எவ்வித அசௌகரியத்திற்கும் இபெகூ மன்னிப்புக் கோருகின்றது.

**தவைர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்)**
**மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல.: 609,டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**
**தொலைபேசி: 0094 11 5455331**
**தொலைநகல்: 0094 11 5455424**

## ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

**Hybrid அலுவலக கன்டேனர் அலகொன்றை ஜய கன்டேனர் டெர்மினல்ஸ் லிமிடெட்டிற்கு கொள்வனவு செய்தல்**

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு முழுவதுமான உரித்துள்ள ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிடெட்டானது கொழும்பு-15, வோல்ஸ் ஒழுங்கை, 69 ஆம் இலக்கத்திலுள்ள கொழும்பு ஒயில் பாங் அமைந்துள்ள இடப்பரப்பில் பாவிப்பதற்காக 40 அடி x 8 அடி அளவுள்ள Hybrid அலுவலக கன்டேனர் அலகொன்றை வழங்குவதற்காக புகழ் வாய்ந்த இலங்கை கம்பனிகளிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றது.

2023.01.23 ஆம் திகதியிலிருந்து 2023.02.06 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் அலுவலக நேரங்களில் வரிகள் அடங்கலாக மீளளிக்கப்படாத வைப்புத் தொகையான 5000 ரூபாவை செலுத்திய பின்னர், நிதிப்பிரிவிலிருந்து உரித்தான விலைமனுப் படிவங்கள் மற்றும் தகவல் துண்டுப்பிரசுரங்களை பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு விலைமனுவும் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதுடன் அறுபதினாயிரம் ரூபா (60,000 ரூபா) பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் 2023.02.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒன்றில் பதிவுத் தபாலில் ‘‘தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, ஜய கன்டேனர் டர்மினல்ஸ் லிமிட்டெட், இல. 69, வோல்ஸ் ஒழுங்கை, கொழும்பு-15’’ என முகவரியிடப்பட்டு அனுப்பப்படல் வேண்டும் அல்லது JCT Ltd இன் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். விலைமனு முன்னோடிக் கூட்டம் 2023.02.02 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும். விலைமனுவை அடக்கியுள்ள உரித்தான தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் “Bid for Office Container unit” என குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**ஜய கன்டேனர் டெர்மினல்ஸ் லிமிட்டெட்,**

**இல.: 69, வோல்ஸ் ஒழுங்கை,**
**கொழும்பு-15.**
**தொடர்பெண்: 0714736928**

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**இரத்தினபுரி மாவட்டத்தில் எஹெலியகொட வேவில, வேவில தோட்டத்தில் முன்மொழியப்பட்ட சூரியசக்தி மின் நிலைய (5 மெகாவாட்) கருத்திட்டத்தின் பூர்வாங்க சுற்றாடல் அறிக்கையின்(IEE) இறுதி முடிவின் மீதான பொது அறிவிப்பு**

**தேசிய சுற்றாடல் சட்டம்**
**பிரிவு 23 பிபி (4) இன் கீழ் அறிவிப்பு**

மேற்கண்ட கருத்திட்டத்தின் பூர்வாங்க சுற்றாடல் அறிக்கையின் (IEE) ஆய்வுக்குப் பிறகு, குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய,1993 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கத்தின் தேசிய சுற்றாடல் (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான நடைமுறை) விதிமுறைகள் 9 (i) இன், 2000 நவம்பர் 02 ஆம் திகதிய திருத்தப்பட்ட 1152/22 ஆம் இலக்க வர்த்தமானியின் அடிப்படையில் கொழும்பு-03, இல. 491 காலி வீதியில் அமைந்துள்ள சுமதி எனர்ஜிகம்பனி (பிரைவட்) லிமிடெட் குறித்த கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது. இந்த IEE அறிக்கை 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்த) சட்டத்தின் விதிகளின்படி ஒரு பொது ஆவணமாகும், இது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் கிடைக்கப்பெறும்.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**“பரிசர பியச”**
**104,டென்சில்கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல**

## பொது அறிவித்தல்

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின், வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தின், கெகுனகொல்ல கிராம அதிகாரி பிரிவில், இல. 427/1 கெடுனகொல்ல என்ற முகவரியில் வசிக்கும் ஆதம்புள்ளே மொஹமட் ரிழ்வான் (தே.அ.அ.இல. 198708604418) ஆகிய நான், 2015 இல 05 தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தின் 53ஆம் பிரிவின் கீழ் குற்றமொன்றை புரிந்துள்ளதாகவும், அதனோடு சம்பந்தப்பட்ட, குளியாப்பிட்டிய கௌரவ நீதவான் நீதி மன்றத்தில் 67599 இலக்கத்தின் கீழ் வழக்கு இடம் பெற்றதாகவும், இதன் பிறகு அதுபோன்ற குற்றமொன்றை மீண்டும் என்னால் மேற்கொள்ளப்படமாட்டாது எனவும். இடம் பெற்ற குற்றம் சம்பந்தமாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் சகல மக்களிடமும் மன்னிப்புக்கோருவதாகவும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**இறுதி தீர்மான பொது அறிவித்தல்**
**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

**பிரேரிக்கப்பட்டுள்ள கெரவலப்பிட்டியவிலுள்ள SLPA க்கு சொந்தமான மணல் அகழ்வு பிரதேசத்திலிருந்து கொழும்பு துறைமுகத்திலுள்ள கிழக்கு கொள்கலன் இறங்குதுறை கட்டம் II (ECT கட்டம்-II) மற்றும் மேற்கு கொள்கலன் இறங்குதுறை-I (WCT-I) என்பவற்றின் மீள்நிரப்பலுக்காக கடற்கரைக்கப்பாலான மணல் அகழ்வு**

**ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப) அறிக்கை.**

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை பிற்சேர்க்கை (ஆ.சு.ப) அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 22 நவம்பர் 2000 ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(i) இற்கமைவாக மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை இல. 19, சைத்தியா வீதி, கொழும்பு-1 இல் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆ.சு.ப. அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**‘‘பரிசரபியச”,**
**இல. 104,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.**

**சுகாதார அமைச்சு**
**அபேக்ஷா வைத்தியசாலை - மஹரம**

## பெறுகை அறிவித்தல்

01. எமது வைத்தியசாலைக்கு தேவையான உருப்படிகளை கொள்வனவு செய்வதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி மாதிரிப்பத்திர இலக்கம் | உபகரணத்தின் பெயர் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|
| 1 | சுத்திகரிப்புப் பொருட்களை கொள்வனவு | ரூ.2000/- |
| 2 | டோனர் காட்ரிஜ் கொள்வனவு | ரூ.2000/- |

02. இலங்கைச் சந்தை சார்பாக மேற்படி உருப்படிகளை வழங்குகின்ற எந்த கேள்விதாரர்கள், பிரதிநிதிகள் அல்லது பெயர் குறிப்பிடப்படுபவர்கள் மாத்திரம் மேற்படி கேள்விக்காக சமர்ப்பிப்பதற்கு தகைமை பெறுபவர்

**கேள்வி மாதிரிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் வேளையில்**

i. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு அனுப்பப்படும் வேண்டுதல் கடிதமொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
ii. சகல கேள்வி மாதிரிப்பத்திரங்கள் சார்பாகவும் மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளருக்கு மிளளிக்கப்படாத தொகையாக ரூ.2000.00 கட்டணத்தை செலுத்துதல் வேண்டும்.
iii. வியாபார பதிவுச்சான்றிதழின் உறுதி செய்த பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
iv. 2023.01.23 முதல் 2023.02.06 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் நிதிப் பிரிவிலிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

**கேள்விகள் சமர்ப்பிக்கப்படும் வேளையில்,**

I. இலங்கையில் மேற்படி வழங்கல் பற்றிய செல்லுபடியாகும் பதிவுச்சான்றிதழின் பிரதியொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
II. சகல கேள்விக்கும் 2% கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். (காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது)
III. சகல கேள்விகளும் இரு பிரதிகளுடன் (மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென) வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும். அத்துடன், கேள்வி உள்ளிடம் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் குறித்த உருப்படியின் பெயரைத் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
IV. சகல கேள்விகளும் விநியோகிக்கப்படும் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்படும் மாதிரிப் பத்திரங்களைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
V. 2023.02.07 மு.ப.10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பொறியிடப்பட்ட கேள்விகள் மஹரகம அபேக்ஷா, வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவருக்கு பதிவுத்தபாலில் அல்லது மஹரகம அபேக்ஷா, வைத்தியசாலையின் கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
VI. கேள்விகள் திறக்கப்படும் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட விண்ணப்பதாரிக்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.

03. விலைமனுக்களுடன் கேள்வி பத்திரங்கள் 2023.02.07 மு.ப.10.30 இற்கு மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் திறக்கப்படும். மேலதிக விபரங்களை மஹரகம அபேக்ஷா வைத்தியசாலையின் கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம். பிரதேச பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித்தீர்மானமாகும்.

தொலைபேசி இல : 0112839589/0112830252/0112850253
பெக்ஸ் : 0112839589

**தலைவர்**
**பிரதேச பெறுகைக்குழு,**
**அபேக்ஷா வைத்தியசாலை, மஹரக**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 சனவரி 25ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 120,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123D284 | LKA18223G284 | LKA36424A263 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 60,000 | 30,000 | 30,000 | 120,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 சனவரி 25
தீர்ப்பனவுத் திகதி : 2023 சனவரி 27
வழங்கப்படும் திகதி : 2023 சனவரி 27
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 சனவரி 25, புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

மக்கன்துர இடப்பரப்பில் அமைந்துள்ள இலங்கை வயம்ப பல்கலைக்கழகத்தின் கால்நடை, மீன்பிடித்துறை மற்றும் போசணை ஆகிய பீடங்களுக்கு பின்வரும் பெறுகைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை வயம்ப பல்கலைக்கழகமானது இப்போது அழைக்கின்றது.

அ. உற்பத்தி அபிவிருத்தி ஆய்வுகூட வடிவமைப்பு மற்றும் மேம்படுத்தல்.

ஆ. “Think Hub” இன் வடிவமைப்பு மற்றும் மேம்படுத்தல்.

இ. ‘‘சீரமைக்கப்பட்ட வகுப்பறை” இன் வடிவமைப்பு மற்றும் மேம்படுத்தல்.

விஷேட குறிப்பு: மேலேயுள்ள பெறுகைக்காக நீங்கள் விலைமனுக்களை சமர்ப்பிக்க விரும்பினால், 2023 சனவரி 23 ஆம் திகதியிலிருந்து https://www.wyb.ac.lk/ என்ற இணையதளத்தில் விபரமான விளம்பரத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பதிவாளரின் அலுவலகம்,**
**இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்,**
**குளியாப்பிட்டிய.**

# கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

## விலைமனுக்கோரல் (IFB)

கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் சார்பாக பிரதான பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு தகுதியான முத்திரையிடப்பட்ட மனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | தேவைப்படும் (CIDA) தரம் | மீளச் செலுத்தப் படாத கட்டணம் (ரூ). | காலம் | தேவைப்படும் மனுப் பாதுகாப்புத் தொகை (ரூ). | மனுக்கள் திறக்கப்படும் / மூடப்படும் திகதி (1) மற்றும் முன்மனுக்கூட்டம் (2) |
|---|---|---|---|---|---|---|
| CLT/WK/003/2023 | பொது கழிவறை கட்டுமானம் (தொழிலாளர் ஒப்பந்தம்) | C7 அல்லது மேல் | 3,000.00 | 30 நாட்கள் | 20,000.00 | 30.01.2023 14.00 மணி |
| CLT/WK/006/2023 | லேக்சைட்டில் காணப்படும் திரையரங்கின் கூரையை அமைத்தல் (வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்) | C7 அல்லது மேல் | 5,000.00 | 21 நாட்கள் | 50,000.00 | 09.02.2023 14.00 மணி |
| CLT/WK/007/2023 | சிறிய திரையரங்கின் கூரையை அமைத்தல் (வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்) | C7 அல்லது மேல் | 5,000.00 | 21 நாட்கள் | 50,000.00 | 09.02.2023 14.00 மணி |
| CLT/WK/009/2023 | கொழும்பு தாமரை தடாகம் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்டிற்கு கணனிப் பொருட்களை வழங்கல் | N/A | 5,000.00 | 14 நாட்கள் | 20,000.00 | 30.01.2023 14.00 மணி |

1. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை **இல.320,டி.ஆர்.விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் நிதிப் பிரிவில் செலுத்தி** ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. மேலதிக விபரங்களை **இல.320,டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள** கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளரிடம் (பெறுகை) பெற்றுக்கொள்ளலாம்.

   (தொ.பே: **0112-421952** / மின்னஞ்சல் – **tender@colombolotustower.lk**).
3. மனுக்கள் செல்லபடியாகும் காலம் **60 நாட்கள்.**
4. முத்திரையிடப்பட்ட மனுக்கள் **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திற்கு** கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
5. அனைத்து மனுக்களும் கட்டாயமாக மேலே குறிப்பிட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுப்பாதுகாப்புத் தொகை செல்லுபடியாகும் காலம் **90 நாட்கள்.**
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,**
**கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்,**
**இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10,**

# செயற்றிட்ட பணியாளர்களின் ஆட்சேர்ப்பு

CSIAP THE WORLD BANK

## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

## கமத்தொழில் அமைச்சு

உலக வங்கியினால் நிதியிடப்பட்ட காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்திற்கு 01/2019 என்ற முகாமைத்துவ சேவை திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரமும் மற்றும் அரசாங்க ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரமும் பின்வரும் நிலைகளுக்கு ''ஒப்பந்த அடிப்படையில்'' செயற்றிட்ட பணியாளர்களின் ஆட்சேர்ப்பிற்காக தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதவி நிலைகளின் சம்பளமானது மேற்கூறப்பட்டுள்ள முகாமைத்துவ சேவை திணைக்கள 01/2019 என்ற இலக்கமுடைய சுற்றறிக்கையின் 03 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 64 வயதிற்கு குறைவாகவிருத்தல் வேண்டும். ஆங்கிலத்தில் தேர்ச்சி மற்றும் அரசாங்க ஒழுங்குவிதிகள் மற்றும் கணனி அறிவு ஆகியன கட்டாயமான முன்தகைமைகளாகும். வெளிநாட்டு நிதியிடப்பட்ட இலங்கையிலுள்ள செயற்றிட்டங்களின் வேலை அனுபவம் சேர்க்கப்பட்ட தகைமையாகும்.

| இல. | பிஎஸ் வகுதி | பதவிநிலை | பதவிநிலைகளின் எண்ணிக்கை | ஏற்புடையதான சுற்றறிக்கை |
|---|---|---|---|---|
| 01. | பிஎஸ் 3 | கிழக்கு மாகாணத்திற்கான காலநிலைக்கு சீரமைவான விவசாய விஷேடத்துநர் | 01 | முகாமைத்துவ சுற்றறிக்கை 01/2019 |
| 02 | பிஎஸ் 4 | கிழக்கு மாகாணத்திற்கான செயற்றிட்ட கணக்காளர் | 01 | |
| 03. | பிஎஸ் 5 | வட மேல் மாகாணத்திற்கான சிரேஷ்ட தொழில்நுட்ப அலுவலர் | 01 | |
| 04 | பிஎஸ் 6 | வடமேல் மாகாணத்திற்கான சூழல் பாதுகாப்பு அலுவலர் | 01 | |

மேலதிக தகவலுக்கு www.csiap.lk என்ற இணையதளத்தை பார்வையிடவும்.

2023 பெப்ரவரி 10 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியை வந்தடையும் வகையில் பதிவுத் தபாலில் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பிக்கும் பதவியை தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடல் வேண்டும்.

**செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**61/1, எம்.டி.எச். ஜயவர்தன மாவத்தை,**
**மாதின்னாகொட, இராஜகிரிய.**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சையொன்றிற்கு அழைக்கப்படுவர். எந்தவொரு வகையிலுமான ஆதரவு தேடுதல் தகைமையை நீக்குமென்பதுடன் அவ்வாறான விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**கமத்தொழில் அமைச்சு**

# கேள்வி கோரல் அறிவித்தல்

## விவசாய அமைச்சு

## கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் திணைக்களத்திற்குத் தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**1. கொள்வனவுகள்**

| விடய இல | விடயம் | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | விலைமனு மீளப் பெறமுடியாத கட்டணம் (ரூபா) | விலை மனு வழங்கும் காலம் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.1 | கால்வாய் நோய்க்கு எதிரான தடுப்பூசிகளை உற்பத்தி செய்வதற்காக இரசாயனங்கள், நுகர்வுப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 500,000.00 | 10,000/- | 2023.01.23 முதல் 2023.02.10 வரை | 2023.02.13 மு.ப.11.00 |
| 1.2 | இரசாயனங்கள், நுகர்வுப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள் மற்றும் கால்நடை ஆய்வுகளுக்கான (பற்றீரியாவியல் மற்றும் ஒட்டுண்ணியியல்) உபகரணங்களின் கொள்வனவு | 150,000.00 | 4,500/- | | |
| 1.3 | இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பூசிக்கு பதிலாக இணக்கமான மற்றும் உயர்தரமான தடுப்பூசிகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்காக இரசாயனங்கள், நுகர்வுப் பொருட்கள், கண்ணாடி பொருட்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 250,000.00 | 7,000/- | | |

01. கேள்விப் பத்திரங்கள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதிப் பணிப்பாளர் பணிமனையில் இருந்து அலுவலக நேரத்தில் (மு.ப 9.00 முதல் பி.ப 3.00 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.
02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நிதிப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுல் இடலாம். விலை மனுக்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விடயத்தின் பெயரை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.
03. மேலதிக தகவலுக்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இனைய தளத்தை பார்வையிடவும். (www.daph.gov.lk)

**பணிப்பாளர் நாயகம்/ தலைவர் (தி.பொ.கொ.கு)**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**இலக்கம் 1020, த.பெ.இலக்கம் 13, 081-2385701 நீடிப்பு 290/291**
**கெட்டம்பே, பேராதனை.**

**தொலைபேசி இல : 081-2388197/ 081-2385227**
**081-2388120/ 081-2388189**

DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

# MINISTRY OF AGRICULTURE

## Agriculture Sector Modernization Project

IDA Credit No: 5873 LK

# PROCUREMENT NOTICE

**Construction of Farm and Market Access Road at Thikkodai, in Malayarkattu Banana Cluster, Batticaloa District, Eastern Province - LK-MOA-PMU-276401-CW-RFB**

**Improvements to Farm and Market Access Road at Palayadivettai in Malayarkattu Banana Cluster, Batticaloa District, Eastern Province - LK-MOA-PMU-276399-CW-RFB**

**Improvements to Farm and Market Access Road at Malayarkattu in Malayarkattu Banana Cluster, Batticaloa District, Eastern Province - LK-MOA-PMU-276398-CW-RFB**

**Improvements to Farm and Market Access Road at Kaluwanchikuddy in Kaluwanchikudy Pomegranate Cluster, Batticaloa District, Eastern Province - LK-MOA-PMU-276407-CW-RFB**

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a Credit from the International Development Association (IDA) in various currencies equivalent to US$ 58.630 Million towards the cost of the Agriculture Sector Modernization Project of the Ministry of Agriculture and it intends to apply portion of the proceeds of this credit to eligible payments under the Contract for the following works as described in the table below.
2. Chairman, Project Procurement Committee (Minor) – Eastern Province, Agriculture Sector Modernization Project invites sealed bids from eligible and qualified bidders for the following works as described in the table below.

| Contract No. | Description of Works | Estimated Cost Excluding VAT Rs. (Mn) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Bid Security Amount (Rs.) | Validity Period |
| LK-MOA-PMU-276401-CW-RFB | Improvements to Farm and Market Access Road at Thikkodai in Malayarkattu Banana Cluster, Batticaloa District, Eastern Province | 9.86 | 03 months | C 7 or Above in Road Construction | 119,000.00 | 29.05.2023 |
| LK-MOA-PMU-276399-CW-RFB | Improvements to Farm and Market Access Road at Palayadivettai in Malayarkattu Banana Cluster, Batticaloa District, Eastern Province | 20.81 | 03 months | C 6 or Above in Road Construction | 255,000.00 | 29.05.2023 |
| LK-MOA-PMU-276398-CW-RFB | Improvements to Farm and Market Access Road at Malayarkattu in Malayarkattu Banana Cluster, Batticaloa District, Eastern Province | 23.49 | 03 months | C 6 or Above in Road Construction | 282,000.00 | 29.05.2023 |
| LK-MOA-PMU-276407-CW-RFB | Improvements to Farm and Market Access Road at Kaluwanchikuddy in Kaluwanchikudy Pomegranate Cluster, Batticaloa District, Eastern Province | 7.98 | 03 months | C 7 or Above in Road Construction | 96,000.00 | 29.05.2023 |

3. Bidders are allowed to quote for the above works with Bid Security amount mentioned above and the validity period up to 29.05.2023. One bidder is allowed to quote only one bid for each contract. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of respective construction for the grade mentioned in the table above with the Construction Industry Development Authority **(CIDA)**.
4. Bidding will be conducted through the National Competitive Bidding (NCB) procedure approved by the World Bank.
5. Qualification requirements are indicated in Section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) of the bidding document.
6. Interested eligible Bidders may obtain further information from the Office of the Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project (T.P No: 0714435036/ Fax No: 065-2059190) and inspect the bidding documents at the same place on any working day **from 9:00 Hrs. to 15:00 Hrs during 23rd January 2023 to 13th February 2023.**
7. Pre-Bid meeting will be held **on 02nd February 2023 at 10.30 am** at the ASM Project Office, Agriculture Quarters Lane, Kallady, Batticaloa.
8. Bid shall be valid up to 01st May 2023.
9. Bid shall be accompanied by a Bid security as per the information given in the Table. The Bid Security should be obtained from any commercial bank recognized by the Central Bank of Sri Lanka.
10. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project,Agriculture Quarters Lane, Kallady, Batticaloa **from 23rd January 2023 to 13th February 2023 from 9:00 hrs to 15:00 hrs** upon payment of a non-refundable fee of **Rs. 5,000.00 for each package**. The method of payment should be by cash.
11. Bids must be delivered to the **Provincial Deputy Project Director, Agriculture Sector Modernization Project,Agriculture Quarters Lane, Kallady, Batticaloa** at or before **15:00 Hrs. on 13th February 2023.** Electronic bidding will not be permitted. Late bids will not be accepted. Bids will be opened in the presence of the bidders' representatives who choose to attend in person at the mentioned address at **15:00 Hrs on 13.02.2023.**
12. Complete bids should be separately forwarded in two copies as the original and the duplicate. The original and the duplicate should be enclosed separately and marked as the 'original' and 'duplicate' respectively in sealed envelopes. Both envelopes enclosed in a sealed single envelope and marked contract number and name of the contract on top left-hand corner of the envelope.

**Chairman,**
**Project Procurement Committee (Minor) Eastern Province**
**Agriculture Sector Modernization Project,**
**Agriculture Quarters Lane, Kallady, Batticaloa.**

Date: 23.01.2023

தினகரன்
விளையாட்டு
sports.tkn@lakehouse.lk
2023 ஜனவரி 23 திங்கட்கிழமை

# இலங்கை கிரிக்கெட்டின் விசாரணை அறிக்கையை சட்டமா அதிபர் ஆய்வு




அவுஸ்திரேலியாவில் கடந்த ஆண்டு நடைபெற்ற டி20 உலகக் கிண்ணப் போட்டியுடன் தொடர்புபட்டு இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கையை ஆய்வு செய்து அது பற்றி தமது நிலைப்பாட்டை விளையாட்டுத் துறை அமைச்சுக்கு அறிவுறுத்துவதாக சட்டமா அதிபர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (20) இடம்பெற்ற விசாரணையில் சட்டமா அதிபர் சார்பில் தோன்றிய ஜனாதிபதி சட்டத்தரணி சுமித் தர்மவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

ஐவர் அடங்கிய விசாரணைக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தை கலைப்பதை தடுக்கும் வகையில் உத்தரவு பிறப்பிக்கும்படி கோரி இலங்கை கிரிக்கெட் நிறுவனத் தலைவர் ஷம்மி டி சில்வா மற்றும் இலங்கை கிரிக்கெட் நிறுவன செயலாளர் மொஹான் டி சில்வா ஆகியோர் மூலம் தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட போது இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு சோஹித ராஜ கருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர் அடங்கிய மேற்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனு மீதான விசாரணையை வரும் பெப்ரவரி 1ஆம் திகதி எடுத்துக்கொள்வதற்கும் உத்தரவிடப்பட்டது.

டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை வீரர்களின் நடத்தை உட்பட விவகாரங்கள் பற்றி விசாரிக்க ஓய்வு பெற்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவின் அறிக்கை விளையாட்டுத் துறை அமைச்சருக்கு தற்போது கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய சுப்பர் லீக்:

# முதல் போட்டிகளில் கண்டி, காலி அணிகளுக்கு இன்னிங்ஸ் வெற்றி





தேசிய சுப்பர் லீக் நான்கு நாள் போட்டியில் முதல் இரு ஆட்டங்களிலும் கண்டி மற்றும் காலி அணிகள் முறையே கொழும்பு மற்றும் தம்புள்ளை அணிகளுக்கு எதிராக இன்னிங்ஸ் வெற்றிபெற்றன.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இந்த இரு போட்டிகளும் மூன்று நாட்களிலேயே முடிவுக்கு வந்தன. இதில் எஸ்.எஸ்.சி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கொழும்பு அணி முதலில் துடுப்பெடுத்தாடி 214 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஓஷத பெர்னாண்டோவின் இரட்டைச் சதத்துடன் கண்டி அணி தனது முதல் இன்னிங்ஸில் 565 ஓட்டங்களை குவித்தது.

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 351 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கொழும்பு அணி 72 ஓட்டங்களுக்கே சுருண்டது.

இடது கை சுழற்பந்து வீச்சாளர் லசித் எம்புல்தெனிய கண்டி அணி சார்பில் இரண்டு இன்னிங்ஸ்களிலும் மொத்தம் 10 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தம்புள்ளை அணி 155 ஓட்டங்களுக்கு சுருண்ட நிலையில் காலி அணி முதல் இன்னிங்ஸில் 339 ஓட்டங்களை பெற்றது. அஞ்சலோ மத்தியூஸ் அதிகபட்சமாக 82 ஓட்டங்களை குவித்தார்.

இந்நிலையில் இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க 184 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த தம்புள்ளை 114 ஓட்டங்களுக்கு சுருண்டது.

# கண்டி தொடர்ந்து வெற்றி




கழகங்களுக்கு இடையிலான நிப்பொன் பெயின்ட் ரக்பி போட்டியில் நடப்புச் சம்பியன் கண்டி விளையாட்டுக் கழகம் தொடர்ச்சியான தனது ஆறாவது வெற்றியை பதிவு செய்து புள்ளிப் பட்டியலில் முதல் இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளது.

கொழும்பு குதிரைப் பந்தய திடல் அரங்கில் சனிக்கிழமை (21) நடைபெற்ற சி.எச் அன்ட் எப்.சி அணிக்கு எதிரான போட்டியில் கண்டி அணி 27–25 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

இதன்போது கண்டி அணி நான்கு ட்ரைகளுடன் புள்ளிகளை அதிகரித்ததோடு எதிரணி மூன்று ட்ரைகளை பெற்றது.

இதேவேளை புள்ளிப்பட்டியலில் கண்டி அணிக்கு கடும் சவாலாக உள்ள ஹவலொக் விளையாட்டுக் கழகம் பொலிஸ் அணிக்கு எதிரான போட்டியில் 19–21 புள்ளிகள் அடிப்படையில் தோல்வியை சந்தித்தது.

ஹவலொக் பார்க் மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஹவலொக் அணி கடைசி வரை போராடியபோதும் அதனால் வெற்றியை உறுதி செய்ய முடியவில்லை.

இந்தியாவிடம் தொடர் தோல்வி:

# ஐ.சி.சி ஒருநாள் தரவரிசையில் முதலிடத்தை இழந்தது நியூசி.



இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் சர்வதேச போட்டியிலும் 8 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்து 3 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரை 0–2 என இழந்த நியூசிலாந்து அணி ஐ.சி.சி ஒருநாள் தரவரிசையில் முதலிடத்தை பறிகொடுத்தது.

இதன்மூலம் இரண்டாவது இடத்தில் இருந்த இங்கிலாந்து அணி முதலிடத்திற்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிரான போட்டிக்கு முன்னர் நியூசிலாந்து அணி 115 தரநிலைப் புள்ளிகளுடன் முதலிடத்திலும் இங்கிலாந்து 113 தரநிலைப் புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் காணப்பட்டன. இந்நிலையில் நியூசிலாந்தின் தரநிலை புள்ளிகள் தற்போது 113ஆக சரிந்துள்ளது.

இந்நிலையில் நியூசிலாந்துடனான முதல் இரு போட்டிகளிலும் வெற்றியீட்டிய இந்திய அணி தரவரிசையில் நான்காவது இடத்தில் இருந்து அவுஸ்திரேலியாவை பிள்தள்ளி மூன்றாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

இந்நிலையில் நியூசிலாந்துக்கு எதிராக நாளை (24) இந்தோரில் நடைபெறும் மூன்றாவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டியிலும் இந்திய அணி வெற்றியீட்டினால் அந்த அணி ஒருநாள் தரவரிசையில் முதலிடத்திற்கு முன்னேறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆனந்த, லைசியம் சம்பியன்





இந்த ஆண்டின் முதல் நீர் விளையாட்டுப் போட்டியான தேசிய வயதுக் குழுக்களின் அஞ்சலோட்ட சம்பியன்சிப் போட்டியில் ஆடவர் பிரிவில் ஆனந்த கல்லூரியும் பெண்கள் பிரிவில் வத்தளை, லைசியம் சர்வதேச பாடசாலையும் முதல் இடம் பெற்றன.

சுகததாச நீச்சல் தடாகத்தில் கடந்த சனிக்கிழமை (21) நடைபெற்ற இந்தப் போட்டியில் ஆனந்த கல்லூரி 158 புள்ளிகளைப் பெற்று சம்பியனானதோடு வத்தளை, லைசியம் 144 புள்ளிகளுடன் சம்பியன் பட்டத்தை வென்றது.

கடந்த ஆண்டு சம்பியன்களான ஆடவர் பிரிவில் புனித ஜோசப் மற்றும் பெண்கள் பிரிவில் விஷாக்கா கல்லூரிகள் இரண்டாவது இடத்தை பிடித்தன.

இதில் லைசியம் வீராங்கனைகள் 6 வயதுக் குழுக்களின் 3 அஞ்சலோட்டங்களில் தங்கம் வென்றதோடு மற்ற எல்லா வயதுப் பிரிவுகளிலும் முதல் 8 இடங்களை பிடித்தனர். மறுபுறம் ஆனந்தக் கல்லூரி 17 மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட மெட்லி மற்றும் பிரீஸ்டைல் அஞ்சலோட்டங்களில் தங்கம் வென்றது.

# சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலிடம் 2.5 மில்லியன் டொலர் பணம் திருட்டு




சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் அதிகாரப்பூர்வ வங்கிக் கணக்கில் இருந்து 2.5 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்பிலான பணம் அடையாளம் தெரியாத நபர்களால் திருடப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் புகாரளித்துள்ளது.

இணைய குற்றத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் டுபாயைத் தளமாகக் கொண்ட ஐ.சி.சி இது பற்றி ஊடகங்களுக்கு கருத்து வெளியிடாதபோதும், இது தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக நம்பகமான வட்டாரத்தை மேற்கோள் காட்டி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஐ.சி.சி, அமெரிக்காவில் உள்ள சட்ட அமுலாக்கல் நிறுவனத்திடம் இந்த சம்பவம் குறித்து புகார் அளித்ததைத் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. இந்த மோசடி எப்படி நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை.

ஐ.சி.சி கணக்கில் இருந்து பணத்தை மாற்றுவதற்கு மோசடி செய்தவர்கள் எந்த வழியில் பணத்தினை மோசடி செய்தார்கள் என்பது இன்னும் தெரியவில்லை. அவர்கள் டுபாயில் உள்ள தலைமை அலுவலகத்தில் யாரையாவது நேரடியாக தொடர்பு கொண்டார்களா அல்லது ஐ.சி.சி விற்பனையாளர் அல்லது ஆலோசகரை குறிவைத்து மிரட்டி அதன் மூலம் பணத்தினை எடுத்தார்களா எனவும் கேள்விகள் எழுந்துள்ளன.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை போன்ற முழு அங்கத்துவ நாட்டுக்கு 2.5 மில்லியன் டொலர் என்பது பெரிய தொகை இல்லை என்றபோதும், ஐ.சி.சியிடமிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒருநாள் அந்தஸ்து கொண்ட ஒரு இணை அங்கத்துவ நாடு பெறும் மானியத்தின் நான்கு மடங்கு இழப்புக்கு இது சமமாகும்.

# 2028 ஒலிம்பிக்: கிரிக்கெட்டை இணைக்க ஐ.சி.சி பரிந்துரை



லொஸ் ஏஞ்சல்ஸில் 2028 ஆம் ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் ஆறு அணிகள் கொண்ட ஆடவர் மற்றும் மகளிர் கிரிக்கெட் போட்டியை நடத்த சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் பரிந்துரை செய்துள்ளது.

லொஸ் ஏஞ்சல்ஸ் ஏற்பாட்டுக் குழு ஒலிம்பிக்கில் சேர்க்கப்படும் புதிய விளையாட்டுகள் தொடர்பில் வரும் மார்ச் மாதம் இறுதி செய்த பின், வரும் ஒக்டோபரில் சர்வதேச ஒலிம்பிக் குழு இது தொடர்பில் இறுதி முடிவை எடுக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தப் பரிந்துரை ஏற்கப்படும் பட்சத்தில், நிர்ணயிக்கப்படும் இறுதித் திகதிக்கு ஆடவர் மற்றும் மகளிர் டி20 தரவரிசையில் முதல் ஆறு இடங்களை பிடிக்கும் அணிகள் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதி பெறும். டி20 வடிவத்திலேயே போட்டிகள் நடத்தப்படும்.

2028 ஒலிம்பிக் போட்டியில் இடம்பெறுவதற்கு கிரிக்கெட்டுடன் பேஸ்போல் அல்லது சொப்ட்போல், கராத்தே, கிக் பொக்சின் உட்பட எட்டு விளையாட்டுகள் போட்டியிடுகின்றன.

ஒலிம்பிக் வரலாற்றில் 1896 ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் உள்ளடக்கப்பட்ட போதும் போட்டியிடுவதற்கு அணிகள் இடம்பெறாததால் அந்த விளையாட்டு இணைக்கப்படவில்லை. எனினும் 1900ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் இடம்பெற்றது. அதில் பிரிட்டன் மற்றும் போட்டியை நடத்தும் பிரான்ஸ் மாத்திரமே போட்டியில் பங்கேற்றதோடு பிரிட்டன் தங்கப் பதக்கத்தை வென்றது.

# நிலவில் கால் பதித்த 2ஆம் நபர் திருமணம்



நிலவில் கால் பதித்த இரண்டாமவரான பஸ் அல்ட்ரின் தனது 93ஆவது பிறந்த நாளில் நான்காவது முறை தனது நீண்ட கால காதலியை திருமணம் புரிந்துள்ளார்.

நீல் ஆம்ஸ்ட்ரோங் முதல் முறை நிலவில் கால் பதித்த 1969 அப்பலோ 11 விண்வெளிப் பயணத்தில் அல்ட்ரினும் இடம்பெற்றதோடு ஆம்ஸ்ட்ரோங்கிற்கு அடுத்து நிலவில் கால் பதித்தார். நிலவில் நடந்த உயிர்வாழும் நான்கு பேரில் ஒருவராகவும் அவர் உள்ளார்.


இரசாயனப் பொறியியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்ற 63 வயது அன்கா பவுரியையே அவர் திருமணம் செய்தார். அவர் அல்ட்ரின் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பிரதித் தலைவராக உள்ளார்.

அல்ட்ரினின் பிறந்த நாளான ஜனவரி 20 ஆம் திகதியே இருவரும் திருமணம் புரிந்தனர். வீட்டை விட்டு ஓடிப்போன வாலிபர்கள் போல உற்சாகமாக இருப்பதாக அல்ட்ரின் குறிப்பிட்டுள்ளார். நீல் ஆம்ஸ்ட்ரோங் நிலவில் கால் வைத்து 19 நிமிடங்கள் கழித்து அல்ட்ரின் அவரை பின்தொடர்ந்தார். 1971 இல் நாசாவில் இருந்து ஓய்வு பெற்ற அல்ட்ரின் 1998இல் விண்வெளி ஆய்வு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஷேர்ஸ் பேஸை நிறுவினார்.

நீல் ஆம்ஸ்ட்ரோங் 2012 இலும், மைக்கேல் கொலின்ஸ் 2021 இலும் மரணித்த பின்னர் நிலவில் காலடி வைத்த முதல் குழுவில் எஞ்சியிருக்கும் ஒரே நபராக பஸ் அல்ட்ரின் உள்ளார்.

## சர்வதேச செய்திகள்

# அமெரிக்க ஜனாதிபதி வீட்டில் அதிரடி சோதனை: ரகசிய ஆவணங்கள் மீட்பு







அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் டெல்வாரில் உள்ள வீட்டில் 13 மணிநேரம் இடம்பெற்ற அதிரடி சோதனையில் அமெரிக்க நீதித் திணைக்கள விசாரணையாளர்கள் மேலும் ஆறு ரகசிய ஆவணங்களை கண்டுபிடித்துள்ளனர்.

இதில் சில ஆவணங்கள் அவர் செனட்டராக இருந்தபோது உள்ளவை என்பதோடு மற்றையவை ஜனாதிபதி பராக் ஒபாமாவின் காலத்தில் துணை ஜனாதிபதியாக செயற்பட்டபோது இருந்த ஆவணங்களாகும்.

இதன்போது கையால் எழுதப்பட்ட தனிப்பட்ட குறிப்புகள் மற்றும் வேறு அவணங்களும் எடுத்துச் செல்லப்பட்டதாக பைடனின் வழக்கறிஞர் பொப் பவுர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு பைடன் மற்றும் அவரது மனைவி இருக்கவில்லை.

துணை ஜனாதிபதியாக இருந்தபோதான பதிவுகள் மற்றும் ரகசிய ஆவணங்கள் குறித்து தனது ஒட்டுமொத்த வீட்டு வளாகத்தையும் சோதனையிட ஜனாதிபதி ஜோ பைடன் நீதித் திணைக்களத்திற்கு அனுமதி அளித்திருந்தார்.

முன்னதாக பைடனின் நிறுவனம், வௌிங்கடன் வீட்டு வாகனத் தரிப்பிடம் மற்றும் வீட்டின் களஞ்சியத்தில் இருந்து ரகசிய ஆவணங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. எனினும் கண்டுபிடிக்கப்பட்ட அந்த ஆவணங்களை உடனடியாக தேசிய காப்பகம் மற்றும் நீதித் திணைக்களத்திடம் கைளித்ததாக பைடன் குறிப்பிட்டிருந்தார். எனினும் அவர் அதனை ஏன் வைத்திருந்தார் என்பது உறுதி செய்யப்படவில்லை.

ஜனாதிபதி பதிவு சட்டத்தின்படி பதவிக் காலம் நிறைவடைந்த பின் வெள்ளை மாளிகை பதிவுகள் பாதுகாப்பாக வைக்க முடியுமான வகையில் தேசிய காப்பகத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ரகசிய ஆவணங்களை கையாண்ட விதம் குறித்து விமர்சனங்கள் எழுந்து வந்த நிலையிலேயே பைடனும் இந்த சர்ச்சையில் சிக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜனவரி மாதம் 23ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.